
மார்ச் 6, மாசி 23 மஹாசிவராத்திரி

FREE ISSUE

February 2008


இலண்டன் தமிழர் தகவல்

London Tamil's Information




Eastham-ல் தமிழர் தகவல் கிடைக்குமிடம்


LAKSHMIS JEWELLERS
Tel : 020 8470 5600

CAPITAL AUTOS LTD
Tel : 020 8470 4789

A1 MONEY TRANSFER
Tel : 020 8503 5446

AYNGARAN
Tel : 020 8470 5600



மாதாந்திர செய்திச் சஞ்சிகை

A monthly information digest

## எங்கள் விளம்பர உறுதுணையாளர்களை ஆதரியுங்கள்


இலண்டனில் தரமான தங்கத்திற்கு

# Lakshmis
JEWELLERS

276 High Street North London E12 6SA UK
Tel : 020 8470 5600 Fax : 020 8470 3448





வெள்ளிக்கிழமைகளில் இறக்குமதி செய்யப்பட்ட
மீன் வகைகள் விற்பனையாகின்றன

# VM CASH & CARRY

282, Lee High Road
London
Tel : 020 8852 3561

கலப்படமற்ற தூய தானியவகைகள்.
புதிது குன்றாத கடல் உணவு வகைகள்.
பச்சை நிலையில் பொலிவுறும் இலங்கை,
இந்திய, தாய்லாந்து மரக்கறி வகைகள்,
கார நறுமண உணவுப் பொருட்கள்.
மதுபான வகைகள் வீடியோச் சுருள்கள்,
தமிழர்களின் பாரம்பரிய பண்டிகைகள்
விழாக்களுக்கான பொருட்கள்
அனைத்திற்கும் நாட வேண்டிய இடம்.

# HAPPY TEX

6 Ealing Road Wembley
Middx HA0 4TL
Tel : 020 8903 0782
Fax : 020 8903 4680

- *Money Transfer*
- *Textiles*
- *Watches*
- *Jewellery*
- *Rice Cookers*
- *Perfume*
- *Wedding Suits*

மாதம்
85 பவுண்
பணம்
செலுத்தி
மே மாதம்
தொடங்க
இருக்கும்
எங்கள்
நகைச்சீட்டில்
கலந்து கொள்ளுங்கள்



# AMBAAL Jewellers



176 Upper Tooting Road
London SW17 7ER
Tel : 020 8672 9955
Fax : 020 8672 7097

784 London Road
Thornton Heath Surrey CR4 6JB
Tel : 020 8689 8293
Fax : 020 8684 0323

உலகின் எப்பாகத்துக்கும் உங்கள் பணம்
பாதுகாப்பாக சென்றடைய
*Eastham* ஸ்ரேசனுக்கு எதிரில்
உடனே எம்மை அழையுங்கள்

# A1 MONEY TRANSFER



7 Station Pride East Ham E6 1JD
**Tel : 0208 503 5446**
**Mob : 07961406289**

தொடர்பு : நிரஞ்சன்

# Anthoorium
*World of Designs*

## Jewellery & Textiles

For your Jewels, Gems, Sarees,
Costumes, Musical Instruments & Gift Items
please visit us...



102, B Burlington Road
New Malden, Surrey KT3 4NT
Tel : 020 8942 8001 Fax : 020 8942 8007
Web : www.anthoorium.co.uk
Email : sales anthoorium.co.uk

*New Mot Station Open !*

**Accident Repair Centre &**
**General Services &**
**Repairs to all Makes and Models**

- *Fully equipped M.O.T. & accident repair centre*
- *Insurance repairs welcome*
- *Recovery Service*
- *Approved insurance repairs*
- *Courtesy vehicle available For most repairs*
- *Professional friendly service and advice*
- *Collection & deliver within the local area*

# CAPITAL AUTOS LTD



51A Milton Avenue East Ham London E6 18G
Tel : 020 8470 4789 Fax : 020 8472 2147
www.capitalauto.com

BMW MERCEDES
VOLKSWAGEN NISSAN

நீங்கள் செல்ல வேண்டிய இடம்

# தமிழர் தகவல் Tamils' Information

திருவள்ளுவர் ஆண்டு 2039
சர்வஜித்து — மாசி

மலர் : 05

இதழ் : 56
பிப்ரவரி 2008

" பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம்
கருமமே கட்டளைக் கல்." – குறள்

## புத்தாண்டு அறிவிப்பு

### போற்றும் வரலாறு

1921ஆம் ஆண்டு சென்னை பச்சையப்பன் கல்லூரியில் தமிழ்க்கடல் மறைமலையடிகளாரின் தலைமையில் கூடிய குழு எடுத்த முடிவுப்படிதான் திருவள்ளுவர் ஆண்டு இன்றும் கணக்கிடப்படுகிறது. இயேசுநாதர் பிறப்பதற்கு 31 ஆண்டுகள் முன் பிறந்தவர் வள்ளுவர் என்பது அக்குழுவின் முடிவு. அதனால்தான் இப்போது நடப்பது திருவள்ளுவர் ஆண்டு 2039 என்று நாம் கூறுகிறோம். அதே குழுதான் தை மாதம் முதல் நாளை தமிழர்களின் புத்தாண்டாக அறிவிக்க வேண்டும் என்று வேண்டுகோள் வைத்தது.

மேலே கூறப்பெற்றுள்ள இரண்டு முடிவுகளையும் தமிழ்நாட்டில் நடைமுறைப்படுத்தியது கலைஞர் தலைமையிலான அரசுதான். திருவள்ளுவர் ஆண்டை அரசு ஏற்றுக் கொள்வதாக 1971ஆம் ஆண்டு அறிவிக்கப்பட்டது. அப்போதும் கலைஞர்தான் முதல்வர். தை முதல் நாளைத் தமிழர் புத்தாண்டு என அறிவிக்கும் சட்டமுன்வடிவம் நடப்பு சட்டமன்றத்தில் வந்துள்ளது. இப்போதும் கலைஞர்தான் முதல்வர்.

புத்தாண்டு அறிவிப்பென்பது, பண்பாட்டு உலகில் ஒரு புதிய மைல்கல் என்றுதான் கூறவேண்டும். சித்திரைதான் புத்தாண்டு என்று ஆண்டுகள் பலவாக எண்ணிக்கொண்டிருக்கும் ஒரு சமூகத்தில், இப்புதிய அறிவிப்பு ஒரு புரட்சிக் குரலாகத்தான் வெளிவந்துள்ளது. இப்போதெல்லாம் தமிழர்கள் உட்பட, உலகின் எல்லா நாடுகளிலும் உள்ள மக்கள், சனவரி முதல் தேதியைப் புத்தாண்டாகக் கொண்டாட தொடங்கிவிட்டனர். வாழ்த்துகளைப் பரிமாறிக் கொள்ள தயங்குவதில்லை. ஓராண்டில் இரண்டு புத்தாண்டா என்று கேட்டால், அது ஆங்கிலப் புத்தாண்டு, இது தமிழ்ப் புத்தாண்டு என்று கூறுகின்றனர். வேடிக்கை என்னவென்றால், அது ஆங்கிலப் புத்தாண்டுமல்ல, இது தமிழ்ப் புத்தாண்டுமல்ல. இயேசுநாதர் டிசம்பர் 25ஆம் தேதி பிறந்தார். அதுதான் கிறிஸ்மஸ். அவர் பிறந்த 8ஆம் நாள் அவருக்குப் பெயர் சூட்டினார்கள். அதுதான் சனவரி 1. எனவே அந்நாள் ஒரு மதத்தோடு தொடர்புடையதே தவிர, புத்தாண்டோடு எந்த தொடர்பும் உடையது அன்று. எனினும் தாங்கள் உலகம் முழுவதும் பெற்றிருந்த ஆட்சி அதிகாரத்தால் அதனை புத்தாண்டாக அவர்கள் ஆக்கிவிட்டனர். அறிந்தோ, அறியாமலோ இந்து கோயில்களிலும் இப்போது அந்த நாளில் அர்ச்சனைகள் நடக்கின்றன.

தமிழ்ப்புத்தாண்டு என்று கருதப்பட்ட சித்திரை முதல் நாளின் கதையோ, இன்னும் வேடிக்கையானது. ஆணுக்கும் ஆணுக்கும் பிறந்த 60 குழந்தைகள்தான் அந்த தமிழ் வருடங்கள் என்று ஒரு புராணக்கதை சொல்லும். அதை நம்பித்தான் நாம் அதனை புத்தாண்டாய் கொண்டாடுகிறோம். தமிழ் வருடங்கள் எனச் சொல்லப்படும் அவற்றுள் ஒன்று கூட தமிழ் பெயர் தாங்கி நிற்கவில்லை. அனைத்தும் வடமொழி பெயர்கள். ஆனால் இப்போது அந்த ஆண்டுகளுக்கான புதிய புதிய அறிவியல் காரணங்களை கண்டுபிடிக்க முயல்கின்றனர். கதிரவனை சுற்றி வர வியாழனுக்கு 12 ஆண்டுகளும், சனிக்கு 30 ஆண்டுகளும் ஆகின்றன. இவ்விரு கோள்களும் 60 ஆண்டுகளுக்கு ஒருமுறைதான் ஓரிடத்தில் சந்திக்கின்றன. அதைக் குறிக்கும் வகையிலேயே 60 சுழற்சி ஆண்டுகள் தமிழ் ஆண்டுகளாக ஆககப்பட்டுள்ளன என்று இப்போது கூறுகின்றனர். இருகோள்கள் ஒருகோட்டில் சந்திப்பதற்கும், நம்முடைய புத்தாண்டு தொடங்குவதற்கும் எந்தத் தொடர்பும் இல்லை.

சிந்துவெளி நாகரீகம் தொட்டு, மண்ணை வணங்குவதே தமிழர்களின் மரபாக இருக்கிறது. நெருப்பை வணங்குவதும், விண் எனப்படும் வெளி அல்லது சூனியத்தைக் கண்டு நம் வாழ்நெறிகளை அமைத்துக்கொள்வதும் நம் மரபன்று. இடையில் வந்தது. விதைத்துக் கொடுக்கும் மண்ணுக்கும், உழைத்துக் கொடுக்கும் மக்களுக்கும் நன்றி செலுத்தும் நாளே நாம் கொண்டாடும் பொங்கல் திருநாள். அறுவடையாகி நெல் வீட்டிற்கு வரும் நாளே, நம் புதுக்கணக்குத் தொடங்கும் நாள். அதனை அடிப்படையாகக் கொண்டு தை முதல் நாளை புத்தாண்டு என்று வழங்குவதே பொருத்தமாகும்.

முகவரி :
41, HADDINGTON ROAD, BROMLEY, KENT BR1 5RG, U.K.

தொலைபேசி :
**020 8480 3320**

Email :
**jothy5@yahoo.co.uk**

வெளியீடு :
திருமுருகன் அறிவகம் இலண்டன்
Thirumurugan Arivagam London

ஆசிரியர் :
அரவிந்தன்
Editor :
Aravindan


கணினி, அச்சுப்பதிப்பு :
கமலா ஆர்ட்ஸ்

Computer Layout :
Kamala Artz

படைப்புகள்
ஆக்கியோரின்
உரிமைகளே

4000 பிரதிகள்

# பாணலிங்கம்



தமிழ்நாட்டில் 284 பாடல்பெற்ற சிவதலங்கள் உள்ளன. அண்மையில் ஒரு கட்டுரையில் படித்தபோது 36,000 கோயில்கள் இருப்பதாக ஒரு செய்தி வந்துள்ளது. காலத்தின் போக்குக்கு ஏற்ப பல வழிபாட்டு முறைகள் இப்போது புதிது புதிதாக வந்துள்ளது. குறிப்பாக சொல்ல வேண்டுமானால் ஐயப்பன் வழிபாடு, சாய்பாபா வழிபாடு, ஆனந்தானந்தமயி வழிபாடு, மேல்மருவத்தூர் வழிபாடு என பல வழிபாட்டு முறைகள் வந்துள்ள போதும் சைவ சமயத்திற்கு உகந்த வழிபாடு சிவ வழிபாடே. நவக்கிரக கோயில்கள் என்று சொல்லி தஞ்சாவூர் பகுதியில் புகழ்பெற்ற நவக்கிரகத்துக்கான கோயில்கள் இருந்தாலும்அந்த கோயில்களின் மூலவர் சிவனே.

சைவ சமய மக்கள் இதனை நன்கு சிந்தித்து உணர வேண்டிய நிலையில் இப்போது உள்ளார்கள். சிவ வழிபாட்டுக்கு ஏற்ற சிவன், தான்தோன்றி லிங்கங்களாக இருப்பது விசேடமான ஒன்று. அண்மையில் லண்டனில் நாங்கள் எந்த கோயிலுக்குப் போனாலும் மூலவராக சிவனை வைத்து வழிபடுகிற வாய்ப்பு கிடைக்கவில்லை. குறிப்பாக முத்துமாரியம்மன் கோயிலாக இருந்தால் என்ன, துர்க்கையம்மன் கோயிலாக இருந்தால் என்ன, பிள்ளையார் கோயிலாக இருந்தால் என்ன, சிவனைத்தான் முதன்மை செய்வமாக வழிபட வேண்டும். ஆனால் லண்டன் நிலையோ அப்படி இல்லை. கோயில்கள் அமைப்பதிலும் பல வழிமுறைகள் உண்டு. முறையாக கருங்கல்லினால் ஆன மூலவரை நிலத்தில் வைத்து வழிபட வேண்டியது அவசியம். இந்த வகையில் கூட லண்டனில் முறையாக கோயில்கள் அமையவில்லை என்பது கவலைக்குரியது. பாணலிங்கம் நர்மதா நதியில் தானாக உற்பத்தியாகிறது என்ற செய்தி பலருக்கு தெரியாமல் இருக்கலாம். தானாக உருவான பாணலிங்கத்துக்கு அதற்கேற்ற ஆவுடையார் அமைத்து சிவவழிபாடு செய்வதுதான் சிறப்பான முறை. இந்த வகையில் லண்டனில் எந்த கோயிலும் அமையவில்லை என்பது எனது கருத்தாகும்.

நர்மதா நதிக்கரையில் எடுத்த பாணலிங்கமும் அதற்கேற்ற ஆவுடையாரும் நல்ல முறையில் செய்வித்து லண்டனுக்கு கொண்டு வந்து வைத்துள்ளோம். சிவனை மூலஸ்தானத்தில் வைத்து முறையாக வழிபட விருப்பம் உள்ளவர்கள் யாராவது இருந்தால் அவர்களுக்கு அன்பளிப்பாக கொடுக்க விரும்புகிறோம்.

பதிப்பாசிரியர்



January 2008
தமிழர் தகவல்
London Tamil's Information

# இது விளம்பரம் அல்ல!

## சர்க்கரை நோய் [ டயபடிஸ்] உள்ளவர்களுக்கு ஒரு செய்தி:

அமிர்தம் டயாரைஸ் என்ற பெயரில் என்விரோ ஈகோ சிஸ்டம்ஸ் **(Enviro Eco Systems)** என்ற நிறுவனத்தினர், மூலிகைகள் கலந்த அரிசியை, விற்பனை செய்து வருகிறார்கள். இது நமது பார்வைக்கு வந்தது. நமக்கு தெரிந்தவர்களில், டயபடிஸ் உள்ளவர்கள் சுமார் ஆறு பேருக்கு இதை முயற்சி செய்து பார்க்கச் சொன்னோம். அவர்களுக்கு எல்லாம் ஒரே நேரத்தில் நல்ல பலன் தெரிந்திருக்கிறது. இதை அவர்கள் தொடர்ந்து பயன்படுத்தி வருகிறார்கள். பக்க விளைவுகள் இல்லை.

இந்த அரிசியை தண்ணீரில் சுமார் 15 நிமிடங்கள் ஊறவைத்து அந்தத் தண்ணீரைக் கொட்டி விடாமல், அப்படியே அதே தண்ணீரில் அதை சமைத்து சாப்பிட வேண்டும். சாம்பார், ரசம், பொறியல் என்ற எதை வேண்டுமானாலும் அந்த சாதத்துடன் கலந்து சாப்பிடலாம்.

தினம் இரண்டு வேளைகள் இதை சாப்பிட்டு வந்தால், ஒரு வாரத்தில் சர்க்கரையின் அளவு வெகுவாகக் குறைகிறது. உட்கொண்டு வரும் மருந்துகளை நிறுத்தக் கூடாது. ஒரு வாரம் அல்லது பத்து தினங்கள் கழித்து, டாக்டரிடம் ஆலோசனையைப் பெற்று, உட்கொள்கிற மருந்துகளின் அளவை அல்லது இன்சுலின் அளவை குறைக்கலாம்.

சர்க்கரை வியாதியுள்ளவர்கள், டாக்டரிடம் கலந்தாலோசித்து , இதை பயன்படுத்தி பார்க்கலாம். பலன் இருக்கிறது.

**Euro** விற்பனையாளர்கள்
**Vaani Cash & Carry**
**Tel : 0208 668 7648**




## நீரிழிவு நோயிலிருந்து விடுதலை:

**உபயோகத்திற்கான குறிப்புகள்**

1. அமிர்தம் டயாரைஸ்$^{NH}$ முன்னதாகவே சுத்தம் செய்யப்பட்ட அரிசி. ஆகவே இதை சுத்தப்படுத்த வேண்டும் அல்லது கழுவ வேண்டும் என்ற அவசியம் இல்லை.

2. அரிசியை பிரஷர் குக்கரில் வேகவைத்து பின் உங்களுக்கு பிடித்தமான பதார்த்தங்களுடன் சாப்பிடுங்கள்.

**செயல்புரியும் விதம்:** அமிர்தம் டயாரைஸ்$^{NH}$ நீரிழிவு நோய்க்கு சரியான தீர்வு மட்டுமின்றி, பாதுகாப்பானதும் கூட. இது நீரிழிவு நோய்க்கு பாதுகாப்பான மற்றும் சக்தி வாய்ந்த பொன்னி ரக புழுங்கல் அரிசியுடன் நீரிழிவு நோயை குணப்படுத்தும் ஏழு மூலிகைகள் கலக்கப்பட்டு தயாரிக்கப்படுகிறது. அமிர்தம் டயாரைசில் உள்ள ஆக்டிவ் மூலிகை உட்பொருட்கள் இரத்தத்தில் உள்ள சர்க்கரை அளவை குறைப்பதன் மூலம் உடலில் கார்போஹைட்ரேட் நிலையை சீர்படுத்துகிறது.

**குறிப்பு** : அமிர்தம் டயாரைஸ்$^{NH}$ இரத்த சர்க்கரை அளவுகளில் முதலில் சில ஏற்றத் தாழ்வுகளை ஏற்படுத்தலாம். இதை 5 நாட்கள் தொடர்ச்சியாக உட்கொண்டால் இரத்த சர்க்கரை அளவு சீராகும். அமிர்தம் டயாரைஸ்$^{NH}$ஐ சாப்பிடும் முதல் வாரத்தில் நீரிழிவு நோய்க்காக நீங்கள் சாப்பிடும் வழக்கமான மருந்துகளை நிறுத்தாதீர்கள் அல்லது குறைக்காதீர்கள்.

# ஐந்தாவது வருடத்தை நோக்கி
# தமிழர் தகவலின் சாதனை

தமிழர் தகவல் தமது ஐந்தாவது வருடத்தை
நோக்கி சென்று கொண்டிருக்கிறது.
வரும் ஆனி மாதம் 60ஆவது இதழ்.
இதனை ஒரு வணிக இதழாக அதிக பக்கங்களுடன்
வெளியிட தீர்மானித்துள்ளோம். லண்டனில் உள்ள
பிரபல வியாபார தலங்களின் விளம்பரங்களை
வண்ணப் பக்கமாக வெளியிட மிகவும் மலிந்த
கட்டணத்தில் ஒரு வண்ணப்பக்கத்துக்கு
£ 100 மட்டுமே. அரைப்பக்கம்
£ 50 மட்டுமே. அதற்கு குறைந்த விளம்பரங்கள் இல்லை.
எமக்கு முதலில் கிடைக்கும்
50 விளம்பரங்களுக்கு
முன்னுரிமை கொடுக்கப்படும்.


உங்களுக்குத் தேவையான சகல விதமான
மளிகைப் பொருட்கள், இலங்கையிலும்,
இந்தியாவிலும் இருந்து இறக்குமதி செய்யப்பட்டம
உணவுப்பொருட்கள், கடல் உணவு வகைகள், மரக்கறி வகைகள்,
பழ வகைகள், மேல்நாட்டு குடிவகைகளுடன் இலங்கை பியர்
வகைகளையும் சகாய விலையில் பெற்றுக்கொள்ள
ஒரே இடம். ஆடியோ, வீடியோ,
சீ.டி, வி.சீ.டி ஆகியவற்றை விற்பனைக்கும்
வாடகைக்கும் பெற்றுக்கொள்ளலாம்.

**CHANDRA**
Super Market &
Off Licence
**COST CUTTER**

Tel : 020 8333 8680
209 - 211 Bromley Road
Catford
London SE6 2PG

லண்டனில் தரமான தங்கத்துக்கு தாரணி ஜுவல்லர்ஸ் – வெம்பிளி


AYNGARAN
International
AYNGARAN
AYNGARAN
இப்போது
திரையரங்குகளில்
பீமா
Ayngaran Video - Tooting
367 High Street North
East Ham
London E12 6PG
UNITED KINGDOM
Tel : 00 44 (0) 208 471 3111
00 44 (0) 208 471 3133
Unit 19, Riverside Business Park
Lyon Road, Wimbledn
London SW19 2RL
UNITED KINGDOM
Tel : 00 44 (0) 208 543 4477
Fax : 00 44 (0) 208 543 4466
Email : sales@ayngaran.com
30 High Street, Collierswood
London SW 19 2AB
UNITED KINGDOM
Tel : 00 44 (0) 208 540 1500
Fax : 00 44 (0) 208 543 8400
Email : shop@ayngaran.com
For latest
high quality original
Tamil, Telugu
Malayalam
DVD's & Audio CD's

உறவின் உந்துதலில்
படுக்கை சுகம் தர
மற்றவை மறந்து
நெருங்கிக் கொண்டேன்

கட்டில் வரைக்கும் ஆதிக்கம் கொண்டு
பிணமாய் மாறிக் காத்திருந்தேன்
எனக்கான நிமிடங்களுக்காக

தினமும் அது வருவதாயில்லை

முடிவுகள் எடுத்து விலகிய போதும்
மீண்டும் மீண்டும்
பிணமாய்ப் போனேன்

திருப்ப முடியாதபடி கழுத்தில் கனம்
கொஞ்சம் கீழே
தேக்கிய உணர்வோடு
மங்கலான வெளிச்சத்தின் கீற்று

பிரகாசமான உதடுகளின்
வெடிப்பை மறைக்கும்
சாயங்கள்
விழிகளின் குறும்புகளை
இரசிக்க முடியாமல்
சிதறிய கருமை

சுவாதீனமான சேர்வையாய் உடல்

மார்பகங்கள் பால் உறுப்புகள்
இவற்றை மூடி மறைத்து
அடக்கி
சட்டம் ஒழுங்கு எனும் சூழல்

ஒரு ஆன்மாவின் துடிப்பும்
தேவையும்
உணரப்படாமலே முடிகிறது.

-தான்யா



தமிழ்நாட்டுக்குச் சென்றிருந்த சிறீரங்கனுடன்
பிரபல பாடகி ஜானகி அம்மாள்

கரம்பன் தெற்கு

## ச. நிக்கிலஸ் அவர்கள்



நினைவில் வாழும் நிக்கிலஸ் அவர்களின்
மூன்றாவது நினைவு தினம் (4.02.2008)
-மனைவி, மக்கள், பேரக்குழந்தைகள்

## புறங்கூறாமை



மாதமிரு திருக்குறள்
கற்போம்

***அறன்நோக்கி ஆற்றுங்கொல் வையன் புறன்நோக்கிப்***
***புன்சொல் உரைப்பான் பொறை*** (குறள் : 189)

ஒருவர் நேரில் இல்லாததைக் கண்டு பழிச் சொல் கூறுகின்றவனின் உடல் பாரத்தை, இவனையும் சுமப்பதே எனக்கு அறம் எனக் கருதி நிலம் சுமக்கின்றதோ?

***ஏதிலார் குற்றம்போல் தங்குற்றம் காண்கிற்பின்***
***தீதுண்டோ மன்னும் உயிர்க்கு*** (குறள் :190)

பிறர் குற்றத்தைக் காண்பதுபோல் தம் குற்றத்தையும் காண வல்லாராயின், நிலைபெற்ற உயிர் வாழ்க்கைக்குத் துன்பம் உண்டோ?

வெம்பிளியில் கோலாகல திறப்பு விழா
விரைவில் எதிர்பாருங்கள்....

# BEST FOOD

11-13 Ealing Road Wembley
Middlesex HAO 4AA

## திறப்பு விழாவை முன்னிட்டு பல பொருட்கள்
## அதிரடியான குறைந்த விலையில்





ரமணிச் சந்திரனின்
புத்தகங்கள்
£1.75

மாதாந்திர புத்தகங்கள் எல்லாம்
30 பென்ஸ் மட்டும்
(சக்தி விகடன், மங்கையர் மலர்,
பக்தி, கோபுர தரிசனம், அவள் விகடன்)


**VAANI**
தயாரிப்புகள் எங்கள் நேரடி
விற்பனையில்

நாங்களே இறக்குமதி செய்து நேரடியாக உங்களுக்கு தருகிறோம்.

உங்கள் சகல தேவைகளையும் பூர்த்தி செய்யும் விதமாக

# புது வாழ்வுப் பூங்கா

## வவுனியா




அண்மையில் ஒகன் வவுனியா நிறுவனத் தலைவர் வெ. சுப்பிரமணியம் லண்டனுக்கு வந்திருந்தார். மன வளர்ச்சி குன்றியப் பிள்ளைகளுக்கான பயிற்சி நிலையம் ஒன்றினை அவர் நடத்தி வருகிறார். லண்டனில் அந்நிலையத்துக்கு விளம்பரம் இல்லாமல் உதவி வந்த பல முகங்கள் அவர் வருகையின் பின் வெளிச்சத்துக்கு வந்தன. சிறீகாந்தலிங்கம் அமைப்பாளராகவும், விபுலானந்தன் தலைவராகவும், ஈஸ்வரகுமார் செயலாளராகவும், சற்குணசீலன் பொருளாளராகவும் கடமையாற்றுகிறார்கள்.

வவுனியாவில் உள்ள இந்த நிறுவனத்துக்கு புதுவாழ்வுப் பூங்கா என்று பெயர் சூட்டியுள்ளார்கள். இதில் மனவளர்ச்சி குன்றிய 52 குழந்தைகளை பராமரித்து வருகிறார்கள். இதை தொடர்ந்தும் நல்ல முறையில் பராமரிக்க லண்டன் வாழ் மக்களின் உதவி தேவைப்படுகிறது. இயன்றவர்கள், மனமுள்ளவர்கள் தகுதியான இந்த நிறுவனத்துக்கு தங்கள் நன்கொடைகளை அனுப்பி வைக்கலாம்.

ஐரோப்பிய, மத்திய கிழக்கு நாடுகளில்
24 மணி நேரமும் ஒளிரும் தமிழ் தொலைக்காட்சி

செய்திகள் காலைக்கதிர் சின்னத்திரை தொடர்கள் அரசியல் ஆய்வு விவரணங்கள்
மகளிர் – சிறுவர் நிகழ்ச்சிகள் நீங்களும் நாங்களும் இணையும் பல நிகழ்ச்சிகள்
இசை நடன நிகழ்ச்சிகள் புத்தம் புதிய திரைப்படங்கள்

DEEPAM TV
EAST WEST BROADCAST LTD
UNIT 1, EBURY BUSINESS CENTRE
161-163, STAINES ROAD
HOUNSLOW, MIDDLESEX TW3 3JB, U.K.

Tel : +44 (0) 208 8146565
Fax : +44 (0) 208 8141144
Email : info@deepamtv.tv
Web : www.deepamtv.tv

# நிதானம் தவறலாமா?

## தென்கச்சி சுவாமிநாதன்

ஓர் இளைஞன் படித்து முடித்தான். வேலை தேடினான். பல நிறுவனங்களுக்கு விண்ணப்பித்தான். ஓர் இடத்திலிருந்து நேர் காணலுக்கு அழைப்பு வந்தது. அதற்கு தான் படித்துப் பெற்ற சான்றிதழ்களையெல்லாம் எடுத்துக் கொண்டு போனான்.

அவன் முதல் வகுப்பில் வெற்றி பெற்றிருந்தான். எல்லாப் பாடங்களிலும் அதிகமான மதிப்பெண்கள். எனவே மிகுந்த நம்பிக்கையோடு வாசலில் காத்திருந்தான்.

ரொம்ப நேரம் கழித்து உள்ளேயிருந்து அழைப்பு வந்தது. எழுந்து போனான். எதிரே போடப்பட்டிருந்த நாற்காலியில் உட்கார்ந்தான். உள்ளே உட்கார்ந்திருந்தவர்கள் மாறி மாறிக் கேள்வி கேட்டார்கள். எல்லாக் கேள்விகளுக்கும் உடனுக்குடன் சளைக்காமல் பதில் சொன்னான்.

சரி... நீ போகலாம்! என்றார்கள். புறப்பட்டு வந்துவிட்டான்.

நம்பிக்கையோடு காத்திருந்தான். சில நாட்களுக்குப் பிறகு அந்த நிறுவனத்திலிருந்து ஒரு கடிதம் வந்தது. ஆவலோடு பிரித்துப் பார்த்தான்.

அந்தக் கடிதத்தில் இப்படியிருந்தன வாசகங்கள்:

எங்களுடைய நிறுவனத்தில் உங்களுக்கு வேலை கொடுக்க இயலாமைக்கு வருந்துகிறோம். படிப்பறிவு தங்களிடம் நிறையவே இருந்தது. பாராட்டுகிறோம். ஆனாலும் இந்தப் பதவிக்கு முக்கியமாகத் தேவைப்படுகிற பொறுமை, நிதானம் ஆகிய இரு தகுதிகளைத் தாங்கள் இன்னும் வளர்த்துக் கொள்ள வேண்டும் என்று எதிர்பார்க்கிறோம். நல்வாழ்த்துக்கள்.

இளைஞனுக்கோ பெரிய ஏமாற்றம்.

அந்த இளைஞன் உடனே இந்தக் கடிதத்தை எடுத்துக் கொண்டு அந்த அலுவலகத்துக்கே ஓடினான்.

எப்படிச் சொல்கிறீர்கள். என்னிடம் பொறுமையும் நிதானமும் இல்லை என்று? கேட்டான் கோபத்துடன்.

முதலில் உட்காருங்கள். பிறகு சொல்கிறேன் என்றார் அங்கிருந்த அதிகாரி.

உட்கார்ந்தான்.

தம்பி! இரண்டு செயல்கள் மூலம் நீங்கள் அதை வெளிப்படுத்தினீர்கள். அன்றைக்கு நடந்த நேர் காணலின்போது அதை நாங்கள் கவனித்தோம்.

ஒன்று.... நாங்கள் கேள்வி கேட்டு முடிப்பதற்குள் நீங்கள் பதில் சொல்ல ஆரம்பித்து விடுகிறீர்கள் ! இது உங்கள் அவசர புத்தியைக் காட்டிக் கொடுத்தது.

இரண்டாவதாக ... நீங்கள் அமர்ந்திருந்த விதம். நாற்காலியின் விளிம்பில் உட்கார்ந்திருந்தீர்கள். நன்றாகச் சாய்ந்து உட்காரவில்லை. இது உங்கள் பதற்றத்தைக் காட்டிக் கொடுத்தது. இந்தப் பதற்றமும் அவசரமும் இந்தப் பதவிக்கு இருக்கக்கூடாத இரண்டு குணங்கள்.

இளைஞன் புரிந்து கொண்டான். நன்றி கூறிவிட்டு எழுந்து வந்தான். பொறுமையையும் நிதானத்தையும் வளர்த்துக் கொண்டான். அடுத்ததாக வேறு ஒரு நிறுவனத்தில் நடந்த நேர்காணலில் வெற்றி அவனைத் தேடி வந்தது.

வேலை வாய்ப்புக்கு மட்டும் அல்ல... வாழ்க்கைக்கும் இந்த இரண்டு குணங்களும் அவசியம் தேவை. வேடிக்கையாகக் கதை ஒன்று சொல்வார்கள்.

ஒரு காலத்தில் இரண்டு அரசர்கள் இருந்தார்கள். அந்த இருவருக்கும் பக்கத்துப் பக்கத்து நாடுகள்தான்... என்றாலும் நண்பர்கள். அவர் பிறந்த நாளுக்கு இவர் பரிசுப் பொருள்கள் அனுப்புவார். இவருடைய பிறந்த நாளுக்கு அவர் பரிசுப் பொருள்கள் அனுப்புவார். ஒருவருக்கொருவர் வாழ்த்துக்களைப் பரிமாறிக் கொள்வார்கள். அந்த அளவுக்கு நண்பர்கள்.

ஒரு சமயம்.. ஒரு மன்னர் இன்னொரு மன்னருக்கு ஒரு கடிதம் அனுப்பினார்.

நண்பரே ! எனக்கு இப்போது கறுப்பு நிற வால் கொண்ட வெள்ளை நிறக் குதிரை ஒன்று தேவைப்படுகிறது.... ! உடனடியாக அனுப்பி

வையுங்கள்... இல்லையேல்... என்று கடிதத்தை முடிக்காமல் விட்டிருந்தார்.

இந்தக் கடிதம் கண்டதும் உடனடியாக அந்த மன்னரும், ஒரு பதில் அனுப்பியிருந்தார் எப்படித் தெரியுமா ?

என்னிடம் கறுப்பு நிற வால் கொண்ட வெள்ளை நிறக் குதிரையும் இல்லை... வேறு நிறக் குதிரையும்... இல்லை .. அப்படி இருந்தாலும்... இதுவும் முடிக்காமல் விடப்பட்டிருந்தது.

இந்தக் கடிதத்தைக் கண்டதும் முதல் அரசருக்குக் கோபம் வந்துவிட்டது.

இருந்தாலும் அனுப்ப மாட்டேன்... என்றா பதில் அனுப்பகிறாய்... உன்னை என்ன செய்கிறேன் பார். யார் அங்கே... என்று கையைத் தட்டினார்.

தளபதிகள் வந்து நின்றார்கள்.

உடனடியாக அந்த அரசன் மீது போர் தொடுக்க வேண்டும். அதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யுங்கள் என்று உத்தரவிட்டார்.

போர் மூண்டது. நீண்ட காலம் அது நடந்தது. ஒரு கட்டத்தில் இருவரும் சந்திக்க நேர்ந்தது.

இது நியாயமா? என்றார் அவர்களில் ஒருவர்.

எது நியாயமா? என்றார் மற்றவர்.

கறுப்பு நிற வால் கொண்ட வெள்ளை நிறக் குதிரை அனுப்புங்கள். இல்லையேல் உன்னோடு சண்டைக்கு வருவேன் என்கிற அர்த்தத்தில் கடிதத்தை முடிக்காமல் நீங்கள் அனுப்பலாமா ?

ஐயையோ... நீங்கள் அப்படியா அர்த்தம் பண்ணிக் கொண்டீர்கள்... ? இல்லையேல் வேறு எந்தக் குதிரையாக இருந்தாலும் பரவாயில்லை... அனுப்பி வையுங்கள் என்ற அர்த்தத்தில் அல்லவா நான் எழுதினேன்.

ஓ.... அப்படியா?

அப்படித்தான். அது சரி... நீங்கள் மட்டும்... இருந்தாலும் அனுப்பி வைக்க மாட்டேன் என்கிற அர்த்தத்தில் அனுப்பலாமா ?

ஐயையோ ... அப்படியா நீங்கள் அர்த்தம் பண்ணிக் கொண்டீர்கள் ? இருந்தாலும் உங்களுக்கு அனுப்பாமல் வேறு யாருக்கு அனுப்பி வைக்கப்போகிறேன்.. என்கிற அர்த்தத்தில் அல்லவா எழுதினேன்!

இளைஞர்களே !

இந்தக் கதையில் இருந்து என்ன தெரிகிறது?

வாழ்க்கையில் எதிர்ப்படுகிற சந்தர்ப்பங்களை அவசரப்படாமல் சந்தியுங்கள். பதற்றப்படாமல் சந்தியுங்கள்.

வாய்ப்புகளைத் தவறாக அர்த்தப்படுத்திக் கொள்ளாதீர்கள் ! வழி தவறிப் போய் விடாதீர்கள்.

சிந்தியுங்கள்...


அதன் பிறகு சிறகை விரியுங்கள் !

## தகவல்கள் 100 உங்களுக்காக

எட்டயபுரத்துல அப்ப நான் சின்னப்பொண்ணுதான்... திருநெல்வேலி சபான்னு ஒரு சபாவுல – பாரதியாரோட பாட்டையெல்லாம் பாடிட்டிருந்தேன். எதிர்த்தாப்பல ஒரு அம்மா உட்கார்ந்து, கண்கலங்க என்னையே பார்த்துட்டிருந்தார். தீராத விளையாட்டுப் பிள்ளை, சின்னஞ்சிறு கிளியே, தூண்டில் புழுவினைப்போல்... இதையெல்லாம் நான் பாடறப்ப, அந்த அம்மாவாலே அழுகையைக் கட்டுப்படுத்திக்க முடியலே. எனக்கு, யார் அதுன்னு தெரியலே.. கச்சேரி முடிஞ்சதும் ஓடி வந்து என்னைக் கட்டிண்டு, இத்தனை அற்புதமாப் பாடறியே ... இதைக் கேட்க அவரில்லையேன்னு அழுதார். அப்புறம்தான் பக்கத்துல இருந்தவங்க சொன்னாங்க, அந்த அம்மாள்தான் பாரதியாரோட மனைவி செல்லாம்மாள்... என்று


– கர்நாடக இசைப்பாடகி
திருமதி பட்டம்மாளின் பேட்டியிலிருந்து

### தகவல் 1



அற்புதக் கீர்த்தி வேண்டின்
ஆனந்த வாழ்க்கை வேண்டின்
நற்பொருள் குவிதல் வேண்டின்
நலமெலாம் பெருக வேண்டின்
கற்பகமூர்த்தி தெய்வக்
களஞ்சியத் திருக்கை சென்று
பொற்பதம் பணிந்து பாரீர்
பொய்யிலை கண்ட உண்மை.

- கவிஞர் கண்ணதாசன்



# இரத்த சோகையைக் குணப்படுத்தும் ஆப்பிள் பழம்

மூளைக்கு வலுவையும், உடலுக்கு சக்தியையும் அளிக்கும் மிக முக்கியமான நான்கு பழங்களுள் முதலில் இடம்பெறுவது ஆப்பிள் பழம்தான் (மற்ற பழங்கள், திராட்சை, வாழைப்பழம், அத்திப்பழம்) காரணம், இப்பழத்தின் நன்கு அமைந்துள்ள பாஸ்பரஸ்தான்.

ஆரஞ்சுப் பழத்தைப் போல, ஆப்பிளைச் சாப்பிட்டதும் பழச்சர்க்கரை உடனடியாக இரத்தத்தால் உட்கிரகிக்கப்படுகிறது. பழச்சர்க்கரையுடன் கலந்துள்ள பாஸ்பரஸ் மூளையைப் புதுப்பிக்கிறது. அதனால் மூளையைப் பயன்படுத்தி வேலை செய்யும் சிந்தனையாளர்கள், எழுத்தாளர்கள் போன்றவர்கள் இப்பழத்தைச் சாப்பிட்டால் மிகுந்த உற்சாகத்துடன் வேலை செய்ய முடியும்.

தினமும் ஓர் ஆப்பிள் சாப்பிட்டால் மருத்துவரிடம் செல்ல வேண்டிய அவசியமே இல்லை என்று ஒரு பழமொழி உண்டு. அது உண்மைதான். நோய்க்கிருமிகள் தொற்றிவிடாமல் உடலை எதிர்ப்புச்சக்தியுடன் ஆரோக்கியமாய் வைத்திருக்கிறது, ஆப்பிள். 100 கிராம் ஆப்பிளில் 59 கலோரி சக்தி, புரதம் 0.2 சதவிகிதம், மாவுச்சத்து 14 சதவிகிதம் உள்ளன. கண்பார்வைத் தெளிவிற்குப் பயன்படும் வைட்டமின் ஏ ஆண்மைக்குறைவைத் தடுக்கும் வைட்டமின் ஈ, வைட்டமின் பி, கால்சியம் பாஸ்பரஸ், இரும்பு போன்ற சத்துக்களும் உள்ளன. ஆப்பிள் தோலின் உட்பகுதியில் வைட்டமின் சி உள்ளது. அத்துடன் ஆப்பிள் சதைப்பகுதியில் உள்ளதை விட ஐந்து மடங்கு அதிகமாக வைட்டமின் ஏ தோலில் அடங்கியுள்ளது. எனவே, அடிக்கடி இராசாயன மருந்துகள் ஆப்பிள் மரத்திற்கு தெளிக்கப்படும் என்பதை உணர்ந்து ஆப்பிளை முதலில் நன்றாக கழுவ வேண்டும். அதன் பிறகே தோலுடன் சாப்பிட வேண்டும்.தோலைச் சீவாமல் அப்படியே கடித்துச் சாப்பிட்டால் பழத்திலிருந்து இறங்கும் அமிலங்கள் பற்களிலும், ஈறுகளிலும் உள்ள கோளாறுகளையும் குணப்படுத்தி நன்றாகச் சுத்தப்படுத்திவிடும். பழத்தைத் துண்டு துண்டாக வெட்டிப் பயன்படுத்தலாம்.

உடலையும், மூளையையும் புதுப்பித்துத் தரும் மருத்துவக் குணங்கள் கொண்ட பழம் என்பதால் கடவுள்களின் உணவு என்று இப்பழத்தைச் சிறப்பித்துக் கூறுகின்றனர்.

ஆப்பிளில் சிறிதளவு துத்தநாகம் உள்ளது. அதனால், ஆப்பிள் எல்லாவிதமான நோய்களையும் கட்டுப்படுத்தி உடலை ஆரோக்கியமாய் விளங்கச் செய்கிறது.

இப்பழத்தின் பெக்டின் என்னும் நார்ச்சத்து இருக்கிறது. இது ஒரு விதமான அமிலத்தைச் சுரந்து குடலில் உள்ள கெட்டுப்போன பொருட்கள், கெடுதியான பொருட்கள் போன்றவற்றை எல்லாம் உறிஞ்சிக் கழிவு பொருள்களாக வெளியே தள்ளிவிடுகிறது. இதனால் குடலுடன் இரத்தமும் சுத்தமாகிறது.

இப்பழத்தில் உள்ள மாலிக் அமிலம் குடல்கள், கல்லீரல், மூளை போன்றவை எப்போதும் நலம் குன்றாமல் நன்கு செயல்படப் பயன்படுகிறது.

காலையில் வெறும் வயிற்றில் ஆப்பிள் சாப்பிடக்கூடாது. அது செரிப்பதற்கு நேரமாகும். உணவுக்கு பிறகுதான் ஆப்பிள் சாப்பிட வேண்டும்.

ஆப்பிள் மலச்சிக்கலைத் தீர்க்கும். உடலுக்கு ஊட்டச் சத்து வழங்கும். எளிதில் ஜீரணமாகும். எனவே ஆப்பிளை பழ ரசமாக தயாரித்து அருந்துவது மேலும் சிறப்பாகும். இதில் கலோரி குறைவு, ஆனால் புரதம் தரமானதாகவும் போதுமான அளவிலும் இருப்பதால் உடலுக்கு சக்தியைத் தருகிறது.

இரத்த சோகையைக் குணப்படுத்த ஆர்சானிக் இரும்புச் சத்தும் பாஸ்பரசும் தேவை. ஆப்பிளில் இவை அமைந்திருப்பதால், ஒரு கிலோ எடையுள்ள ஆப்பிள் பழங்களைத் தினசரி பிழிந்து சாறாகப் பிழிந்து அருந்தினால் போதும். உணவு சாப்பிடுவதற்கு ஒரு மணி நேரத்திற்கு முன்போ இரவில் படுக்கப் போவதற்கு அரைமணி நேரத்திற்கு முன்போ இந்த முறையில் ஆப்பிள் சாறு அருந்த வேண்டும். ●

# பச்சை வயல் கனவு

அத்தியாயம் 03

தொடர்கதை

நாரிப்பிட்டிக்குளம் அந்த ஆவணி மாதத்தில் பெருமளவு வற்றிப் போய்க் கிடந்தது. நடுவே சிறிதளவு தண்ணீரே இருந்தது. வடக்குக் கரையில் நாலைந்து புளியமரங்கள் கிளை பரப்பி நின்றன. தெற்குப் பக்கம் தரவை வெளி பரந்துகிடந்தது. அந்தப் பச்சைவெளியில் மாடுகள் தம்பாட்டில் மேய்ந்து கொண்டிருந்தன. மேற்குப் பக்கம் கூடல் கூடலாய் பனை மரங்கள், இந்த ஆவணி புரட்டாதியில் பனம் பழங்களின் வாசனை எந்நேரமும் காற்றில் மிதந்து கொண்டிருக்கும். கிழக்குப் பக்கம் அவர்களின் கிராமம். கிராமம் தாண்டி தோட்டங்கள், வயல் வெளிகள்.

சூரியன் மேற்கில் சிவப்பாய் விழுந்து கொண்டிருந்த நேரம். தரவைவெளியில் கொக்குகள் மாடுகளுக்கு மேலாகப் பறந்து கொண்டிருந்த பொழுது.

குளத்தில் மாடுகளை இறக்கித் தண்ணீர் குடிக்க விட்டுக் கொண்டிருந்தான் சிவம். அவனுக்கு அருமையான சிவலையும் வெள்ளையும்.

அடுத்த வாரம் நவக்கிரியில் நடக்கப் போகின்ற மாட்டுச்சவாரியில் கலந்து கொள்ள தயார் நிலையில் அவை இருந்தன. பச்சை அரிசி மாவும், உழுந்தும், தவிடும் கொடுத்து பராமரிக்கப்பட்டு இரண்டும் கொழு கொழுவென்றிருந்தன.

ஆறு மாதத்திற்கு முன்னால் புன்னாலக் கட்டுவன் ஈவினையில் நடந்த மாட்டுச் சவாரிப் போட்டியில் அவன் தான் முதல் பரிசு எடுத்திருந்தான். இம்முறை நவக்கிரியில் பெரிய அளவில் சவாரிநடக்க இருக்கிறது. இதிலும் முதல் பரிசு எடுக்க வேணும். இந்த சந்தோசத்தை விட்டு விட்டு அவனால் கிளிநொச்சிக்கு எப்படி போக முடியும்.

இப்போது வீட்டில் அப்பு முகம் கொடுத்துப் பேசுவதில்லை. காய்ச்சல் வந்து படுக்கையில் போட்டு விட்டபடியால் வேலாயுதமும் இன்னும் கிளிநொச்சிக்குப் போகவில்லை. இம்முறை கொஞ்சம் நெருக்கடி ஏற்படத்தான் போகின்றது. குறைந்த பட்சம் இந்த சவாரிப் போட்டி முடிய வருவதாகச் சொல்லி இப்போதைக்குத் தப்பிக் கொள்ள வேண்டியதுதான்.

அவனுக்கு கிளிநொச்சியை நினைத்தாலே பயமாக இருந்தது. பாம்புகளும், யானைகளும், நுளம்புகளும் உள்ள இடம். யானைக்குப் பயந்து இரவெல்லாம் பெரிதாய் நெருப்பு எரித்துக் கொண்டிருக்க வேண்டுமாம். தகரத்தில் அடித்து சத்தம் எழுப்ப வேண்டுமாம். இந்த அண்ணை எப்பிடித்தான் அங்க அந்தக் காட்டுக்கப் போய் இருக்கிறாரோ என்று அலுத்துக் கொண்டான்.

பிரயாணத்தை நினைக்கும் போது இன்னமும் அலுப்பு ஏற்பட்டது. கண்டிப் பாதையால் யக்கச்சி கடந்து போவது சரியான தூரம். இங்கே உள்ள சிலர் கச்சாய் கரையில் வள்ளம் பிடித்து கடலில் பிரயாணம் செய்து அந்தப்பக்கம் கட்டத்தீவுக் கரையில் இறங்கி குஞ்சுப்பரந்தன் போவார்கள். குஞ்சுப்பரந்தனிலிருந்து கிழக்கு நோக்கி நடந்தால் பரந்தன் வரும். இது சுருக்கமான பிரயாணம்தான். ஆனால் வள்ளத்தில் ஏறுவதற்கு பயந்து அனேகமானோர் தூரம் என்றாலும் யக்கச்சி வழியான தரைப்பாதையைத்தான் பயன் படுத்துகிறார்கள். கரிக்கோச்சி யாழ்ப்பாணத்திலிருந்து கிளிநொச்சி போய் வரும். அந்த நேரம் காத்திருந்து ஏறிப் பிரயாணம் செய்ய வேண்டும். முப்பது சதம் எடுப்பார்கள். காசுச் செலவை நினைத்து மாட்டுவண்டியில் பிரயாணிப்பதே அவர்களுக்குச் சுபமாக இருந்தது.

சூரியன் மேற்கே பனங்கூடலுக்குள் சரிந்து கொண்டிருந்தது.

தண்ணீர் குடித்த மாடுகளை வெளியே கொண்டு வந்தான் சிவம். தரை வெளி கடந்து வீடு வந்து சேர்ந்த போது மெல்லியதாய் இருட்டி விட்டது. மாடுகளைக் கட்டிவிட்டு வீட்டுக்குள் வந்தான்.

''நான் நாளைக்கு கிளிநொச்சிக்குப் போகப் போறன் அப்பு.''

வேலாயுதம் சொல்லிக் கொண்டிருந்தான்.

''அதுக்குள்ள ஏன் மோனை, இப்பதானே காய்ச்சல் விட்டுக்கிடக்கு. உந்தக் காய்ச்சல் வாய்க்கு நாளைக்கு ஒடியல் கூழ் காச்சுவம் எண்டு இருக்கிறன். அவன் சின்னத்தம்பியிட்ட மீனுக்குச் சொல்லி வைச்சிட்டன்.''

தாமரைச்செல்வி

வேலாயுதம் பேசாமல் இருந்தான். அவனுக்கு ஒடியல் கூழ் குடிக்க வேணும் போல இருந்தது. கசந்து கொண்டிருக்கும் வாய்க்கு அதுதான் சுள்ளொன்று இதமாக இருக்கும். கிளிநொச்சியில் ஆன சாப்பாடும் இல்லை. காலமை ஒரு சோறு ஒரு கறி காய்ச்சினால் மூன்று நேரமும் அதுதான் சாப்பாடு. அவன் சாப்பாடு தண்ணி இல்லாமல் கிடக்கிறானே என்பதுதான் ஆச்சிக்குப் பெரிய கவலை.

''அப்புவோட தோட்டத்தறையையும் இருக்கின்ற பரப்பு வயலையும் பார்த்துக் கொண்டு இங்கு இருக்க ஏலாதே மோனை. ஏன் தூர இடத்திற்குப் போய் அலைய வேணும்.''

ஆச்சி ஆதங்கத்துடன் கேட்டாள்.

''இங்க உழைக்கிறதுக்கு சீவியத்துக்குத்தான் வருமனை. அதுக்கு மேல் ஒரு வசதியும் கிடைக்காது.''

சீவியத்துக்கு வந்தால் போதும் தானே மோனை. அதற்கு மேல் வேறு என்ன தேவைகள் இருக்கும் என்று ஆச்சிக்குப் புரியவில்லை.

''சாப்பிட்டால் மட்டும் காணுமோணை. கிளிநொச்சி தங்கப் பவுண் மாதிரி மண் உள்ள பிரதேசம். இருந்து பாரணை ஒரு காலத்தில எப்படி வரும் எண்டு. அந்த மண்ணில் பாடுபட்டால் நல்லாய் வந்திடலாம். என்ர மனதுக்கு அப்பிடித்தான் படுது.'' வேலாயுதத்தின் பேச்சு ஆச்சிக்கு அவ்வளவு புரிபடவில்லை. தன் பிள்ளை எப்போது இவ்வளவு ஆசையுள்ளவனாய் மாறினான் என்பது தெரியாமல் ஆச்சி விழித்துக் கொண்டு நின்றாள்.

சிவம் குசினிக்குள் நுழைந்து அன்னத்திடம் கேட்டான்.

''இரவுக்கு சாப்பிட என்னடி இருக்கு.''

''பைத்தங்காய்ப்புட்டும் கருவாட்டுக் குழம்பும் இருக்கு. இப்ப சாப்பிடுறியே.''

''போட்டுத்தா சரியாய் பசிக்குது.''

குசினித் தாழ்வாரத்து மேல் தட்டியில் கொழுவியிருந்த பனை ஓலையால் கோலிச் செய்திருந்த தன் தட்டுவத்தை எடுத்துக் கொடுத்தான்.

''விளையாட்டு உனக்குக் கூடிப் போச்சு. அதுதான் சாப்பிட்டது கெதியில் செமித்துப் போகுது.''

அவன் திரும்பி முறைத்துப் பார்த்தான்.

''பேசாமல் போட்டுத்தா. நான் அங்கல கொண்டு போய் சாப்பிடுறன்.''



குசினிக்குள் சிவத்தின் நடமாட்டத்தை அவதானித்து விட்டு அப்பு கேட்டது இவளின காதில் விழுந்தது.

''உவன் என்னவாம். கேட்டனியே.''

தெருவைப் பார்த்துக் கொண்டு ஆச்சியிடம் கேட்டார். ஆச்சி பேசாமல் நின்றாள்.

''இஞ்ச... என்னவாம் தமயனோட போறானாமோ ?''

அப்பு உரத்த குரலில் கேட்டார்.

''தான் போகேல்லையாம்'' ஆச்சியின் பயந்த குரல். எப்போதும் ஆச்சியின் அபிப்பிராயங்கள் அங்கு கேட்கப்படுவதில்லை. அப்பு சொல்வதை அப்படியே ஏற்றுக் கொள்பவள் அவள்.

''அப்ப என்னவாம் செய்யப்போறான்.''

யாரும் பேசவில்லை. சிவம் மெல்லிய குரலில் அன்னத்திடம் சொன்னான்.

''மாட்டுச் சவாரி முடியட்டும். பிறகு பார்ப்பம். சொல்லிவிடு.''

அவன் தட்டுவத்தை எடுத்துப் போய் தாழ்வாரத்தில் அமர்ந்து கொண்டு சாப்பிடத் தொடங்கினான். கருவாட்டு ருசி நாக்கில் சுள்ளென்றது. ஆச்சியின் கைமணம் அன்னத்திற்கும் வந்திருக்கிறது.

சாப்பிட்டுவிட்டு தட்டுவத்தை கழுவி மறுபடி மேல் வளையில் கொழுவி விட்டான். அன்னத்திடம் திரும்பி,

''கொஞ்சம் பச்சரிசி இடிச்சுத்தாறியேடி. தவிட்டோட குழைச்சு வெள்ளைக்கும் சிவலைக்கும் வைக்க வேணும்.''

''கொஞ்சம் பொறு. எல்லாரும் சாப்பிட்ட பிறகு இடிச்சுத்தாறன். சவாரி நாள் கிட்ட வர வர புத்தூர் சிலாவரையில் இருந்தெல்லாம் உன்னைத் தேடி ஆட்கள் வரத்தொடங்கியிட்டனம்.''

''இந்த முறையும் வெண்டு காட்டுறன். இருந்து பார் நாலுபேரோட பந்தையம் கட்டியிருக்கிறன்.''

''அப்புன்ரகாது கேட்க கதைக்காத நட்டக் காசு ஆர் கட்டுறது எண்டு கேட்டிடுவார்.''

''உனக்கும் வாய் கூடியிட்டுது.''

சிவம் முன் புறம் தலைவாசல் திண்ணையில் வந்து அமர்ந்து

கொண்டான். ஆவணி மாதத்திற் குரிய வாடைக் காற்று எதிரேயுள்ள வெட்டைக் காணிக்குள் நின்ற பனை மரங்கள் இருள் வடிவமாய்த் தெரிந்தது.

முற்றத்து வெள்ளை மணல் மெல்லிய நிலவு வெளிச்சத்தில் பளபளப்பாய் தெரிந்தது. வளர்பிறை காலம். சிவம் பனை ஓலைப் பாயை விரித்துப் படுத்துக் கொண்டான். சிறிது நேரத்தில் வேலாயுதமும் வந்து பக்கத்தில் பாயை விரித்துப் படுத்துக் கொண்டான். என்ன இருந்தாலும் தமயனுக்கு நேராக எதிர்த்து சிவத்தினால் ஒரு போதும் பேசமுடியாது. தன்னை விட அண்ணனுக்கு உலக விடயம் அதிகமாகவே தெரியும் என்ற எண்ணம் எப்போதுமே சிவத்துக்கு உண்டு. குசினி வாசலில் உரலை நிறுத்தி அன்னம் அரிசி இடிக்கத் தொடங்கினாள். உலக்கை போடும் தாளம் தவறாமல் ஒரே சீராகக் கேட்டுக் கொண்டிருந்தது.

''சிவம்''

''ஏன் அண்ணை'' சிவம் சட்டென்று எழுந்து அமர்ந்து கொண்டான்.

''நீ ஏன் கிளிநொச்சிக்கு வரமாட்டன் எண்டு சொல்லுறாய்.''

சிவம் பேசாமல் தலையை குனிந்து கொண்டிருந்தான்.

''கிளிநொச்சியை ஒரே காடு எண்டு நினைப்பாய். இப்ப குடியேற்றத்திட்டத்தில் கனபேருக்கு காணிகள் குடுக்கினம். முந்திக்குடுத்த கணேசபுரம், வட்டக்கச்சியெல்லாம் சனங்கள் இருக்குதுகள். இப்ப நான் பரந்தனுக்குப் பக்கமாய் அஞ்சாம் வாய்க்கால் எண்ட இடத்திலதான் நான் குத்தகைக்கு எடுத்த வயல் செய்யிறன். வயல்கரையில் தான் கொட்டில் போட்டிருக்கிறன். எப்படியும் எங்களுக்கு எண்டு ஒரு காணி எடுத்திட வேணும். நீயும் என்னோட வந்தியெண்டால் உனக்கெண்டும் ஒரு காணி எடுக்கலாம்.''

எனக்கெண்டு ஒரு காணியா... சிவம் திகைத்துப் போய் பார்த்தான்.

''இங்க எப்பிடித் தோட்டம் கொத்தினாலும் முன்னேற ஏலாது. ஆனால் அங்க நெல்லு விதைச்சால் கூடிய லாபம் எடுக்கலாம். தங்கைச்சிக்கு காதுக்கு நகை செய்யேல்லையே. இப்பவும் ஆச்சியிட்ட சிறுபோக நெல்லு வித்து முப்பது ரூபா குடுத்தனான். தங்கைச்சிக்கு சங்கிலி செய்து குடுக்கச் சொல்லி, அங்க கொண்டு வந்து விற்கிற சோனக வியாபாரியிட்ட இவளுக்கு ஒரு சிலுக்குச் சீலையும் வாங்கி வந்து குடுத்திருக்கிறன். அங்கு நெல்லுக் குடுத்து இதுகளை வாங்கலாம். நீயும் என்னோட வா. கஸ்டப்பட்டு உழைச்சால் முன்னேறலாம். கொஞ்சம் வசதியாக இருக்கலாம். உடையார் வீடு மாதிரி கல்வீடு கட்டலாம். கார் வைச்சிருக்கலாம். குழப்படி எண்டு வீட்டை விட்டு கலைபட்டு ஓடிப்போன வெற்றிவேலர் வெள்ளைக்காரரோட சேர்ந்து நிண்டு இண்டைக்கு கிளிநொச்சியில் பெரிய ஆளாகி வந்திட்டார். இரணைமடுக்குளம் கட்டிறபோது வெள்ளைக்காரருக்கு எடுபிடி வேலை செய்தவர். அவையள் போகேக்க அவரை விதானை ஆக்கிட்டுப் போனவை. இப்ப காணி பூமி எண்டு எவ்வளவு வசதியாக இருக்கிறார். இப்ப மீசாலை சாவகச்சேரியிலிருந்து கனசனம் அங்கு வந்து காணி எடுத்து இருக்குதுகள். சிங்களச்சனம் கூட வந்திருக்குதுகள்.''

''சிங்களச் சனங்களோ.''

''ஓமடா, பண்டா, அருநோக எங்களுக்குப் பக்கத்து காணியிலதான் இருக்கினம். அதுவும் மனிசி பிள்ளையளோட இருந்து வயல் செய்யுதுகள். இரணைமடு குளத்தை விரிவாக்கி கட்டிக் கொண்டிருக்கினம். அதால இரண்டு போகமும் வடிவாய் வயல் செய்யலாம். அந்த மண்ணில பாடுபடுறது வீணாய் போகாதடா. வாவன்.''

கொஞ்ச நேரத்திற்கு நரிப்பிட்டிக் குளமும் புளிவெட்டையும், தரவை வெளியும், நவக்கிரி சவாரித்திடலும் மறைந்து போக ஒரு புதிய களம் மனக்கண்முன் விரிந்தது. சிறுபொறி அவன் மனதில் அந்த வினாடியில் விழுந்தது. போய்ப் பார்த்தால் தான் என்ன எண்ணம் ஒரு தடவை தோன்றி மறைந்தது.

''சரி அண்ணை ஒருக்கா வந்து பார்க்கிறன்.''

(தொடரும்)

## சாதனையாளர்கள்

புலம்பெயர்ந்து வரும் பலர் இலைமறை காயாக இருந்து பல சாதனைகளை புரிந்துக் கொண்டிருக்கிறார்கள். இவர்களின் சாதனைகளை வெளிச்சத்துக்கு கொண்டு வரும் எண்ணத்தோடு தமிழர் தகவல் சாதனை யாளர்கள் பக்கம் என்னும் ஒரு புதிய பகுதியை ஆரம்பிக்க இருக்கிறது. வாசகர்கள் சாதனையார்களின் விவரத்தை புகைப் படத்துடன் எமக்கு அனுப்பி வைத்தால் பிரசுரிக்கப்படும்.

பதிப்பாசிரியர்

## அட்டையில்...



தமிழர் தகவல் சினிமாவுக்கோ, தொலைக்காட்சி நிகழ்ச்சிகளுக்கோ அதிக முக்கியத்துவம் கொடுப்பதில்லை. ஆனாலும் நம்மவரின் முயற்சிகளுக்கு அவ்வப்போது நேசக்கரம் நீட்டுகிறது. இப்பொழுது லண்டனில் தீபம் தொலைக்காட்சியிலும், தரிசனம் தொலைக்காட்சியிலும் சித்ரா என்னும் நெடும் தொடர் நாடகம் ஒன்று ஒலிப்பரப்பாகிறது. அதன் திரை, கதை, வசனம் யாவும் என். ராதா என்பவரின் முயற்சியால் எடுக்கப்பட்டுள்ளது. நடிகர்கள் அனைவரும் லண்டனில் உள்ளவர்களுக்கு மிகவும் பரிச்சயமானவர்களாய் இருப்பது குறிப்பிடத்தக்கது. யாரும் துணியாத இந்த செயலில் ஈடுபட்டுள்ள ராதா அவர்களின் வித்தியாசமான இந்த முயற்சி பாராட்டுதற்குரியது. இந்த தொடருக்கு லண்டனில் உள்ள ஈழமக்கள் அனைவரும் ஆதரவு கொடுக்க வேண்டும் என்பது தமிழர் தகவலின் விருப்பம்.

## சிவசொரூபம்.



நாம் எப்படி வாழ வேண்டும் என்பதைக் காட்டுவதே, சிவசொரூபம்.

ஈசனின் ஜடாமுடியில் உள்ள சந்திரன் நம்முடைய இன்பமும், துன்பமும் மாறி மாறி வளர்பிறையாகவும், தேய்பிறையாகவும் வரும் என்பதைக் காட்டுகிறது. அங்கே இருக்கும் கங்கை, எப்போதும் தூய்மையாக இருக்க வேண்டும் என்பதைக் குறிக்கிறது. ஆசாபாசங்கள் நம்மை அலைக்கழித்தாலும் நம்முடைய மனம் அதனால் கெட்டுப் போய் விடக்கூடாது.

ஒவ்வொரு நிமிடமும் நம்மைப் பாவக் குழியில் தள்ள நச்சுப் பாம்பாக சூழ்நிலை சுற்றிக் கொண்டு காத்திருக்கிறது. ஆனால் அந்த விஷம் உள்ளே இறங்க நாம் விட்டு விடக் கூடாது. இதையே பரமனின் கழுத்தைச் சுற்றிய பாம்பும் அவர் விஷத்தைக் கண்டத்தில் தேக்கி வைத்திருப்பதும் உணர்த்துகிறது.

மிருக உணர்ச்சிகள் நம்மை பாதிக்கலாம். ஆனால் அவற்றிலிருந்து நீங்கிய, உயர்ந்த மனித உணர்வுடன் நாம் வாழ வேண்டும் என்பதை புலித்தோல் உடை அறிவுருத்துகிறது.

தேகத்தில் பாதியாக தேவியை வைத்துக் கொண்டிருந்தாலும் சிவபெருமான் காமத்தை வென்றவர். காமனையே எரித்தவர். அதைப் போல நாமும் உலகியலைப் பற்றி வாழ்ந்தாலும், காமத்துக்கு அடிமையாகாமல் அதைத் தூய்மைப்படுத்தி ஆன்மிகமாக வாழப் பழகிக் கொள்ள வேண்டும்.

நீங்களும் எழுதலாமே ...

வாசகர்களே, உங்கள் ஆக்கங்கள், விமர்சனங்கள், கருத்துக்கள், கட்டுரைகள், கவிதைகள், கதைகள் வரவேற்கப்படுகின்றன. தரமானவை பிரசுரிக்கப்படும்.

### மாதம் ஓர் ஈழத்துச் சிவாலயம்

# மூச்சம்புலம் சிவன் ஆலயம்

வரலாற்றுப் புகழ் மிக்க சிவன் ஆலயமாக இலங்கையின் யாழ் வடமராட்சி தென்புலோலியில் கோயில் கொண்டருளி உள்ளது மூச்சம்புலம். மூச்சம்புலம் தெய்வீகத் தலம் நாற்புறம் தெய்வீக அருட்திருத்தலங்களும் ஆல, அரசு, கொன்றை, மா, மருது, வேம்பு போன்ற மரங்களும் வயல், குளங்கள் சூழ்ந்த வடகிழக்குத் திசையில் பொங்கொலிநீர் சிங்கை நகரான பழமையான இராசதானி சூழ்ந்த இடத்தில் அமைந்துள்ளது.

மூச்சம்புல பெரிய சாமி அவர்கள் இப்பிரதேசத்துக்கு இந்திய நாட்டின் தென் புறத்திலுள்ள மலையாளத்தில் இருந்து பல சிவ, முருக தலங்களைத் தரிசித்து வடமராட்சிக்கு வருகை தந்திருந்தார்கள். அக்காலங்களில் ஞானிகள், மகான்கள் பலர் இப்புனித பிரதேச சூழல்களில் உலாவி தம் ஞான அருள் தன்மைகளை இத்தலத்தில் வெளிப்படுத்தி உள்ளார்கள்.

இமய கிரியின் கிழக்குப் பகுதியின் பின்புறத்தில் திபேத்திய பீட பூமியின் தெற்குப் பக்கத்தில் அடர்ந்த மலை, காடு, மேடுகளும் நிறைந்த இடத்தின் நடுவில் சம்பளம் என்ற கிராமிய சூழ்நிலை கொண்ட சூட்சும ஆச்சிரமம் உள்ளது.

அகத்தியர், மைத்ரேயர், புலஸ்தியர், வஷிட்டர் போன்ற ரிஷிகள் நிரந்தரமாக மத்திய கிளைக் கேந்திரங்களில் சிரஞ்சீவிகளாகவிருந்து பரிணாமத்தை நடத்தி வருகின்றார்கள். இடை இடையே அவர்கள் வழியில் நின்று கடுமையாக சாதனைகள் புரிந்துள்ளார்கள். சில நேரங்களில் இவர்களில் சிலர் சில குடும்பங்களில் பிறந்து வளர்ந்து சில அற்புதங்களைச் செய்து மக்களை திசை திருப்பிவிட்டுப் பின் மரணம் போன்ற நிலையில் சமாதியாகவும் உடலைவிட்டுச் சென்று தம் பழைய உடம்பையேற்றுக் கொள்கின்றார்கள். சமயாசிரியர்களாய் தோன்றி மறைந்தவர்கள் இத்தகையவர்களேயாவர்.

இவ்வாலயத்திலும் கோமாதா (பசு) மூச்சம்புல தெய்வீக தலம் அமைய காரணமாகி, கேரள நாட்டு பெரியவரினால் சிவமயமாக்கப்பட்டது. இந்திய மரபில் பசுக்கள் தெய்வீக ஆற்றல் கொண்டவையாகப் போற்றுகின்றனர். அவை தெய்வங்கள் உறையும் புனிதத் தலங்களைக் கண்டறிந்து மக்களுக்கு அறிவிக்கும் ஆற்றல் மிக்கவை என்று நம்பப்படுகின்றது.

இமயம் முதல் குமரி வரையிலுள்ள அநேக தெய்வத் தலங்களிலும் இலங்கையிலும் புற்றின் உள்ளே இருக்கும் தெய்வத் திருவுருவங்களைப் பசுக்களே பால் சொரிந்து மக்களுக்கு காட்டியதாக அந்த வட்டாரப் புராணங்கள் கூறுவதிலிருந்து அறியலாம்.

வடமராட்சி தென்புலோலியின் கண் அமைந்த ஆதிமூலம் (மூச்சம்புலம்) அமைந்த குளத்தில் பசுக்கூட்டங்கள் வந்து தண்ணீர் அருந்தி வருவது வழக்கம். தமது உடம்பிலுள்ள கடியினைப் போக்க சுவாமிகள் ஆஉறிஞ்சுக் கல்லினில் உரோஞ்சி செல்வதனை அடிக்கடி கண்டுவந்தார். மூச்சம்புல பெரிய சுவாமிகள் இக்கல்லினையும் பசுக் கூட்டத்தினையும் கண்டு சிவன் ஆஉறிஞ்சுக் கல்லினில் இருப்பதனைத் தனது ஞானக் கண்ணால் கண்டு அதனைச் சிவமாக்கி வழிபட்டார்.


இக்குளத்தின் அருகில் ஆலமரத்தை தல விருட்சமாகக் கொண்டு ஆலயம் அமைந்தது. இறைவனுக்கு இணையாக மரமும் சிவலிங்க உருவமாக வெண்கல்லும் (வைரக்கல்) வணங்கப்பட்டது. இவ்வாறான நிலையில் மரத்தின் அடியில் சிவலிங்க வடிவமான திரு உருவம் கருவறையாக காட்சி தந்தருளியது. இம் மர வழிபாடு அயலில் உள்ள ஆலயங்களான சின்னத்தாய் விநாயகர் ஆலயத்தில் அரசும் வேம்பும் – முனிஸ்வரர் ஆக; சிலுந்தில் வீரபத்திரர் ஆலயத்தில் – ஆலும்; உபயகதிர்காம ஆலயத்தில் – விளாத்தி ஈஸ்வரனாக தெய்வங்கள் இருந்து அருளாட்சி செய்கின்றன. அடியவர்கள் தற்போது பூசை ஆராதனை செய்து வணங்கி வருகின்றனர்.

ஆலமரம் முழு இந்தியாவிலும் இலங்கையிலும் வழிபாட்டுச் சின்னமாக விளங்கிய ஒரு விருட்சமாகும். சிவன் தட்க்ஷிணா மூர்த்தியாகத் தெற்கு நோக்கி ஆலமரத்தின் கீழே இருந்துதான் உபதேசம் செய்தார் என்று கூறப்பட்டுள்ளது. இங்ஙனமாக எந்த ஆலயத்திலும் மரமொன்று கோவிலில் தல விருட்சமாய்ப் போற்றி வணங்கும் மரபு ஏற்பட்டது. இவ்வாறு ஆரம்பகால, மரவழிபாடு ஆலயப்பண்பாட்டுடன் ஒன்றிணைந்து உள்ளது.

இவ்வாலயத்தின் பக்கத்தில் அன்னதான மடம் அமைத்து வல்லிபுர ஆழ்வார் ஆலய உற்சவ காலங்களில் அடியார்களுக்கு அமுது வழங்குவது வழமையாகும். இவ்வாறான அன்னதான நிகழ்வுகள்

இடம்பெறும் காலங்களில் ஞானிகள், சித்தர்கள், அடியவர்கள், இத்தலத்துக்கும் சிலுந்தில் வீரபத்திரர், வல்லிபுர ஆழ்வார், உபயகதிர்காமம் போன்ற சூழலில் உள்ள ஆலயங்களுக்கும் சென்று இறை சக்தியை உணர வைத்து அன்பர்களை நேர்வழிப்படுத்தி வருவார்கள். சித்தர்கள் தம்மை உயர்த்திக் கொண்டதோடு நில்லாமல் உலக மக்களையும் உயர்த்துவதற்குப் பணிகள் பல செய்தனர். சித்தர்கள் பக்தர்களின் மன இருளைப் போக்கி ஞான ஒளி பாய அருளினை வாரி வழங்கினர்.

இவ்வாறான சூழல்களில் அமைந்த திருத்தலங்களில் சோல்பரி சுவாமி, ஜேர்மன் சுவாமி, ஆனைக்குட்டி சுவாமி, அக்கினி சுவாமி, கடவுள் சுவாமி, மனோன்மணி அம்மா, விநாசித்தம்பி சுவாமி, தர்மானந்தா சுவாமி, கோடாலிச் சுவாமி, அருணாசல சுவாமி, வடிவேற் சுவாமி, உடுப்பிட்டி சிதம்பரப்பிள்ளை சுவாமி ஆகியோரும் ஈழத்தில் வாழ்ந்த சித்தர்களும் அயலில் உள்ள பிரசித்தி பெற்ற திருத்தலங்களில் அடியவர்களும் தங்கி வழிபட்டு வருவது வழமையாக உள்ளது.



வைகாசி மாதத்தில் தொடங்கி தென்பகுதி கதிர்காமத்துக்கு மூச்சம்புல சாமியாரும், ஞானிகளும் அருளாளர்களும் அடியார்களும் நடையாக பாதயாத்திரை செய்வார்கள். வைகாசி மாத காலத்தில் வடமராட்சியின் பல தலங்களில் இருந்து அடியார்கள் ஒன்று கூடி தரை மார்க்கமாக யாத்திரை சென்று பின் ஸ்ரீ செல்வச்சந்நிதி திருவிழாக்கள் முடிவுற்றதும் பின்னர் அடியார்கள் கூட்டம் சிவனின் மைத்துனனான வல்லிபுர ஆழ்வார் ஆலய உற்சவ காலங்களில் ஒன்று கூடுவார்கள்.

புராண மரபிலும் அடியார்களும் சிவனையும் விஷ்ணுவையும் மைத்துனன் உறவில் அருகே வைத்து வணங்கி வருகின்றார்கள். சைவ பக்தி இயக்கம் உருவான காலப்பகுதியின் தொடக்க காலத்தில் சிவனையும் விஷ்ணுவையும் ஒரே வடிவில் காணும் மனப்பக்குவம் அடியவர்களிடம் அமைந்திருந்தது. சங்கர நாராயணன் என அவர்கள் அவ்விருவரையும் ஒரு நிலைப்படுத்தி தரிசித்தனர்.

இச்சிவனாலயத்தில் காலை, மாலை என இரு காலப்பூசைகள் தொடர்ந்து நடைபெறுகின்றன. இது வைரக்கல் கொண்டு மூலஸ்தானம், அர்த்த மண்டபம் இல்லாமல் மகா மண்டபம் 1970 ஆம் ஆண்டளவில் திரு வீரவாகு கணபதிப்பிள்ளை அவர்களினால் திருப்பணி வேலைகள் செய்து வெளிமண்டபம் ஓட்டினால் கூரை அமைத்து கட்டிட வேலைகள் அடியவர்களின் உதவியினால், பூர்த்தியாகி உள்ளன. இங்கு விநாயகர், சிவன் சக்தி, வேல்முருகன், வயிரவர், நந்தி போன்ற திரு உருவங்கள் வைத்து பூசை நடைபெறுகின்றது.

இத்தலத்தின் கிழக்கே சிலுந்தில் வீரபத்திரர் ஆலயம் ஆலமரம், அரசமரம், வயல்கள், குளங்கள் சூழ இருக்கின்றன. இங்கு விநாயகர், பெரிய தம்பிரான், அண்ணமார், நாச்சிமார், வீரபத்திரர் போன்ற தெய்வங்கள் இருந்து அருளாட்சி செய்கின்றன. இங்கு மூச்சம்புல தலத்திற்கு வரும் ஞானிகள், சித்தர்கள் இதனைத் தாம் தியானம், நிஷ்டை, சயனம் செய்யும் பிரதேசமாக ஆக்கியுள்ளனர்.

ஆலயத்தின் தென்கிழக்கு மூலையில் பிரசித்திப் பெற்ற வல்லிபுர ஆழ்வார் ஆலயம் அமைந்துள்ளது. இத்தலத்தில் விஷ்ணு பெருமானின் சக்கரம் மூலஸ்தானத்திலும், உற்சவ மூர்த்தியாகவும் அருட்புரிகின்றது. மாலுக்கு சக்கரம் அன்று அருள் செய்தவன் என்ற திருப்பல்லாண்டு பாடலின் வரியை சக்கரத்தை அருளிய சிவனும், அருளப் பெற்ற விஷ்ணுவும் அருகருகே கோயில் கொண்டருளி இருப்பது குறிப்பிடத்தக்கது.

மூச்சம்புல மடத்தில் குடியிருந்து கோயில் தொண்டு செய்து வாழ்ந்த தொண்டனான பொன்னையாசாமி அவர்களே வல்லிபுர விஷ்ணு கோயிலுக்கான தீர்த்தக்கேணியை அமைத்து உதவியவர் ஆவார். இவரே வல்லிபுர கோயிலில் பரம்பரையாக வணங்கப்பட்டு வந்த குருக்கட்டுப் பிள்ளையார் தலத்திலும் மற்றும் மூச்சம்புலம் சிவன் கோவிலிலும் உபயகதிர்காம முருகன் கோவிலிலும் தீர்த்தக்கேணியை அமைத்தவராவார்.

மேற்கே வெள்ளுருவை நின்ற சின்னத்தாய் விநாயகர் ஆலயம் அமைந்துள்ளது. பரிவார தெய்வமாக முருகன், வைரவர் போன்றவை உள்ளன. வேம்பும், அரசும் சேர்ந்து முனிஸ்வர தெய்வமாக விருட்சத்தில் பூசிக்கப்படுகின்றது.

வடமேற்கே வரலாற்றுப்புகழ் மிக்க உபயகதிர்காம தான் தோன்றிய முருகன் ஆலயம் உள்ளது. தென்னிந்தியாவில் திருநெல்வேலிப் பகுதியில் அமைந்த பாட்டபத்துக் கிராமத்தில் பிராமண குலத்தில் பிறந்த குகானந்தநாயகி லோகாம்பாள் அம்மையாரின் கனவின் மூலம் கண்டுபிடிக்கப்பட்டது. வெண்கல்மலையில் சக்கர

யந்திர உருவுடன் அருள் ஒளிவீசும் தலத்தினை வைகாசி விசாகத்தில் தரிசனம் செய்தார்கள். ஆலயத்தின் அருகே வடக்குப் பக்கத்தில் தானே தோன்றிய விளாமரத்தில் விளாத்திஸ்வர தெய்வம் பூசிக்கப்படுகின்றது. இத்தலத்தின் மூல மூர்த்தியைப் பார்க்கின்றபோது சிவலிங்க வடிவினை ஒத்ததாக காட்சித் தருகின்றது. அடியவர்கள் சுயம்புலிங்க மூர்த்தியாக வணங்கி வருகின்றனர்.

மூச்சம்புல சிவன் உபயகதிர்காமம், வல்லிபுர ஆழ்வார் ஆலயம் என்பன கால்மைல் தூரத்தில் ஒரு நேர்க்கோட்டில் அமைந்துள்ளன. இவை விருட்சம், தலம், தீர்த்தம் யாவும் அமைந்துள்ளன. பிரசித்தி பெற்ற வல்லிபுர ஆழ்வார் திருமால் கோயில் அமைந்துள்ள பிரதேசம் யாழ்ப்பாண தமிழரசின் பழைய தலைநகராகிய சிங்கைநகர்ப்பகுதி என்பது முதலியார் இராசநாயகம், பேராசிரியர்களான க. கணபதிப்பிள்ளை, ஆ. வேலுப்பிள்ளை முதலிய ஆராய்ச்சியாளர்களின் முடிவு.

இதனை உறுதிப்படுத்தும் வகையில் வரமராட்சி வல்லிபுர கோயில் புனித நகர் போன்ற பகுதிகளில் சிங்கராசா ஆட்சி செய்த காலத்தில் சுடுமண் கற்களால் அமைக்கப்பட்ட கிணறு பல 18.08.2005 கண்டுபிடிக்கப்பட்டன. ஏற்கனவே இதற்கு முன்னர் சுடுகலன்கள், பூர்வகாலக் கல்லேடுகள், கீச்சுக் கண்டம் ஆகியனவும் அங்கிருந்து தரை மார்க்கமாக போன பெரும் வீதியின் அடையாளங்களும் அவ்வூர் ஒருகாலத்தில் பெருநகராக விளங்கியிருக்க வேண்டும் என்பதைக் காட்டுகின்றன.

மூச்சம்புல சிவன் ஆலயத்தில் விசேட காலமான சிவராத்திரி, திருவிளையாடற்புராணம், திருவாதவூரடிகள் புராணம், சித்திரபுத்திரனார் கதை படித்துப் பயன் சொல்லுதல், திருவெம்பாவை பாடுதல், வெள்ளிக்கிழமைகளில் விசேட பூஜைகள் நடைபெற்று வருகின்றன. ஆலயம் தோன்றிய காலத்திலிருந்து காலையில் ஏழு தட்டில் அமுதும், மாலை பூசையில் ஏழு வாழைப்பழமும் வெற்றிலைப்பாக்கும் வைத்து பூசை வழிபாடு செய்வது வழமையாக உள்ளன.

விசேட காலங்களில் பூசைகள் முடிந்த பின்னர் விபூதி, தீர்த்தம், சந்தனம், பூ பிரசாதம் வழங்குவது வழமையாகும். அன்னப்பிரசாதம் அடியவர்களுக்கு கொடுப்பதற்கு முன்னர் அருகிலுள்ள தீர்த்தக் கேணியில் இருக்கும் மீன்கள், ஆமைகள் என்பவற்றுக்குப் பிரசாதம் கொடுத்த பின்னர் அடியவர்களுக்கு வழங்கும் மரபு முறை உள்ளது. ஆலயத்தின் வாசலில் இரவு தினங்களில் தீபம் ஏற்றி வைப்பார்கள். இந்த தீபஒளி அருகிலிருக்கும் கேணியில் தெரியும். இதனைப் பார்த்து வணங்கக்கூடிய தன்மையினைக் காணலாம்.

இவ்வாலயம் உருவாக காரணகர்த்தாவாக இருந்த மூச்சம்புல பெரியசாமி சமாதியானார்கள். இச்சமாதியினை அடியார்கள், அன்பர்கள் புடைசூழ ஆனைவிழுந்தான் சந்திக்கு அருகே சமாதியாக வைத்தார்கள். அதற்கு அவரின் அடியவர்கள் வெள்ளிக்கிழமைகளில் தீபம் ஏற்றி வழிபாடு செய்யப்பட்டு வந்தது குறிப்பிடத்தக்கது.

இவ்வாலயத்தில் ஏற்கனவே இருந்த உற்சவ மூர்த்தியில் பழுது ஏற்பட்டதால் புதிய சந்திரசேகர அம்பாள் மூர்த்தியினை புதிதாக சித்திரை அத்த நட்சத்திரம் 22.04.2005 அன்று கும்பாபிஷேகம் செய்தார்கள். புதிய சுவாமி வீதிஉலா வருகின்றார். பூமாலை அலங்காரம் செய்து அழகு உருவாக பிரம்பு சூலம் கொண்டு எழுந்தருளுவார். அடியவர்கள் புடை சூழ பஜனைபாடியும், தவில் நாதஸ்வரம், சங்கு நாதம், சேமக்கலம் போன்ற ஓசையுடன் வீதியில் அருள்புரிவார். இரவு நேரங்களில் பக்தர்களை தேடி குமிழ் மிதியடி, பிரம்பு போன்றவற்றுடன் சென்று வருவதாகவும் ஐதீகம் உண்டு. இரவு பகல் நேரங்களில் வீதியில் நாகபாம்பு வடிவத்தில் இருப்பதை அடியார்கள் கண்டுள்ளார்கள். புதுமை மிக்க தெய்வமாக பலரின் மாற்ற முடியாத சுகவீனங்களை மாற்றும் வைத்தீஸ்வரனாக இருக்கின்றார்.

சிவபெருமானுடைய திருத்தலங்களை தேடித்தேடி சென்று நாளும் வழிபட்ட நாயன்மார்கள் அந்த பரமனின் பாதங்களை அடைந்துவிட வேண்டுமென்று ஆசைப் பட்டவர்கள் ஈசனின் திருவடிக்கு இணையாக எதையும் எண்ணாதவர்கள் ஒவ்வொரு கோவிலிலும் சில அற்புதங்கள் இருக்கும். அபூர்வ அருள் பாலிப்புகள் இருக்கும். அரிய புராண பிண்ணனிகள் இருக்கும்.

கோவில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் என்று ஒளவைப்பிராட்டி கூறினார். நம்புலோலியூர் பார்க்கும் இடமெங்கும் நீக்கமறத் திருக் கோயில்களைக் கொண்டது. நம் முன்னோர்கள் கட்டி வழிபட்டு வந்த திருக்கோயில்களே நமது அழியாச் செல்வங்கள். அமைதியும் தொன்மையும் அருளும் நிரம்பப் பெற்ற இத்திருக்கோயிலுக்கு ஒருமுறை வந்து தரிசனம் செய்து நல்லன எல்லாம் பெற வேண்டுகின்றோம். இத்தெய்வத்தை வணங்கி அவரின் திருவருள் பெற்று இம்மையிலும், மறுமையிலும் பெருவாழ்வு அடைவோமாக!

தென்புலோலியூர்

கே. கே. யோகேந்திரன்



# இன்றில் பழந் தேவதைகள் தூசி படிந்த வீணை கொஞ்சம் நினைவுகள்...

வீட்டுக்குப் பின்னால் ஒரு காலத்து எங்களுக்கு சிநேகமான சிறு காடு. உயரமான மரங்கள்... சரி விபரணை போதும், முக்கியமானவை அத் தூங்கு மூஞ்சி மரங்கள். ஊடே ஓடுகிறது, பாதங்களுக்கு சற்று மேலே குளிர்ந்த நீர் முட்டும் ஆறு. நானும் நண்பர்களும் மீன் பிடிப்போம். நேரங்கள்... பற்பல மணித் துளிகள் கடக்க கடக்க அது சார்ந்த எந்த கவலையும் அற்று சொப்பிங் பாக்குகளுள் சிக்குப் படும் மீன்களுள் இருப்புக்கான போட்டியிடல். நினைக்கிறேன். ஆற்றுக்குள் நின்று, நிமிர்ந்து பார்த்தால் கட்டிடங்கள் உயர அதற்கும் உயர வானம், இறுக்கிக் கட்டலாம் அவ் அழகை. ஹெலிகொப்டரால் வந்து ஆற்றுக்குள் இறங்கும் சொப்பனம் என்னுள். இன்று அவ்வாறு நான் செய்ய இயலுமா, கனவுகள் உண்டா. ஆற்றில் மீன் பிடிப்பேனா. என் சின்னச் சகோதரர்களுள், ஹீரோயின் ஆக யார் அதிகம் மீன் பிடிப்பதென சகோதரி நண்பிகளான நாங்கள் முயலுவோமா? சொல்லு ஜெகன், ஒவ்வொன்றையும், சின்னச் சின்ன விடயங்களையும், உன் எல்லா சேகரிப்புகளையும் நீ என்னுடையவள் எனத் திமிர் பாராட்டாமல் சொல்.

எதைக் குறித்தும் விளங்கமோ சுலபத்தில் கூறிட இயலா: சுதந்திரம் என்பதே சுதந்திரம் இன்மையின் பிரம்பை பிடித்த பிம்பம். பிம்பங்களுக்குள் வாழமுடியாது, அதிலும் அநுமானங்களைத் தாங்க முடியாது. ஆதலால் சொல்லு, பார்வைகளைப் பற்றி உனக்கென்ன தெரியும். சப்வேயில் ஒரு இளைஞன்: ஒரு முதிர்ந்தவன் இரு வேறு முகத்தைப் பார்க்கையில் தளம்பும் பார்வைகளைப் பற்றி உனக்கென்ன தெரியும். மதுமதியைக் காதலித்தபோது நான் உணர்ந்தது காதல் பொறாமையல்ல இருப்பின் நேசத்தின் இயல்பென்று தெட்டத் தெளித்ததுபோல எனக்கு நீ சொல்ல வேண்டும், காலங்களுக்குரிய கதைகளை...

அவை என் கண் நோவை எடுக்கட்டும்.

உடம்பு வலிகளைப் போக்கட்டும்.

ஆத்மாவின் துக்கத்தை அகற்றட்டும்.

மரங்கள். நெட்டை ஒடிசலாய். பனிக் காலத்திலும் இலை உதிர் காலங்களிலுந்தான் தங்கு தடையின்றி இரசிக்க முடிகிறது. அடர்த்தியான கிளைகள் மோகமூட்டி காற்றிசை கமுக் கூடுகளையும் சிலிர்ப்பிக்கும் வெய்யிலில் தனித்து பாதையில் நடப்பது பகலிலும் பயமே. இலைகளின் மறைப்பற்ற குளிர் காலங்களிலும், இலை உதிர் காலங்களிலும் இதன் ரகம் வேறு. நட்பாய்க் கை பற்றும் சிநேகம்போல அவையும் உறவு கொள்ளும். அவன் ஆச்சரியப்படுவான்.

"எல்லோருக்கும் செழுமை பிடிக்கும். உனக்கென்னடா எண்டா..."

"செழுமை தவிரும் எளிமை" என அவள்.

அவனோ தொடர்ந்து, "இலைகளில்லாத மரங்கள் செட்டை இல்லா சிறு குருவிகள் போல" எனுவான்.

"ம். ஆனால் இந்தக் காடுகளில் ஒன்றில் குருவிகளின் சிறகுகள் இலை மறைப்பூடேதான் ஒடிக்கப்பட்டன தெரியுமா? ...எனினும் உனக்காகச் சின்ன உடன்பாடு. மழைக் காலங்களில் மாத்திரம் எனக்கு இலைகளை உடைய பச்சை (அழுத்த) மரங்களும், பசும் புற்தரையும் வேணும், அக் குழுமைக்காக"

"இல்லை. செழுமையில் விளைவதே குழுமை" விடாப் பிடி பிடித்தான்.

காது மடல்களை நெருங்கி வசீகரமாய், "சறோ... ஒத்துக்கொள்ளேன" கிசுகிசுப்பாய் எழுதினான்.

"உடன் பட்டேனே போதாதா? "

"ம்ஹூம். சொல்லு, அழகு: காதலுடன் பார்க்கையில் இயற்கை அழகு"

"சரி இயற்கை அழகு காதலுடன் பார்க்கையில"

"ஹே... இயந்திரமாய்ச் சொல்ற"

"இயற்கை அழ...கு கா......தலனுடன்"

"நக்கல்"

"உண்மை"

அவன் கோபமானான்.

பிரதீபா தில்லைநாதன்

தலைகளைக் கோதினாள். கோபுரமாய் எழுந்தன கட்டிடங்கள். நீள எழுந்த கம்பத்தின் மேலே தன் குறியைத் தொட்டபடி அண்ணாந்து வானத்தைப் பார்த்தான் சிலை மனிதன்.

நகரம் நனையும். மழை. பளிச்சிட்ட புற்தரை. அவளும் அவனும். இறுகப் பற்றின கரங்கள் தளர்வது அவனின் கேள்வி விழும் வரைத் தோன்றவில்லை. இரவு. இல்லை சாம்பற் புகார்: மரத்தடி. சரோவுக்குச் சிநேகமான மழை மூக்கிலும் முடியிலும் பிரத்யேகமாக வடிய நீர்ச் சுவை வாயுள்ளும் பூர, உதடுகளால் உள் எடுத்து வெளி விட்டாள். மழை பேசும்...

ஒருநாள் அவளும் ஜெகனும் கொட்டும் மழையில் நின்ற நினைவு. அன்றும் காரிருள். இடை மின் குமிழ்கள் அற்ற நிலாவொளிப் பாதை. புகை. அவன் அணிந்திருந்த ஆடை நிறம் மறந்து விட்டது.

கூதல். உடல் கூச ஒட்டிக் கொள்கிறாள். அவன் மீண்டும் கேட்டான். இந்தத் தடவை சிறிது சாந்தமாய்...

"உண்மையைச் சொல்லு சரோ. உனக்கு அவனில காதல் இல்லை? இருக்கேல்ல?"

முழுவதுமாய் நம்பாவிட்டாலும், "இல்லை" என்ற ஒற்றைப் பதில் வேண்டிக் கேட்கிறான். "இருக்கு" என்பது தீர்மானம். அதிலும் திருப்திப் படப் போவதில்லை.

அலட்சிக்கும் மழை இன்னமும் சிநேகம் கொள்ள விரும்பியது போல் இருந்தது. கடும் கருமை சில்க் மேற் சட்டை மிகவும் அந்தரங்கமாய்ப் பேசியது. நீல டெனிம். பருத்தியும் சில்க்கும்போல கறா(ர்!) பேசாது. சொர்ணபிற பிரக்ஞைகள் ஏதுமற்று தனை மறந்து ஆடுவாள். ஜன நடமாட்டமோ, பிறரின் நெருக்கமோ அவளைப் பாதிக்காது. அவளைக் கிளர்த்திய சினி பாடலில் ஒரு இசை உருவாக்கி, இசைவாய் உடம்பு மெல்லிய கம்பியிலும் வேகமாய் வளைய, ஒரு கை தேர்ந்த நடனக்காரியாய் -அறைக்குள் ஆடுவது போலல்ல, மழை நடனம் நளினமாய் இருக்கும் (கூடவே நண்பன் ஆடுவதால் இருக்கலாம் (வெகு காலம் கேட்டபடி இருந்தாள், தனக்கொரு நடனத் துணை வேண்டி!)- அவனது முறையை தானே உருவகித்து ஆடுவதைப் பார்க்க ரசமாய் இருக்கும். "எப்படி இருக்கு" கேட்டு, அதுவும் போதாது. சரோ மழையோடு சிநேகிக்க விடாமல், ஆடலை முழுதுமாய்ப் பார்க்குமாறு பிடிவாதப் பிடி பிடிப்பாள், இவனைப் போல...

அவன் திடுமென எழுந்தான்.

"சரோ! நீ பலமா யோசிக்கிற அளவுக்கு கடினமா நான் கேட்கேல்ல. இது ஒரு "இல்ல-இருக்கு" கேள்வி. நீ யோசிக்கிறத பாத்தா சிக்கலோ எண்டு தோனுது."

எல்லாம் காதில் விழுந்தது, விளங்கியது. என்ன சொல்வது... தெரியவில்லை.

ஜெகன் என்ன செய்துகொண்டிருப்பான். சறத்தை இழுத்து தொடை இடை வைத்து கதிரையிலமர்ந்து நிதானமாய் வரி பிசகாமல், சாவகாசமாய் அவனால் அவளைப் பற்றி யோசிக்க முடியுமா, அசைபோடுவானா. சிரித்துக் கொள்வானா.

(சலிப்பு எனப் போட்ட புத்தகத்தை மீள வாசித்தேன், பிடித்திருந்தது. எதையும் ஒரு பட்ச முடிவாய்த் தூக்கித் தூர எறியும், நிராகரிக்கும் வரட்டு ஈகோ பிடிச்ச இந்த புத்திஜீவிகள்போல நானும் ஆகிவிட்டேனோ என என்னைத் திட்டிக் கொண்டேன். அட பிடிக்கவில்லையென்று பலருக்கு விமர்சித்துவிட்டேனே, இனி எப்படி பிடித்ததெனச் சொல்வதென அவர்களுக்கேயுரிய குணாதிசயங்கள்



## மாதமொரு சமையல்

## ஸ்பிரிங் ரோல்ஸ்

**தேவையான பொருட்கள்**

கோதுமை : 1/4 கிலோ

கேரட் : தேவையான அளவு (பொடியாக நறுக்கிறது)

கோஸ் : தேவையான அளவு (பொடியான நறுக்கியது)

பீன்ஸ் : தேவையான அளவு (பொடியான நறுக்கியது)

மேகி : சிறிய பாக்கெட்

உப்பு : தேவையான அளவு

எண்ணெய் : 1டீஸ்பூன்

தொற்ற -இப்படி உனக்கு நிகழ்ந்துள்ளதா ஜெகா. தப்போ, எழவோ, சொன்னால் பார்! பார்! உன் முடிவெல்லாம் தப்பென சொல்ல வெளிக்கிடுவார்கள். வெறுப்பேற்றுவார்கள். பிறர் சொல்வதை ஏற்கவேண்டிய நிர்ப்பந்தத்தை உண்டாக்கும் சகல சக்திகளையும் நிராகரிக்கிறேன். ஒரு மனிதனின் கால வளர்ச்சியை புரிந்துகொள்ளாத மூச்சுத் திணறும் சூழ்நிலையில் நிற்பதாய்ப் படுகிறது. நேற்றைய தடக்கல்கள் இன்று உறுத்துகின்றன.)

"கஸ்ரமாயிருக்கு சறோ"

இப்போது உண்மை சொன்னான். வான் நீர் ஊற்றாவிட்டால் விழிக் குழப்பம், ஒளிப் பீறிடல், நீர் ததும்பல் நிச்சயம் தெரிந்திருக்கும். மார்புக் கல் இளகியது.

"யோசியன்டா, ஓம் எண்டு சொல்றதில எனக்கென்ன கஷ்ரம" அவளுக்குப் புதினமாய் இருந்தது.

அவனுக்கு போதுமாயில்லை. எனினும் அப்போது அதை-அவள் குரல் தரும் திடத்தை-தன்னுட் போட்டு மௌனமானான்.

மழையும் மௌனித்துக் கொண்டதுபோல் இனம் புரியாததொரு சோகம் இறுக அணைத்தது. கண்களை அழுத்தி மூடினாள்.

ஆண்டுகள் பற்றின பிரக்ஞை அவசியமற்றிருந்த பருவத்தில் அவ் வார்த்தைகள் இருந்தன, ஆதி நிர்வாணத்தின் நேர்மைபோல சுத்தமாய். நீங்களோ இறுக்கமாய் இருக்கிறீர்கள், உங்களிடம் தரம் பிரிக்கும் அகராதிகள் இருக்கின்றன. சீர்-ஒழுக்க அழிவுகள் குறித்து: அறத்தின் ஆயுள் குறித்து வரையறுத்து, அதில் வாழ ஆரம்பிக்க, கட்டுக்குட்பட்டவை கட்டைக் குலைக்கும, அகராதி கொஞ்சமாய் அதிர்ந்ததா. அதிர்வுகளுக்கு அதிரா புதிதொரு அகராதி தேவையாய் இருக்கிறதா. மொழி அழகானதில்லையா, அதற்கு எல்லைகள் வைத்த உங்களில் எவனால் அதன் மூலத்தை கண்டறிய முடியும்.

சொற்களின் வரையறையை மீறிய உலகினுள் நுழைந்தேன். பூரிப்பின் மொத்தம் அவனாகி இருந்தான். எதிர்பார்ப்புகள் இல்லா உறவு கனவாகி எதிர் எதிர் பார்ப்புகள் அலுத்துவிட்டன. ஆகாசம்போல முகில் மறைப்பினும் கொஞ்சமேனும் உண்மை பேசி வாழ பெரு விருப்பு வந்தது. எதிர்பார்புகளின்றிக் கை கோர்த்துக் கொள்ளவும், அணைத்துக் கொள்ளவும், கண் சொருகித் தூங்கவும் நட்பின் கரங்கள் விசாலமாய் நீள காதலிக்கும் ஆணின் மிருதுவான வருடலாய் சிநேகம் (காதலிக்கும் ஆண்களின் சாபம் அப்படியல்ல, பொல்லாதது!) துளிர் விடும் மனக் குவியலில் ஜெகன்.

எப்பேர்ப்பட்ட பெண் என அநுமானித்துக் கொண்டிருந்தனா. நேரே மார்பு நடுவில் ஈன சுரத்தில் முனகக் குத்திப் போயின கரங்கள். ஆர்ப்பரித்து எழுந்து கீழே விழுந்து உடைந்தன வேறு சில. அவன், "உன்னால் எப்படி இப்படி இருக்க முடியுது" என்றான்.

உதடுகளைக் கீறி முத்தமிடும் ஓர் ஆவேசம் போல எங்கெங்கிருந்தோ அநுமானங்கள். பிற பிற... அவற்றுக்குப் பொறுப்பானவர் யார். என்னை அநுமானிக்க எவருக்கும், எந்த எவனுக்கும் அதற்கான அருகதையும் (அது கனேடிய, புகலிட வரையறை சட்டதிட்டங்களுக்கு உட்பட்ட!)

**செய்முறை :**

- கோதுமை மாவை சப்பாத்தி இடும் பதத்தில் பிசைந்துக் கொள்ள வேண்டும்.
- பிசைந்து சிறிது நேரம் ஊற வைக்க வேண்டும்.
- காய்களை எண்ணெயில் அதிகம் தண்ணீர் சேர்க்காமல் வேக வைத்துக் கொள்ள வேண்டும்.
- மேகி சிறிய பாக்கெட்டை தனியாக வேக வைத்துக் கொள்ள வேண்டும்.
- தேவையான அளவு உப்பு மற்றும் மிளகாய்ப் பொடி போட வேண்டும்.
- வேக வைத்த காய், மேகியை நன்றாக கலந்து வைக்கவும்.
- கோதுமை மாவை வட்டமாக இட்டு அதனுள்ளே வேகவைத்த காய்கறி மற்றும் மேகியை வைத்து ரோல் போல் மடித்துக் கொள்ள வேண்டும்.
- வாணலியில் எண்ணெய் ஊற்றி அதில் ரோலைப் போட்டு ரோஸ்ட் செய்து பொன்னிறமாக எடுக்க வேண்டும்.
- தக்காளி சாஸ் தொட்டுக் கொள்ள வைத்தால் சுவையாக இருக்கும்.

**நன்மைகள்**

* கோதுமை மாவில் செய்வது
* காய்கறிகள் சேர்ப்பதால் சத்தானது.
* எளிமையாக நாம் தினமும் உபயோகிக்கும் பொருள்களைக் கொண்டே செய்யக் கூடியது.
* எண்ணெய் அதிகம் தேவையில்லை செலவு குறைவு, சத்தி அதிகம்.

வார்த்தை சத்யமும் உண்டா. புண்ணாக்குப் புடுங்கல்களுள் அரசியல் கூத்தாடி அ்ஃதுள் தம்மை மறைத்த அசுத்த விழிகளின் கறைகளைப் பிடுங்க முடியாது முரண்டும் என் அதிர்வுக்குள்ளான சிறு உடற் துடிப்பை, அதன் துயர இழைகளில் பின்னலாய்த் தொங்கும் மாமிச மனிதர்க்கு எப்படி புரிய வைக்க. ஒழுக்கங்களை நிராகரித்த - அதற்கு நியாயங்கள் கொண்டுள்ள - வாய் ஜாலக்காரர்க்கு இனிக் குழந்தையைப் புணர்தலை எழுதவும் நியாயம் கிடைக்கும். அதை இருந்து பார்த்துப் பேசி, இரசித்துச் சிரித்து, -கு(க)டி மொழிதலின் பின், "அது குழந்தையைப் பொறுத்தது" என விமர்சிக்க நான் தயார் இல்லை. உள்ளே விஷமாய் தங்கிய நெருப்போடு அணையாதிருக்க விரும்பினேன்.

அந்தர(ங்க)த்தில், காற்று-வார்த்தைகள். ஆம், நான் வாழ ஆரம்பித்தேன்.

சுப்பிறின்ரனின் நோட்டிஷின் தொடர்ச்சியாய், மாலை மயங்கி களைத்து உறங்கி விட்ட பல நொடிக் கரைவில், குசினி-ஹோல்-அறைகள் கொண்டுள்ள மேசைகளில் சிவத்த, மஞ்சள், மங்கிய வெள்ளை வர்ண மெழுகுதிரியுடன் ஓர் ஒளி உயர்ந்தது. மின்சாரமற்ற இரா. மழை வந்து எல்லாவற்றையும் கெடுத்துவிட்டது என அப்பா - பிரதியாய் - அம்மா பேசிக் கொண்டிருக்க. சொர்ணா ஒழுங்கற்ற ஓவியமாய் படித்தபடி..

நெஞ்சம் தட்டையாய்த்தான் இருந்தது. அவனின் கையின் அழுத்துதல்களும், குரலின் அழுத்துதல்களும், மனசின் அழுத்துதல்களும் ஒவ்வொரு தூறலுக்கும் ஒவ்வொரு விதமாய் அழுத்தலாயிற்று. சுதந்திரமாய்க் கிடந்த மார்புகளுக்கு நடுவில் கணவாய் ஓடுபோல ஒன்று தங்க, தவிப்பு. எப்பொழுதும் தாக்கும் போரிட அழைக்கும் வருத்தங்கள் சுமக்கும் நெஞ்சோரம் சத்தமிடும். கண்ணாடி யன்னல் வழி, அதுவும் நீராவி படிந்த தெளிவின்மையூடே, எதையோ தேடி கைகளை விசாலித்து அம்மா என்று பிரபஞ்ச பேரானந்தம் கொள்ள நுனிகள் ஏங்கின. ஆன்மா துயரமான நடிகையை, திரையில் வெறும் பிண்ட நடனமாய் உடம்பால் சந்தோஷித்தல் சாத்தியமெனில் சரிதான், அ்ஃதால் மேலும் தொடர்ச்சியாய்ப் பிண்டங்களை மகிழ்வாக்க. ஆழ்ந்த மூச்சு கிளம்பும்.

...நகரம் நனையும் பொழுதுகளெல்லாம் விசனங்கள் சூழ்கின்றன. நேற்றும் அவன் கோபங் கொண்டான். அதைவிட, சொர்ணா பரீட்சைக்குப் படித்துக்கொண்டிருக்கிறாள். மெழுகுதிரியுடன் நான் உன்னையும், உறவுகளையும், நினைக்கிறேன். இந்தக் குழந்தைகளின் வேதனைகளை நினைக்கிறேன்.

உறவுகளிலிருந்து விலகி விடுவதாக, அன்று முடிவெடுத்திருந்தோம். எம் போன்ற முனைப்பற்ற குழந்தைகள் சோர்வுற்றுக் குழம்பின. புரிகையில் தவறு செய்ததாய், எம் பிடியில் குழந்தைகளைத் தக்கவைத்த வலி எழும்பியது. வாழ்க்கை இவ்வளவு கடினமா ஜெகன். காலைப் புலர்வில் நம்பிக்கை தரும் சூரியன் கர்ண கொடூரமாய் ஏன் சுட்டெரிக்கவும் செய்கிறான்.

கண் முன் உருகும் மெழுகில், பிரியத்துக்குரிய பெண் படித்துக் கொண்டிருக்கிறாள். உலகத்தைப் பற்றி என்னதான் படிக்கிறாள்?

அதை எப்படி - யஸ்ட் லைக் தற - என ஒரு சிம்பிள் ஸ்ரேற்மன்ற் ஆய் மறந்தே விடுவது. நள்ளிரவு தாண்டிய பின்பும் எப் பிரக்ஞையும் இன்றி அநுபவித்த மணி மணிச் சுதந்திரம், கேள்விகள் இன்றி இவர்கள் முன்னுதாரணமாய் எடுத்துவிடலாமோ என்கிற அநுபவத்தின் எச்சரிக்கைச் சமிக்ஞை, உடைந்து போனேன். என்றுமே ஒட்ட முடியாத கண்ணாடித் துண்டுகளாய் என் சகோதரிகளை -முக்கியமாய் கொழும்பில் ஒரு மெல்லிய சிறுமியாய் சிலுப்பாய்த் தலையோடு துள்ளிய குழந்தையை - காப்பாற்ற முடியாதவளாய் ஆயினேன்.

குழந்தைகள் இப்போ குழந்தைகள் அல்ல. அவர்களின் ஏன்கள் மீடியாவால் அமுக்கப்படுவது போதாதா. என் குழந்தைகளை முட்டாள்களாக வளர்ப்பதை நான் விரும்பவில்லை. இளவரசி டயானா: தேவதைக் கதைகளின் அழுத்தங்கள் மிகு அந்த "மீடியா பிகர்" மீது என் சகோதரிக்கு அபரிமிதமான காதல் (அவளின் ஆடைகளுக்காக மட்டும் அல்ல!). அவள் தன் புத்திரர்களை, லண்டனின் மிக மோசமான பக்கங்களுக்கு அழைத்து "இதுதான் உண்மையான பிரித்தானியா. நீங்கள் வளரும் அரண்மனை அல்ல" என்பாளாம். கண்கள் விரித்து, வெகுஜன புனைவுகள் சகிதம் கதை கதையாய்ச் சொல்வாள். மேலவும், கவிதை, கவிதை என்று எழுதுவாள். கடைசியாய், ஆங்கில வகுப்புக்காக என்று ஒன்று. எல்லைகளை மீறும் அடி மன ஆசையும், மீற முடியாத பிம்பங்களின் மயக்கமுமாய், இந்தப் பெண் சுழலின் யதார்த்தம்.

நீ, என்ன சொல்கிறாய்.

வீட்டிற்கு வரும் அப்பாவின் நண்பர்

அச் சிறு வயதில்



என்னைத் தொட்டதும் [illegible] படுத்தியதும்

நகக் [illegible] [illegible] கீறலாய்

இதயம் அடித்ததும்

பேரழகி என பெருங்கவிஞர் சொன்னதும்

வயது கேட்டு பின்

அஃதில் ஆர்வமோ எனப் பிறர் கணித்ததும்

என்னை எல்லோரும் நெருங்குவதும்

எதை வைத்து, எந்த அடிப்படையில்

என நான் கேட்டேன்

கேட்கையில் சிலவேளை முளைத்தும் விடுகிறாள்

பையன்கள் தொடர்வதை அங்கீகாரம் என

கிளர்ச்சியுறும் இன்னொரு பெண்.

நான் புதுமைப் பெண் என

சேலை, நகை உடுத்தும் விசித்திரப் பெண்ணும்

என்னுள் இருக்க

அசட்டுப் பிசட்டாய் என்னைப் புகழும்

ஒருவனல்ல, என்னை என்னாய் நேசிப்பவனே எனும் நான்

ஒரே பெண்ணாய், ஒரு முகத்துடன் வ(ள)ர

இருப்பதோ சொற்ப காலம்.

எம் ஒவ்வோர் பருவ ஆரம்ப முடிவிலும், அம்மா தன் வயிற்றில் நெருப்பைக் கட்டினாளோ இல்லையோ என் சகோதரிகளை சூழவும், ஓநாய்களும் உடும்புகளும் பாயவும், உடலங்களை சிராய்க்கவும் தயாராய் இருப்பதாய், புத்தியுள்ள இடமோ (அதை நிர்ணயிப்பது யார்), புத்தியற்ற இடமோ (இது தேவலாம்), அவர்களின் குரூர விழிகளும், கூர்ந்த நகங்களும் என் அழகு (அவளது அடையாளங்களுடன்) சகோதரியைக் கீறி விடுமோ, விழும் இரத்தம் உலக வெளியில் முக்கியமே அற்ற சிறு செய்தியாய் ஆகுமோ எனப் பயங்களைக் கட்டினேன். அந்தக் காலங்கள் இன்றென்ன கனவுகளா ஜெகா, வாழும் ஒவ்வொரு பெண்ணினதும் வாழ்தலுக்கு எதிரான போர் முன்னே நிறுத்துதல்.

பெண்ணின் இயல்புகள் எப்படியெல்லாம் எடுத்துக்கொள்ளப் படுகின்றன என நினைத்தேன். தத்துவங்களால் நான் துரத்தப் படுகிறேன். எல்லாவற்றையும் எழுது எழுது என்கிறாள் என் தோழி. வருத்தப்படாதே உன் போன்ற அறிவார்ந்த வர்க்கங்களுக்கு நான் ஒரு போதும் போட்டியாகப் போவதில்லை. அதோடு, நான் எப்படிப் போட்டியாக முடியும். நிறுத்து. உனக்குத் தாழ்வு மனப்பான்மை என மீண்டும் ஆரம்பிக்காதே. இத் தீர்ப்பு வழுங்கல்கள்தான் அபத்தம் நிறைந்தவை. இப்படி பேசுவதால் நான் ஒரு பக்கத்தைப் பற்றியே பேசுவதாக நீ சொன்னாலும் அதைப் மனதில் வைத்துக் கொள்ள மாட்டேன்.

நீ, வேறு எப்படிச் சொல்லுவாய்.

அந்த ஓவியத்தின் தலைப்பு “இனிக் கனவுகள் இல்லை.” முந்தி, கோட்டுச் சித்திரங்களில் மனம் பறிகொடுக்க முன்னம், தண்ணீர் ஓவியத்தை லாம்பில் காயவிட வருவதில் எழும் பூரிப்பு. கனவுகள் இல்லையா, கனவுதல் இல்லையா, கனவுகள் எப்படி இல்லாது போகும்... ஓவியத்தின் உணர்த்தல் வசப்படா கவி மொழி போலொரு போதையாய்.

“சமூகத்துக்கு நீ அவநம்பிக்கையையும், விரக்தியையும் தருகிறாயா” அவளுடைய கேள்வி மேம்போக்காய் போயிற்றோ என்னவோ... அவன் சொன்னான், “வலியின் விளிப்பில் வார்த்தைகளும், உருவின் அழிவில் கனவுகளும் இல்லை”

நாம் மிகுந்த அவநம்பிக்கைகளைச் சுமக்கும் சந்ததியுள் நிற்கிறோம முடிவுறுத்த அன்று கறுத்த நிறக் கலவையுள் செம் மஞ்சள் கலந்த உருவழிவின் அழுதலைத் தரிசிக்கும் கனா வந்தது. கனவுகளைத் தருவித்த ஓவியம் “கனவுகள் இல்லை” என்பதில் உலகின் குரூரம். அவன் உபயோகித்த சிறு கோடு பெரும் கீறலாய் தொந்தரவு பண்ணிற்று.

ஒரு கவிதை பல அதிர்வுகளை ஏற்படுத்திவிட்டு இருக்கையில், எப்படி இருக்கு எனவொருவர் கேட்க நல்லாயிருக்கு எனும் பதில் தர நேர்ந்த கதியாய், நேற்று சிறகொடிந்த தேவதையின் துக்கம் பற்றிப் பேசினான் ஒருவன். வழமைபோல் சிறகே இல்லாத் தேவதை பற்றிக் கேட்க நினைத்தாள், கேட்கவில்லை.

அவளும் ஜெகனும் இனி எப்போதாவது சந்திக்கும்போது “ஒருவேளை இன” தத்துவத்தின் கீழ்

## நன்றி

பஞ்சபாண்டவர்களுக்கும் துரியோதனர்களுக்கும் சண்டை ஆரம்பிக்க இருக்கிறது. ஸ்ரீ கிருஷ்ணரை தூது விடுகிறார்கள். கிருஷ்ணர் துரியோதனனிடம் தூது சென்ற பின் கர்ணனை சந்திக்கிறார். நீ பஞ்சபாண்டவர் பக்கம் வா என்று கர்ணனைக் கேட்கும் பொழுது நீ சொன்னதை நான் ஏற்றுக் கொள்கிறேன். ஆனாலும் தாய் தகப்பன் தெரியாத எனக்கு அரசு தந்து செல்வம் தந்து வாழ்க்கை தந்த ஒருவன், அவன் என்னதான் கெட்டவனாக இருந்த பொழுதும் அவனை விட்டு நான் வந்தால் நன்றி என்ற சொல்லுக்கு என்ன பொருள் கண்ணா! ஆகவே அவனுக்கு நான் நன்றியுடையவனா இருப்பதே சரி என்று கண்ணனை அனுப்பி விடுகிறார்.

வாழ்வின் துயரங்களைப் படித்தவாறே, "உன்னோட வாழ்ந்தா நல்லாயிருக்கும்... நல்லா இருந்திருக்கும" என்றவாறே "நீ கேக்கேல்லியே" "நீ கேட்டிருக்கலாமே" என்றெல்லாம் புலம்பித் திரிவோமோ எனத் தன்னுள் கேட்டுக் கொண்டாள். ஆண் பெண் உறவு எப்போதும் உடலோடு என பின்னிய அவர்களின் குரல்களாய் காற்றில் கண் தெரியாக் கிருமிகளாய் வாழ்ந்தன அக் கேள்விகள்.

அவனைப் பற்றி யோசியாதபோது, தூரமாய் ஜெகன் வந்து ஒட்டிக்கொள்கையில் கூடப் பயணிக்கையில் சிரிக்கையில், சக பயணியை விட பச்சையாய், இரு வேறு தடவை முதலாழி "காதலனோடு கனவா" என நக்கலடித்துப் போனான். அவனுக்கோ அவளும் ஜெகனும் "வெறும் நண்பர்கள்" என்பதை நம்பவே முடியவில்லை. அப்படி எப்படி இருக்க முடியும் என்கிறான். ஏதும் இருந்தால் தனக்குப் பிரச்சினையில்லை என்றும், ஏன் மறைக்கிற என்றும் கேட்கிறான். அவன் மட்டுமென்றல்ல. பால் பாகுபாடில்லாமல், அனைவரும் கேட்கும் இக் கேள்வியை தன்னிடம் மாற்றிக் கேட்டாள்.

"நாம், ஏன் காதல் வீதியில் உலாப் போகவில்லை" (பொதுக் குறிப்பு: சிரிக்காதே.) அப்பாவிகள் போல அவர்கள், "அதெப்பிடி ஒரு ஆம்பிளையும் பொம்பிளையும்...." என ஆரம்பிக்கையில் நான் சலிப்படைகிறேன். "அம்மாடியோவ் அதுவா" என இமைகளைக் கொட்டி, ஒரு நாடகம் போடலாமா, தோன்றி விடுகிறது. அத்தனை அலங்காரம் அவர்கள் பேச்சில். எனக்கும் உனக்கும் இடையில், "எல்லைகள் கடந்து" வராத ஒன்றை இழுத்துப் பிடித்து இருத்தியிருக்க வேண்டுமோ. இயந்திரத் தடங்கள் நெருக்கும் போதில் அதை அழித்து முழு பலத்துடன் எழுவேன்.

இப்போதெல்லாம் நிரம்ப யோசிக்கிறேன். பிற வீடுகள் செல்லும்போது, நண்பர்களாக இருப்பினும், படுக்கை அறை செல்வதில்லை என உனக்கு கோட்பாடு இருப்பதுபோல எனக்கும் சில எல்லைகள், கோட்பாடுகள், முடிவுகள் எனக்கென்று எனக்காக இருக்கா என. மனித பலங்கள் எத்தனை வீரியம், ஆனால் அவன் பலகீனங்களால் அல்லவா அலைக்கழிந்துகொண்டிருக்கிறான். பலம், பலவீனங்களின் நிர்ணயம் எது. அவை அவனுக்குரியவையா, நியாயங்களைத் தேடப் பயிற்றுவிப்பது எது? பயங்களா... ஈகோவா.......

முறிந்துபோய் கிடக்கும்போது எழுப்பி உட்கார்த்தி விடுகின்றன, ஓடப் போகிறேன் என்றால் சரியான ஆ[illegible]ளோடதான் ஓடுவிங்க, என்றாற்போலான நம்பிக்கைகள். பொலிவுடன் ஜெகனின் குரல்கள் கட்டில் விரிப்பு மேலே ஜீவித்திருந்தன, ஒளிப் பீரிடலுடன் ஆயிரங் கோடி யானை பலம் சுமந்து.

கார்த்தி, ஆண்களின் உலகில் இருந்து நான் விரட்டப் படுகிறேன் எனக் கூக்குரலிட்டு, சில்லிட்ட கார்த்தியைச் சந்தித்தாள் மரக் காட்டு பாதையில் சாய்ந்து சாய்ந்து நடந்து வந்துகொண்டிருந்தபோது. என்னமாய் மெலிந்து விட்டாள்.

உடல் இழப்பிலும் சறோ சவுக்கியமா என மாற்றமற்று வாசனை உணர அவளால், அவளால் மட்டுமே முடியும்.

"என்னடி இப்பிடி ஆயிட்ட "உடல் ஸ்பரிசத்தை உள் எடுக்க நினைவு பறக்கும். அவளைத் தேவி என்பான் வேந்தன். எத்தனை பெயர்கள்... இறுதியில் பெயர்கள்தான் எஞ்சிவிட்டது, உருவங்கள் மறைந்து. கார்த்தியின் உருவம் அவளுள் வெகு நாளைக்கு முன்பு கண்ட கனாவாய் தோற்க, "எனக்கு மனிதர்களை மறப்பது இன்னமும் கனாவாய" எனும் அவளோ வாய் ஓயாள். நட்பு மட்டும் கரங்களை அழுத்தமாய் பதிக்கும். சுவடுகள்

"ஏன் எனக்கு எழுதத் தெரியாதாமா. அவர்தான் வந்து படிச்சக் காட்டினாராமா.. போடி என்னா சொல்ற நீ"

உன்னை நான்தான் வளர்த்து விட்டேன் என்று, தம் கை ஓங்கியிருப்பதை பார்த்து, ஏறிக் கொள்(ல்)ளும் மனிதர்களைப் பார்த்துச் சலிப்படைந்த, "வளர்த்து விட்டேன" போர்வழிகளைக் கண்டு அதிக பயமுற்ற. கொம்பனி புகழப்படும் தனித்தன்மை மழுங்கடிக்கப்படும் கொன்றாக்ட் நடத்துதல் அனைத்து மட்டங்களிலும் தொடர, சிரத்தையற்று மீளப் படியும் சுவடுகள் (சுவடுகளுக்கு முற்றப் புள்ளி வேண்டாமே)

உள்ளங் கையில் கோடுகள் அழிந்தன.

நாங்களே எல்லாவற்றையும் நிராகரித்தவர்களாக, -அதுவும் எக்கதக்கவாய் அல்ல, மிக மெதுவாய்- பிறகு இணைத்துக் கொண்டவர்களாக, கற்பு பற்றி மிகக் கடுமையாக இல்லை என நினைத்தபடியே சக மாணவனின் கை பட்டாலே மகா அபத்தமாக நடந்தவர்களாக, மயக்கமுற்று மீண்டவர்களாக எல்லா மாதிரியும் இருந்திருக்கிறோம் ஜெகன்.

அப்பாவை அம்மா குறைத்தால் துணுக்குற்றும், அம்மாவை அப்பா குறைத்தால் தவிப்புற்றும் வீட்டுக்குள்ளே நிறைவைத்தேடி ஆங்காங்கே குழப்பகதியான அனைத்தையும் அங்கீகரித்தும், நிராகரித்தும், தடுமாறியும் ஆயிற்று. இன்னமும்

எங்களுக்கு, சராசரி தமிழ் பெண்கள் என்ற ஒற்றை சொல் நவீன பெயர் சூட்டாளர்களால் பொருத்தப்பட்டிருக்கும், பொருந்தியும் இருக்கும், அவரவர் அகராதிப்படி. குழம்பியிருக்கிறோம் என குரல்கள் இறுக்கினாலும் சமயங்களில் தெளிவாகவும் இருக்கிறோம். படுத்து எழும்புபவர்களுக்காக, படுத்து எழும்புவர்களாக இலக்கியம் படைக்க முடியாது. இன்று நிர்க்கதியில் நிற்பதுபோல, எவனும் நினைப்பதுபோல எந்த ஆகர்சமும், நிலைப்பதாய் இல்லை. யாரும்... யாரும் வேசை என அழைக்கக்கூடிய உரிமை(?!)யுடையவன் முதல், அதை எடுத்துக் கொண்டவன் வரை எவனாலும் துணை வரமுடியாது. பாதையெங்கும் வரட்டு முகங்களின் பிரஸ்தாபத்துடன் கூடிய கடுமை.

தகாத உறவுகளை, ஆண் பெண் சின்னத்தனங்களை எல்லாவற்றையும் குழம்பி அங்கீகரித்ததாய், அதற்கு மாமி வேலை பார்த்ததாய் கேட்டு காலத்தைக் கோமாளியாய்ப் பார்த்தும் ஆயிற்று. எவர் எதை அங்கீகரிப்பது? இத்தனை வருட இடப்பாடுகள் ஒரு மேலோட்டமான வழியில் எடுத்துக் கொள்ளப்படும் என்றால் எந்த வரலாற்றை நம்புவது. எது எது மேலோட்டமானது, எதைப் பற்றிக் கொள்வது. அவரவர் பாதைகள், அவரவர் தேடல்கள், கொளுகொம்பில் ஏறி நின்று நான் பிறக்கும்போதே அங்கேதான் சகவாசித்தேன் எனும் மனிதர்கள்போல எவனும், எவரும், யோக்கியத்தின் வரையறைக மீறியும் ஆயிற்று. இனி என்ன, எல்லாக் கனவுகளும், எல்லாக் கணங்களும் எனக்குரிய மனிதர்களும் என்னிடமிருந்து விலகி விரக்தியுற்றுப் போனேன். தனித்த வனத்தில் மனசு அலைந்து திரிந்து எங்கெல்லாமோ அடிபட்டு, என் பிரியமான பெண் ஒருத்தி சொன்னது போல மீண்டும் மீண்டும் அறையப்பட்டு சிதைந்த உருபுகளில் என்னை-அவர்களைத் தேடினேன்.

மனிதர்கள் இலகுவாக இருக்கிறார்கள் ஜெகன். உலகின் வல்லமைகளை எதிர்க்கும் சக்தி நிரம்பிய பலம் மிகுந்த மனிதர்கள் உண்மையை நெருங்கும் சிரத்தையற்று இருப்பது சகிக்க முடியாதிருக்கிறது.

வாழ்க்கை பற்றின கேள்விகள் அற்று இருப்பது அனைவருக்கும் இலகுவாய்.

"...இந்த வயசில சரி பிழை இந்தக் கேள்விகள் என்னத்துக்கு சறோ"

என் உள்ளங்கைகளில் கோடுகள் அழிந்தன. தோள்களைக் குலுக்கி, "ஒரு அனுபவந்தானே..." என்கிறாள். விதிர்த்துப் போய்விட்டேன் (இப்போவும் அழுகை வருகிறது). தடுமாறி மண்டை இடிக்க, இடிந்து போய்க் குந்தி இருந்தேன். எல்லா தவறுகளையும் தெரிந்து கொண்டே செய்வதற்கு நியாயங்கள் தேடும், அதுள் எம்மை மறைத்துக் கொள்ளும் இந்த நூற்றாண்டு மனிதர்களுள் நான் கேள்விகள் சுமந்தேன்.

எனக்கென்று வண்ணங்களோ
எனக்கென்று எண்ணங்களோ
ஏன் எங்கேயும் இல்லை.

நான் வட்டங்களுக்குள் ஒழிந்தும், மறைந்தும் அடங்கியும் போக சமூகம் இட்ட்.இடும் தடைகளைக் கூறினால் ஏன் எவனாலும் புரிந்துகொள்ள முடிவதில்லை. எனது வட்டங்களை மீறி வரும் சவாலைப் பேசுதல் என்.பெண்-நிலை-வாதம் எனில் அதோடு உடன் படுகிறேன். அல்லாதபோது நான் விளக்கங்கள் கூற நிர்ப்பந்திக்கும் ஆணிடம் என்ன பதில் சொல்வது, ஏன் பதில் சொல்லும்.

என்னோடு பேசிக் கொண்டிருந்த அந்தப் பெண் சடாரெனச் சொன்னாள், "சறோய் நீ பெண்ணியம் என்ற தலைப்புள் பேசுவதானால் தயவுசெய்து தொடர்ந்து பேசாதே."

அதிர்வுடன், "நான் ஏதும் உனக்கு சம்மந்தமில்லாததைக் கேட்டேனா" என, பேசாமல் இருந்தாள் (அது மிகவும் இலகுவானதல்லவா). நாங்கள் ஒரு கடிதத்திற்கான சம்பிரதாயங்களைக்கூட மீறி விடலாம். பார், பட்டப் படு பகலில் ஆயிரம் இயந்திரங்களோடு இயந்திரமாய்த் திரிந்துவிட்டு நட்ட நடு ஜாமத்தில்(!) உன்னோடு பேச்சு. நகரங்களை நோக்கி வந்துவிட்டாலும், கிராமக் கவலைகளை இன்னமும் இழக்கவில்லை. அது சரியா பிழையா என்பதை விடு.

எப்படி இப்படி இருக்கிறாய் என நீயும் கேட்டிருந்தாய். நான், கடுங் குளிரில் அசைய மறுத்து அமைதியான யன்னற் திரைகளைப் போன்ற திமிர்களை மதிக்கிறேன். அவை நியங்கள். என்றாவது ஒரு கோடையில் ஆடித் தம் இருப்பைக் காட்டிக் கொள்ளும். காற்றின் வருகையில் அசையுமவை சொல்லும் செய்தி எனக்குயர்ந்தது.

நான் இதுதான், இப்படித்தான் என்பதுபோல எதையும் அறுதியிட்டுக் கொள்ள விரும்பவில்லை. என் வரையில், சமரில் ஆட்டமும், குளிரில் அடக்கமுமாய் காலங்களுக்கு ஏற்ப வெளிப்பாடுகள் தவிர, என்னைப் பற்றிச் சொல்ல ஒன்றுமில்லை. அப்படியல்லாதபோது சில புனைவுகள்-என்னைப்பற்றின அவர்களின் புனைவுகள் விசனப்படுத்துகின்றன.

## சிறுகதை

மிகச் சிலருக்கு, நெருக்கமான மிகச் சிலருக்குத்தான் அதிகமாய் என் ரகசியங்களைச் சொல்லியிருக்கிறேன். அதில் ஒன்று, என்னிடம் பெரிதாய் இரகசியங்கள் இல்லை என்பதே. இந் நிலையில், உன்னைப் போன்றவர்கள் நான் ரகசியங்களின் இருப்பிடம், புதையல் என்றெல்லாம் குறிப்பிடுகையில், உங்களின் உலகில் தென்றலாய்த் தாவி, உங்கள் பொக்கற்றுகளுக்குள் துழாவலாய்க் கிடக்கும் அவ் இரகசியங்கள் பற்றி, நீங்கள் அங்கலாய்த்து இருக்கையில், அடடா ஒன்றும் இல்லையே- புதிதாய் ஏதாவது உண்டாக்குவோமா எனத் தோன்றி விடுகிறது.

பிரைடா... நான் எனக்குள் அவளைப் படிய விட்டபோது, அவளது ஓவியங்களில் சுயம் எழும்ப, அவளானேன். அவளது ஓவியங்களை விடுத்தால் சுய குறிப்புகளிலும் அவளுக்கு எல்லாமே தீகோதான். நானோ அவனில் என்னைக் காணவில்லை.

நான் சுயநலமா, நான் திமிரா, நான் ஆணவமா (பெண்பால்-பெணவம்?), நீ ஏதேனுங் கூறு. ஆனால் நான் (கு) பிரைடா போல தீகோவில் எப்போதும் என்னைக் காணவோ துரோகங்களைச் சகிக்கவோ போவதுமில்லை. எனக்கு நான்தான், அவன். நான்தான் அவள், அது, இது உது சகலதுமே. நானில் என் கௌரவம், எழுத்தின் மூலம் ஏனெனில் இங்கு எனது வீழ்ச்சி வரலாற்று மாற்றம் அல்லவா?

சிறகுகள் விரிய விரிய, விளக்குகள் அற்ற வீதிகள் தெரிந்தன. கற்களும், மணலும், மழை வந்தால் மிருதுவான மண் தேங்கும் காய்ந்து வரண்ட இளமண் நிறம். அப்போது அவளுக்குப் பிடித்தமான தடிப் பாப்பிள்ளை விளையாட்டு (பெண்ணாகல்). "சக்கைப் பணிய" மணலில் குந்தி இருக்கும் தாத்தா. சின்ன வயதில் நான் அழகாக இருப்பேனாம். குண்டு குண்டு கன்னங்களும், பெரிய விழிகளும் (இவை போதாதா?). மழலை என்கிற பருவமே இளமையோடு சம்மந்தப்பட்டதல்லவா ஜெகன். பிரமித்துப்போய் என் சிறு பிராயப் பக்கத்து வீட்டு மனிதர் சொல்லுகையில், வெட்கப்பட்டுச் சிரித்துக் கொண்டு இருப்பேன். அந்த பிம்பங்களை உடைத்து, என் வீரபிரதாபங்கள் தவிர்த்து, நான் அப்போ "செரியான அழுகுண்ணியென்று" இமேஜ் இற்கு பங்கம் வருவது மாதிரி யாரும் பேசினால், என்னால் இப்பவுங்கூடத் தாங்கிக் கொள்ள முடியாது.

பாமரர் முதல் மனசு ஒவ்வாது வெறும் மூளை அப்டேற்ட் பண்ணப்பட்ட புத்திஜீவிவரை எம்மைப் பற்றி வைத்திருக்கும் வக்கிரங்கள் தெரியாமல் அந்த "அஞ்சேக்கர் காணிக்குள் உருவான உலகத்தில் குட்டி இளவரசிகளாக, சின்னவயது, அம்மா தைத்துத் தரும் கையற்ற குட்டைச் சட்டைகளைப் போட்டுக்கொண்டு, இராஜகுமாரன் கதைகள் கூட ஒரு பவித்திரமான அழகை, அன்பை, காதலைப் போதித்த-வளர்த்த மயிலிறகால் உடம்பை வருடிப்போன கணங்களில், நாமும் தேவதைகளாய் உலா வந்திருக்கிறோம் என நினைக்கையிலே, மனசுக்குள் உலகத்து மகழ்ச்சியெல்லாம் அடங்கிப் போகின்றன. மங்கி வரும் ஞாபகங்களிடையே, அபூர்வமான இந்த மீட்டல்களில்தான், தூசி படிந்த வீணைகள் இசைக்கின்றன.

நானும் உன்னைப் பார்க்க வேண்டும். இருவரும் ஒரு முறைத் தொட்டுப் பார்த்துக்கொள்ள வேண்டும். எழுதும் போதுகளில் மோதுமுன் இளமுகம், இப்போ உன் வீட்டுக் கண்ணாடி காணுமா. போலி மனிதர்களின் அவநம்பிக்கை சிதறல்களைப் புறக்கணித்து எதுவும் உன்னை தடுக்காதவரை எழுது.

ஆனால் ஒன்று, அதே வீதியில், அதே எண்ணங்களோடு, மீண்டும் ஒருமுறை நடக்கலாம் என்றா நினைக்கிறாய். ●

# அஜீரணம்

மாம்பழம் அதிகம் சாப்பிட்டு அஜீரணம் என்றால் பால் சாப்பிடவும். நெய் சாப்பிட்டு அஜீரணம் என்றால் எலுமிச்சை ரசம் சாப்பிடவும். வாழைப்பழம் சாப்பிட்டு அஜீரணம் என்றால் சிறிது சமையல் உப்பு சாப்பிடவும். கேக் சாப்பிட்டு அஜீரணம் என்றால் சிறிது வெந்நீர் சாப்பிடவும். பால் அதிகம் சாப்பிட்டு அஜீரணம் என்றால் வாழைப்பழம் சாப்பிடவும். தேங்காய் சாப்பிட்டு அஜீரணம் என்றால் சிறிது அரிசி சாப்பிடவும். பருப்பினால் அஜீரணம் என்றால் சிறிது சர்க்கரை சாப்பிடவும். பப்பாளிப் பழம் சாப்பிட்டு அஜீரணம் என்றால் தாராளமாக தண்ணீர் சாப்பிட வேண்டும்.

ஒரு கட்டு மணத்தக்காளி இலையை ஒரு ஸ்பூன் எண்ணெய் விட்டு நன்கு சுருள வதக்கவும். அத்துடன் ஒரு மூடி தேங்காய், இரண்டு பச்சை மிளகாய், தேவையான அளவு உப்பு சேர்த்து விழுதாக அரைக்கவும். வெறும் கடுகு மட்டும் தாளித்துக் கொட்டவும். இதோடு தயிர் சேர்த்து சாப்பிடவும். வாய்ப்புண், வயிற்றுப்புண்ணுக்கு உடனடி நிவாரணம் கிடைக்கும்.

***எங்கெந்த கோவிலில் எங்கெந்த ஆகமமுறைப்படி பூஜை விழாக்கள் நடத்த வேண்டுமோ அந்தந்த முறைப்படி பூஜை விழாக்கள் நடத்துக. இதனை மாறி செய்யின் குற்றம்.***

*சிவஞான முனிவர் - ( பாஷியம் நூலிலிருந்து )*

***மனம் போன போக்கில் போக வேண்டாம்*** *- அவ்வையார்*

# குண்டோதரனுக்கு அன்னமிடல்

**பா**ண்டியர் குலத் திருமகளாய் அவதரித்த தடாதகைப் பிராட்டியார் சுந்தரேஸ்வரருடன் நடந்த தம் திருமணத்திற்கு வருகை புரிந்த மாதவர், மறைவர், பன்னாட்டு வேந்தர் அனைவருக்கும் முறையே பொற்பாத்திரங்களில் அறுசுவை உணவை இட்டு உண்ணச் செய்து, சந்தனம், பட்டாடை, அணிகலன்கள், தாம்பூலம் மற்றும் ஏனைய பரிசுப் பொருள்களையும் அளித்து உபசாரம் செய்து ஐம்பத்தாறு நாட்டு மன்னவர்க்கும் விடை கொடுத்து அனுப்பி வைத்தார்.

அப்போது சமையல் தொழில் செய்வோர் அன்னையின் திருவடிகளில் விழுந்து வணங்கி, அன்னையே ! அடியவர்களாகிய நாங்கள் சமைத்திட்ட அன்னத்தில் ஆயிரத்தில் ஓர் பங்கு கூட செலவாகவில்லை. நாங்கள் இனி செய்ய வேண்டியது யாது? அறிவுறுத்துவீர் என்று வேண்டினர்.

அதுகேட்ட தடாதகைப் பிராட்டியார் இறைவன் சுந்தேஸ்வரரின் முன்பாக வந்து நின்று அவரைப் பணிந்துவணங்கி, ஸ்வாமி! தங்களுடன் முப்பது முக்கோடி தேவர்களும் வருவர் என்று எண்ணி அறுசுவை உணவு வகைகளை அளவற்றதாகச் சமைத்திடச் செய்தோம். வந்திருந்தோர் அனைவருக்கும் படைத்தது போக எஞ்சியுள்ளது மலையளவு உள்ளது எனக் கூறினார்.

தன்னிடம் இவ்வாறு வினவிய தடாதகைப் பிராட்டியாரிடத்துத் தான் கொண்ட பேரன்பின் காரணமாக சுந்தர பாண்டியப் பெருமான் ஓர் திருவிளையாடல் புரிந்திடத் திருவுளம் கொண்டார்.

தனக்குத் திருக்குடை ஏந்துகின்ற பூதகணங்களின் தலைவனான குண்டோதரனின் பேராற்றலை இப்பூவுலகு அறிந்திடவும் இறைவன் விரும்பினார் போலும்! தம் பதிலை எதிர்நோக்கிக் காத்திருக்கும் தடாதகையின் திருமுகத்தை நோக்கி குறுநகை புரிந்த இறைவன், உனக்குப் பணிபுரிந்திடத் தேவலோகத்துப் பஞ்ச தருக்களும் உன்னிடத்தே உள்ளன. உன் அளவற்ற செல்வப் பெருக்கின் பெருமைகளை யாம் அறிந்திடுமாறு செய்தனை போலும். உனது பெருவிருந்தினை உண்டிட நம் கணத்துள்ளே பசியால் வருந்தும் எவரையும் காணோமே எனக் கூறியருளி விட்டுத் தன்னருகே நின்றிருந்த குண்டேதரனின் வயிற்றில் வடவாக்கினி புகுந்திடுமாறு திருவுளம் கொண்டார்.

வடவாக்கினி வயிற்றில் புகுந்து வருத்தியமையால் குண்டோதரன் பெரும்பசியால் தளர்ந்து உயிரொடுங்கிப் போனான். இறைவனைப் பணிந்த குண்டோதரன், ஐயனே! தாங்க முடியாப் பெரும்பசி என்னை வாட்டி வதைக்கின்றதே ! என்று கூறி வருந்தினான். அதைக் கேட்ட இறைவன் சுந்தரேஸ்வரர் தன் தேவியை நோக்கி, தேவி! எமக்குக் குடை பிடித்திடும் குடைக்கால் பூதத்திற்குப் பிடி சோறினைக் கொடுத்தருள்வாய் என்று கூறியருளினார்.

இவ்வாறு கூறிய இறைவனை வணங்கிய தடாதகைப் பிராட்டியார் பெரும்பசியால் வாடி வருந்தும் குண்டோதரனை தன்னுடன் அழைத்துச் சென்றார். பேரரசியாரின் ஏவலுக்கு இணங்க சேவகர்கள் பசி என்னும் கொடும் பிணியால் வருந்தும் குண்டோதரனை அழைத்துச் சென்று பெரும் மலையெனக் குவிந்திருக்கும் அன்ன மலையின் முன்பாகக் கொண்டுவிட்டனர்.

அவ்வாறு தாங்கள் அழைத்து வந்த குண்டோதரன் அன்னக் குவியலின் முன்பாக அமர்ந்ததையோ, அன்னத்தை எடுத்ததையோ, உண்டதையோ சேவகர்கள் எவரும் காணவில்லை. குவிந்து கிடந்த அன்னக்குவியல் மறைந்தது. குண்டேதரன் உண்டதை நின்று பார்த்துக் கொண்டிருந்த ஏவற்பெண்டிர் தம் கைகளை நெறித்து வியப்புக் காட்டினர். சிலர் பயத்தால் வெருண்டு ஓடினர். சிலர் தம் கண்களை தம்மிரு கைகளால் பொத்திக் கொண்டனர்.

தனக்குப் படைக்கப்பட்ட காய்கறிகள், நெய், பால், தயிர், தேன் என அனைத்தையும் குண்டோதரன் தின்று தீர்த்தான். அப்போதும் தன் பெரும்பசி அடங்கப்பெறாத குண்டோதரன் அரிசி, நவதானியங்கள், வேகாத காய்கள், பலவகையான பழங்கள், பணியாரங்கள், கரும்புகள், தேங்காய்கள் போன்றவற்றையும் தன்னிரு கைகளால் வாரி வாரியெடுத்துத் தன் பெரு வயிற்றினுள் அடைத்துக் கொண்டேயிருந்தான். இந்நிகழ்வினைக் கேட்டும் கண்டும் அறிந்த தடாதகைப் பிராட்டியார் வியந்தார்.

தன் நாயகராகிய இறைவன் சோமசுந்தரரிடம் சென்று நாணம் மிகுந்து தலை கவிழ்ந்து தடாதகைப் பிராட்டியார் நின்றார். தடாதகைப் பிராட்டியாரின் நிலையை உணர்ந்து சோமசுந்தரேஸ்வரர், தேவி! நான் அனுப்பிய பூதம் மீந்திருந்த உணவு வகைகளை உண்டதா? இன்னும் மீதம் உணவு இருக்குமானால் மேலும் சில பூதங்களை அனுப்பி வைக்கட்டுமா? என்று வினவினார்.



அதற்குப் பிராட்டியார், ஸ்வாமி! தாங்கள் அனுப்பி வைத்தபூதம் வெந்தது, வேகாதது என அனைத்தையும் உண்டு தீர்த்து விட்டது. இந்நிலையில் தேவரீர் மேலும் பூதங்களை அனுப்பினால் இப்பூவுலகினையே அப்பூதங்கள் விழுங்கி விடுவார்கள். அதன் பின்னர் தங்களின் யுகாந்த கால உருத்திரர் என்னும் பெயர் உறுதி செய்யப் பட்டுவிடும் எனப் பணிவோடு கூறினார்.

அப்போது இறைவன் முன்பாக, தனக்குண்டான பெரும்பசித் தீ வருத்த குண்டோதரன் வந்து நின்றான். வெள்ளியம்பலத்திலே திருநடனம் புரிந்த இறைவா [illegible]யெனக் குவிந்திருந்த அன்னத்தினை உண்டும் என் பெரும்பசி தீர்ந்தபாடில்லையே ! என்ன செய்வேன் ! என வருந்தி அழுது புலம்பி நின்றான்.

வேதப் பரம்பொருளான, சோமசுந்தரேஸ்வரர் தடாதகைப் பிராட்டியாரை நோக்கிப் புன்னகைத்தார். பின் பெரும் பசிப்பிணியால் அவதிப்படும் தன் பூதகணமான குண்டோதரன் பொருட்டுத் தன் சக்தியான அன்னபூரணியை நினைந்தருளினார். இவ்வாறு இறைவன் நினைந்தருளியதுமே நான்கு திசைகளிலும் இருந்து தயிர்க்கடலானது பூமியைக் கிழித்துக் கொண்டு ஊற்றெடுத்துப் பெருகியதைப் போன்று நான்கு பெருங்குழிகள் தோன்றின. அவற்றில் இருந்து சுவை மிகுந்த தயிரன்னம் பொங்கியது.

அப்போது சோமசுந்தரப் பெருமான் குண்டோதரனைப் பார்த்து, குண்டோதரா ! உன் பெரும்பசி நீங்குமாறு இவ்வன்னத்தை உண்பாய் எனக் கூறியருளினார். உடனே நான்கு அன்னக் குழிகளிலிருந்தும் பொங்கி வழிந்த தயிரன்னத்தை வாரிவாரி உண்டான். இறைவனின் பெருங் கருணையால் தன்னை வருத்திய பெரும் பசி தீர்ந்த குண்டோதரன் உடம்பெல்லாம் வயிறாகப் பருத்துத் தரையிலே விழுந்து மூச்சு விட முடியாமல் புரண்டான். பசி தீர்ந்த குண்டோதரனுக்குத் தாகம் ஏற்பட்டது. தன் தாகத்தைத் தணித்திட வேண்டி நீர்நிலைகளைத் தேடி குண்டோதரன் சென்றான். எதிர்ப்பட்ட கிணறு, குட்டை, ஓடை, குளம் அனைத்திலும் தன் வாயை வைத்து அவை வறண்டு போகுமாறு நீரினை உறிஞ்சிக் குடித்தும் குண்டோதரனின் தாகம் தீரவில்லை.

இதனால் பெரும் துயருற்ற குண்டோதரன் சுந்தரேசப் பெருமானின் திருவடிகளில் வீழ்ந்து தன் துயரைப் போக்கியருளுமாறு வேண்டினான். குண்டோதரனின் பெரும் துயரைக் கண்ட இறைவன் தன் திருமுடியில் துளங்கிடும் கங்கா தேவியை நோக்கி கங்கா ! இம்மதுரையம்பதியின் புறத்தே ஒரு நதியாக பெருக்கெடுத்து விரைந்து நீ வருவாயாக என ஆணையிட்டார்.

இறைவனின் திருவாணைப்படியே கங்கா தேவி அவரின் திருச்சடையை விட்டு நீங்கி அவரைப்

பணிந்து இறைவா முன்னொரு சமயம் பகீரதனுக்காக தீர்த்தமாய் தேவரீர் என்னை விடுவித்ததுடன் என்னில் மூழ்கி நீராடுவோரின் பாவங்களையும் குற்றங்களையும் களைந்து செல்லுமாறு பணித்திட்டீர்! இப்போது மேலும் ஓர் ஆறாகி நான் பாயப்போவதால் என்னைக் காண்போரும், தொட்டோரும், என்னுள் மூழ்கி நீராடுவோரும் தங்களிடம் பக்தியும், கல்வியும், ஞானமும், வீடு பேறும் பெற்றருளிட கருணை கூர்ந்தருள வேண்டும்! என வேண்டினாள்.

பின் இறைவன் சுந்தரேசப் பெருமானிடம் விடைபெற்ற கங்கை மிகுந்த வேகத்துடன் எழுந்து புண்ணிய ஆறாக விண்ணிலிருந்து இறங்கிளாள். புண்ணிய ஆறாக உருக்கொண்ட கங்கைக்கு அலைகள் கை வளையல்களாகவும், முத்துக்கள் அவளது வெண்ணிற பற்களாகவும், அலைகளால் உண்டான ஆற்றின் நுரையே ஆடையாகவும் பூங்கொடிகள் அவளின் இடையாகவும், கருமணல் நறுமணம் கமழும் கரிய கூந்தலாகவும் ஆயின.

இவ்வாறு பல்வகைப் பாங்குளைக் காட்டியவாறு பேரிரைச்சலுடன் பாய்ந்து வந்திடும் ஆறு கதியில் யானையைப் போன்று, கம்பீரத்துடனும், வளைந்தும், நெளிந்தும் வருவதில் நீண்டதொரு பாம்பினைப் போன்றும், நிலத்தைத் தோண்டி வருவதில் மகாவிஷ்ணுவின் அவதாரமான வராக மூர்த்தி போன்றும் தோன்றியது. பெருவெள்ளமென பெருக்கெடுத்து ஓடி வந்த புண்ணிய ஆற்றினைக் கண்ட சுந்தரேசப் பெருமான் தீராத் தாகத்தால் பெரும் அவதியுற்று ஐயகோ! எனது தீராத தாகம் தணிந்த பாடில்லையே! எனத் தவித்துக் கொண்டிருந்த குண்டோதரனை அவ்வாற்று நீரைப் பருகுமாறு விடுத்தார்.

பொங்கிப் பெருகி வந்த அப்புண்ணிய ஆற்றின் நடுவே சென்ற குண்டோதரன் தன்னிரு கைகளையும் ஆற்றின் கரைகளோடு சேர்த்து நீட்டினான். இதனால் தடைப்பெற்று நின்ற ஆறு பெரிய மடுவைப்போல் தேங்கியது. பெருகி நின்ற அப்புண்ணிய தீர்த்தத்தினை குண்டோதரன் தன் பெரும் வாயினைத் திறந்து பருகியதும், அதுவரையிலும் தீராதிருந்த அவனின் தாகம் தணிந்தது.

இதனால் பேரானந்தம் அடைந்த குண்டோதரன் இறைவனின் திருவடிகளைப் பணிந்து அவரைப் போற்றி வணங்கினான். சொல்லின் பொருளாக விளங்கிடும் இறைவனும் தன் குடைபிடிக்கணமான குண்டோதரனின் போற்றுதல்களை செவிமடுத்து மகிழந்தார். அத்துடன் தன் பூதகணங்களின் தலைமைப் பதவியையும் குண்டோதரனுக்கு அளித்து அருளினார்.

இவ்வாறு குண்டோதரனின் தீராத தாகத்தைத் தீர்த்திட வேண்டி பாய்ந்து வந்த புண்ணிய ஆறு வையை என்றும் பேரினைப் பெற்றது. இறைவனின் செஞ்சடையில் இருந்து பெருகி வந்தமையால் சிவகங்கை எனவும், சிவஞான தீர்த்தமென்றும், பெரும் வேகத்துடன் பாய்ந்து வந்தமையால் வேகவதி என்றும், மதுரையம்பதியை ஓர் மலையைப் போன்று சூழ்ந்து பாய்ந்தமையால் கிருதமாலை என்றும் போற்றப்பட்டது. ●

## தகவல் 2

## கீரிமலையை நினைவுபடுத்திய நிகழ்ச்சி

சென்ற மாதம் எனது நண்பனின் தாயாரின் அஸ்தி கரைப்பதற்காக South End கடற்கரைக்குச் சென்றிருந்தோம். அங்கு கடற்கரையில் 500க்கும் மேற்பட்ட சிறுசிறு குடிசைகள் அமைக்கப்பட்டிருந்தன. சைவ முன்னேற்ற சங்கத்துக்கும் ஒரு குடிசை அங்கிருந்தது. அந்த குடிசையில் சைவ முன்னேற்ற சங்கத்தைச் சோந்த குரு இந்த அந்தியேட்டிக் கிரியைகளை மிகவும் சிறப்பாக செய்து கொடுத்தார். அந்த நிகழ்ச்சி எனக்கு கீரிமலையை ஞாபகத்துக்குக் கொண்டு வந்தது. கீரிமலையிலும் இதேவிதமாக இந்த கிரியைகளை செய்வது வழக்கம். இறப்புக்குப் பின் இந்த நிகழ்ச்சியை அவசியம் செய்ய வேண்டியது சைவனாக பிறந்த ஒவ்வொரு மனிதனின் கடமை. அந்தியேட்டி கிரியையை இப்படி நல்லவிதமாக செய்து கொடுக்கும் சைவ முன்னேற்றச் சங்கத்துக்கு லண்டன் தமிழ் மக்கள் மிகவும் நன்றியாய் இருக்க வேண்டியது அவசியம். மரணத்தில் இளைப்பாருவாயாக என்பதைப் போன்று மரணமான ஒரு ஆத்மாவை நெறிப்படுத்தி சொர்க்கத்துக்கு கொண்டு செல்லும் ஒரு நிகழ்ச்சிதான் இது. இதை சைவ முன்னேற்ற சங்கம் சிறப்பாக எடுத்து நடத்திக் கொடுப்பதை பாராட்டியே ஆக வேண்டும்.



தகவல்கள் 100
உங்களுக்காக

– பதிப்பாசிரியர்

# (கனக்ஸ்சின் கடைசிப் பக்கம்)
# இன்னொரு கணியன் பூங்குன்றன்:



"யாதும் ஊரே யாவரும் கேளிர்
தீதும் நன்றும் பிறர்தரவாரா" என்பது

சங்கப் புலவர் கணியன் பூங்குன்றனின் புறநானூறு கவிதையின் ஒரு பகுதி. அட ஊருக்குத்தானா உபதேசம் தனக்கு மட்டும்இல்லையா? பூங்குன்று என்ற தனது சொந்த ஊரின் பெயரை புலவர் தன்னுடன் இணைத்ததைக் கலைஞர் கருணாநிதி வேடிக்கையாகச் சொல்வதுண்டு. பூங்குன்றன பாடியது 2000 வருடங்களுக்கு முன், ஆகவே அந்த பெருங்கவிஞனின் நன்நோக்கம் ஞாலத்திலும் பெரியது. கருத்திலும் ஆனால் அந்த மாபெரும் கவிஞனின் எண்ணக் கருவினையும் உள்ளடக்கி

அதற்மேலும் ஒரு படி சென்றவர் புரட்சியிலாளர் Thomas Paine. அவர் "The world is my country,all mankind are my brothers, to do good is my religion" எனக் கூறியுள்ளார்.



இங்கர்சல்

"இந்த உலகம் எனது நாடு, எல்லா மக்களும் என் சகோதரர்கள், நல்லன செய்வதே என் சமயம் என்பதே அதன் பொருள். தோமஸ் பெயின் (1734 - 1809) இங்கிலாந்தில் பிறந்தாலும் அவர் தனது கருத்துக்களை எடுத்துச் சொல்லும் பத்திரிகையாளராகியது அமெரிக்காவிலும், பிரான்சிலுமே. அவரது சமயக் கொள்கை இங்கிலாந்து அரசுக்கும் மடாதிபதிகளுக்கும் ஏற்புடையதாயில்லாமையால் அவரைக் குற்றவாளியாகக் கண்டு தண்டிப்பதற்காக ஓட ஓட விரட்டினார்கள். அதனால் இவர் இங்கிலாந்துப் பக்கம் தலையே காட்டாமல் வாழ்ந்தார் மறந்தும் அந்தப் பக்கம் எட்டியே பார்க்கவில்லை. அவரை மடாதிபதிகள் சமயத்துக்கெதிரானவராகவே கணித்தனர். அவர் எழுதிய நூல்கள் நான்கு. Common sense. Age of Reason ,Crisis, Rights of man. இவற்றில் முன்னைய இரண்டும் மூட நம்பிக்கைகளுக்கு எதிரானவை. அவை இரண்டும் அமெரிக்க சுதந்திரத்துக்காகவும் மக்கள் உரிமைக்கெனவும் வாதிட்டன. இவரது நூல்கள் யாவுமே பெருந்தொயில் விறபனையாகின. ஆனால் அவற்றால் வந்த ஊதியத்தை அவர் தனக்கென எடுத்ததேயில்லை. அவரது போதனைகள் சமய நெறிகளுக்கு ஏற்புடையவையாயிருக்காமையால் சமயவாதிகளின் எதிர்ப்பையும் வெறுப்பினையும் தாராளமாகச் சம்பாரித்தார். அவரைப் பற்றி, நாத்திகவாதி என பெயர் பெற்ற றொபேர்ட் இங்கர்சல்., "அவரினது பெயரை விட்டு என்றுமே தன்னுரியையின் ( liberty) சரித்திரத்தை எழுத முடியாது" என்கிறார். இங்கர்சல் மிக வன்மையான பேச்சாளர், ஆவேசமான எழுத்தாளர். நான் மாணவப் பருவத்திலே அவரது நூல்களை வாசித்தே எனது சமயக் கோட்பாடுகளை வகுத்தேன்.

அன்றைய காலகட்டத்திலே என்னை மிகவும் கவர்ந்த எழுத்தாளராக இங்கர்சல் இருந்தார். அதன் பிறகே தான் அறிஞர் அண்ணா. இங்கர்சல் தோமஸ் பெயினைப் பற்றிக் கூறியது. "பழைய பிழைகளுக்குஅவர் என்றுமே மதிப்புத் தந்ததில்லை, புராதன சிந்தனைகள் அவரை என்றுமே கவர்ந்தவை அல்ல. ஒவ்வொரு கைகளும் ஏழைகளை நசுக்குவதை அவர் கண்டார், நியாயமற்ற தன்மை ஊடாடுவதையும், வஞ்சனை வழிபாட்டிடங்களிலே நிறைந்தருப்பதையும், சட்டம் கைக்கூலிகளின் மையமாக இருப்பதையும் கண்டார். ஆட்சியாளர்கள் கொடுங்கேலராகவும் இருப்பதைக் கண்டு ஆர்த்தெழுந்து வலிமை குன்றியோருக்காக வலியோருடன் பொருதி நின்றார". சமூகசீர்திருத்தவாதியான தோமஸ் பெயின் மறைந்து ஏறக்குறைய 200 ஆண்டுகளாகிவிட்டன ஆனால் அவரது கருத்துக்கள் இன்றைய உலகினுக்கு மிகவும் அவசியமாவை. மனிதர்களை சகோதரர்களாக மதிக்க வேண்டாம், மனிதர்களாகவே மதித்தால் இன்று ஸ்ரீலங்காவிலே, பாக்கிஸ்தானிலே, கென்னியாவில் இத்தனை படுபாதகக் கொலைகள் நடக்குமா?

**பொ. கனகசபாபதி**

உ
சிவமயம்
என்னை நன்றாக இறைவன் படைத்தனன் தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே!

# அருள்மிகு கனக துர்க்கை அம்மன் கோயில்

**(5 Chapel Road, West Ealing, London W13 9AE. தொலைபேசி: 020 88 10 08 35)**

# சைவ சித்தாந்தத் தமிழ்ப் பள்ளி

## சிறார்களுக்கான சைவ சித்தாந்த வகுப்புகள்

### 2008 ம் ஆண்டிற்கான வகுப்புகள் நடைபெறும் நாட்கள்

| | | | |
|---|---|---|---|
| 1) 13.01.2008 | 9) 20.04.2008 | 17) 29.06.2008 | 25) 09.11.2008 |
| 2) 20.01.2008 | 10) 27.04.2008 | 18) 06.07.2008 | 26) 16.11.2008 |
| 3) 27.01.2008 (தேர்வு) | 11) 11.05.2008 | 19) 14.09.2008 | 27) 23.11.2008 |
| 4) 03.02.2008 | 12) 18.05.2008 | 20) 21.09.2008 | 28) 30.11.2008 |
| 5) 24.02.2008 | 13) 01.06.2008 | 21) 28.09.2008 | 29) 07.12.2008 (தேர்வு) |
| 6) 02.03.2008 | 14) 08.06.2008 | 22) 05.10.2008 | 30) 14.12.2008 |
| 7) 09.03.2008 (விழா) | 15) 15.06.2008 | 23) 12.10.2008 | |
| 8) 16.03.2008 | 16) 22.06.2008 | 24) 19.10.2008 | |

- பாடசாலை விடுமுறை நாட்களும் மேற்படி கோயிலின் திருவிழா, வேறு அண்மையிலுள்ள கோயில்களின் தேர், சைவரினதும் தமிழரினதும் பொது விழாக்கள், மாவீரர் நினைவஞ்சலி போன்றவை அமையும் ஞாயிற்றுக்கிழமைகளும் தவிர்ந்த எல்லா ஞாயிறு நாட்களிலும் வகுப்புகள் நடைபெறும்.
- நாலு வயதின் மேற்பட்டவர்கள் யாவரும் இணையலாம்.
- தயவுசெய்து 3:40 ற்கே யாவரும் வர முயல்க. வகுப்புகளைப் பிரித்து ஒழுங்காக நடத்த இது முக்கியம்.

➢ **மாலை 3:45 – மாலை 4:45 :**
**பண்ணிசை – ஆசிரியர்:**

ஓதுவார் சாமி தண்டபாணி அவர்கள்

➢ **மாலை 4:45 – மாலை 5:45 :**
**தமிழ் / சைவ சித்தாந்தம் – ஆசிரியர்கள்:**

திருமதி சிவாயினி கிருஷ்ணகுமார்
திருமதி கௌரி சிறி ராகவன்
திருமதி ஆனந்தி அமிர்தலிங்கம்
மருத்துவர் (திருமதி) சசிகலா இராஜமனோகரன்
திரு நா. நித்தியானந்தன்
திரு க. இராஜமனோகரன்

- வகுப்புகள் இலகு தமிழிலே நடைபெறுமாயினும், தேவையான இடங்களிலெல்லாம் ஆங்கிலமும் பயன்படுத்தப்படும். ஆகவே, தமிழ் தெரியாது என்று எண்ணி வராமல் விட வேண்டாம். சைவத்தோடு தூய தமிழையும் கற்கும் அரிய வாய்ப்பு இது.
- இவ்வகுப்புகளிலே கற்பதன் மூலமாக, மூட நம்பிக்கைகளற்ற சைவசித்தாந்தத் தெளிவு, வாழ்வியலுக்கான தத்துவங்கள், எல்லா மதங்களிற்கும் பொதுவான ஆன்மிக அறிவு என்பவற்றையும் பிள்ளைகள் பெறுவர்.
- தத்தமது சமய தத்துவங்களை அறிய வேண்டியது ஒவ்வொருவரினதும் பிறப்புரிமை. அதற்கு ஆவன செய்ய வேண்டியது பெற்றோரினதும் கடமை.

முன்னர் இங்கு
படித்தவர்களுக்கும்

புதிதாக வர விரும்பும் வளர்ந்த
பிள்ளைகளுக்கும்

மேற்படிப்பில் ஈடுபடுவோருக்கும்

பெற்றோருக்குமென

எவ்வயதினருக்குமாகப்

பின்வரும்

பன்னிரண்டு நாட்களிலும்

**மாலை 3:45 இலிருந்து 4:45**
வரை சைவ சித்தாந்த வகுப்பு
நடைபெறும்.

இணைந்து கொள்ளுங்கள்.

ஆசிரியர்:
திரு க. இராஜமனோகரன்
( 07931 531 305 )

இயலுமானவரை மாதங்களின்
இரண்டாவது ஞாயிறும்
இயலாதபோது
வேறு ஞாயிறுமாக நடைபெறும்.

யாவும் இலவசம்.

**வளர்ந்தோர்க்கு ......**

1) 20.01.2008
2) 27.01.2008 (தேர்வு)
3) 24.02.2008
4) 09.03. 2008 (விழா)
5) 20.04.2008
6) 11.05.2008
7) 08.06.2008
8) 06.07.2008
9) 14.09.2008
10) 12.10.2008
11) 09.11.2008
12) 14.12.2008 (தேர்வு)



# மாசி மாதப்பலன் (பிப்ரவரி 15 - மார்ச் 15)

– கணித்தவர்: ஜோதிட ரத்னா – லயன். டாக்டர். கே.பி. வித்யாதரன்
37, மகாலக்ஷ்மி தெரு, தி.நகர், சென்னை – 17. தொலைபேசி: 2434 8877, 24330465

**மேடம்** தன்னம்பிக்கையாளர்களே! பூர்வ புண்யாதிபதி சூரியனுக்கு 12–ல் சுக்கிரனும், புதனும் நிற்பதால் பணப்புழக்கம் அதிகரிக்கும். கல்யாணப்பேச்சு வார்த்தைகள் சுமுகமாக முடியும். வாகனம் வாங்குவீர்கள். சனியின் பார்வை சரியில்லாததால் பிள்ளைகளுடன் கருத்து மோதல், மருத்துவ செலவு வந்து நீங்கும். குரு சாதகமாக இருப்பதால் அரசால் அனுகூலம் உண்டு. பிரார்த்தனைகளும் நிறைவேறும். வியாபாரத்தில் லாபம் கூடும். உத்யோகத்தில் புது சலுகை கிடைக்கும். வயிற்றுவலி, தொண்டை வலி வந்து நீங்கும். சாதிக்கும் மாதமிது.

**இடபம்** முயற்சியாளர்களே! உங்கள் ராசிநாதன் வலுவாக இருப்பதால் சவால்களில் வெற்றியடைவீர்கள். சுகாதிபதி சூரியன் 10–ல் நிற்பதால் திறமைகள் வெளிப்படும். இழுபறியாக இருந்த வேலைகள் நிறைவடையும். பெற்றோரின் உடல்நிலையில் கவனம் தேவை. வாகன செலவு சில சில விபத்துகள் வந்து நீங்கும். வீட்டு பராமரிப்பு செலவு அதிகரிக்கும். வியாபாரத்தில் ஆதாயம் கூடும். வேலையாட்களால் டென்சன் அதிகமாகும். உத்யோகத்தில் அதிகாரிகள் மதிப்பார்கள். பேச்சில் நிதானம் தேவை. தடைகளைத் தாண்டி முன்னேறும் மாதமிது.

**மிதுனம்** மனசாட்சி மறவாதவர்களே! பாவ கிரகங்கள் வலுவிழந்து இருப்பதால் பழைய கடன் பிரச்சினைக்குத் தீர்வு கிடைக்கும். வெள்ளியும் புதனும் 8–ல் நிற்பதால் ஷேர், லாட்டரி மூலம் திடீர் பணவரவு உண்டாகும். கணவன் மனைவிக்குள் இருந்த மோதல் நீங்கும். குழந்தை பாக்கியம் கிடைக்கும். ஆடை, அணிகலன், வாகனம் வாங்குவீர்கள். வியாபாரத்தில் தேக்க நிலை மாறும். வருமானம் கூடும். வேலையாட்கள் ஒத்துழைப்பார்கள். உத்யோகத்தில் நிம்மதி கிடைக்கும். எதிர்ப்புகள் அடங்கும். வழக்கில் வெற்றி கிட்டும். உறவினர்கள் உதவுவார்கள். வெற்றிக்கு வித்திடும் மாதமிது.

**கடகம்** கடமை தவறாதவர்களே! இதுவரை 6–ல் மறைந்திருந்த வெள்ளி இப்போது 7–வது இடத்திற்கு வந்திருப்பதால் கால்வலி, மூட்டுவலி, முன்கோபம் விலகும். நண்பர்கள் உறவினர்களுடன் இருந்த பகை நீங்கும். புது வேலை கிடைக்கும். பாதச்சனி நடப்பதால் எவ்வளவு வருமானம் வந்தாலும் பணப்பற்றாக்குறை அதிகரிக்கும். மனைவியின் கோபம் நீங்கும். பிள்ளைகள் புரிந்து கொள்வார்கள். வியாபாரத்தில் இழந்த லாபத்தை ஈட்டுவீர்கள். புது பங்குதாரர்கள் கிடைப்பார்கள். உத்யோகத்திலிருந்த குழப்பம் நீங்கும். தடைகள் உடைபடும் மாதமிது.

**சிம்மம்** பகுத்தறிவாதிகளே! குருவின் திருவருள் நிறைந்திருப்பதால் பணவரவு உண்டு. பழைய உறவுகளைப் புதுப்பித்துக் கொள்வீர்கள். பிரபலங்களின் நட்பு கிடைக்கும். வெள்ளி 6–ல் மறைந்திருப்பதாலும், உங்கள் ராசிநாதன் ராகுவுடன் நிற்பதால் தலைசுற்றல், செரிமானத் தொந்தரவு, மனஉளைச்சல் சில சில விபத்துகள் வந்து நீங்கும். யாருக்கும் ஜாமீன் கையெழுத்திட வேண்டாம். வியாபாரத்தில் போட்டிகள் இருக்கும். பங்குதாரர்களை அனுசரித்துப் போங்கள். உத்யோகத்தில் வேலைச்சுமை அதிகரிக்கும். ஆன்மீக நாட்டம் அதிகமாகும். நிதானம் தேவைப்படும் மாதமிது.

**கன்னி** கற்பனைவாதிகளே! சூரியன் 6–ல் நிற்பதால் கடினமான காரியங்களைக் கூட விரைந்து முடிப்பீர்கள். பணவரவு அதிகமாகும். பழைய கடன் பிரச்சினையிலிருந்து விடுபடுவீர்கள். சொத்து வாங்குவது விற்பது லாபம் தரும். கணவன் மனைவிக்குள் சச்சரவு நீங்கும். பிள்ளைகள் திருந்துவார்கள். லாட்டரி, ஷேர் பணம் தரும். புது தொழில் தொடங்குவீர்கள். பழைய பாக்கிகள் வசூலாகும். உத்தியோகத்தில் அதிகாரிகள் உதவுவார்கள். புது வேலையும் கிடைக்கும். தாழ்வு மனப்பான்மை நீங்கி சாதித்துக் காட்டும் மாதமிது.

**துலாம்** வெள்ளை மனசுக்காரர்களே! உங்கள் ராசிநாதனுடன் பாக்கியாதிபதி புதனும் சேர்ந்திருப்பதால் சமயோஜிதபுத்தி அதிகரிக்கும். பணவரவு உண்டு. வீண் செலவுகள் குறையும். பிரபலங்கள் அறிமுக மாவார்கள். சூரியன் ராகுவுடன் சேர்ந்து 5–ல் நிற்பதால் அவ்வப்போது குழப்பம், முன்கோபம், வாக்குவாதம், பிள்ளைகளால் நிம்மதி குறைவு வந்து செல்லும். லாட்டரி, ஷேர் மூலம் பணம் வரும். வியாபாரத்தில் புது முதலீடுகள் செய்வீர்கள். உத்யோகத்தில் வேலைச்சுமை குறையும். புதுச்சலுகை கிடைக்கும். கோபத்தைத் தவிர்க்க வேண்டிய மாதமிது.

**விருச்சிகம்** தன்மானச் சிங்கங்களே! குருவும், வெள்ளியும் சாதகமாக இருப்பதால் நீண்டநாள் ஆசைகள் நிறைவேறும். பேச்சில் ஒரு இங்கிதம் தெரியும். நவீன மின்னணு, மின்சார சாதனங்கள் வாங்குவீர்கள். அரசால் அனுகூலம் உண்டு. எதிர்ப்புகள் நீங்கும். உங்கள் ராசிநாதன் 8–ல் மறைந்து நிற்பதால் அவ்வப்போது மனக்குழப்பங்கள், தடுமாற்றங்கள் வந்து நீங்கும். ரத்த அழுத்தம் அதிகமாகும். வியாபாரத்தில் திடீர் லாபம் உண்டு. உத்யோகத்தில் எதிர்பாராத பாராட்டுகள் கிடைக்கும். நினைத்ததை முடித்துக் காட்டும் மாதமிது.

**தனுசு** தர்மவான்களே! உங்கள் ராசிக்குள் குரு உட்கார்ந்து கொண்டு அவ்வப்போது உங்களை உணர்ச்சிவசப்பட வைத்தாலும் வெள்ளியும், புதனும் தனத்தில் நிற்பதால் எதிலும் வெற்றி உண்டு. பணப்புழக்கம் அதிகரிக்கும். சூரியன் தைரிய வீட்டில் நிற்பதால் எதிர்பாராத அதிர்ஷ்ட வாய்ப்புகள் வரும். அரசு வேலைகள் உடனே முடியும். வியாபாரம் சூடு பிடிக்கும். பற்று வரவு உயரும். உத்யோகத்தில் உங்கள் கை ஓங்கும். புது வாய்ப்புகள் வரும். சொத்து சேரும். அடிப்படை அந்தஸ்து உயரும். எதிலும் வெற்றி பெறும் மாதமிது.

**மகரம்** கவரிமான்களே! உங்கள் ராசியை விட்டு சூரியன் விலகுவதால் கோபம், அச்ச உணர்வு நீங்கும். புதுத் தொழில் தொடங்குவீர்கள். எதிர்பாராத உதவிகள் வி.ஐ.பிக்களிடமிருந்து கிடைக்கும். பணம் எவ்வளவு வந்தாலும் அட்டமத்து சனி அடித்துச் செல்லும். வியாபாரத்தில் புது முயற்சிகள் பலிதமாகும். பிள்ளைகளால் செலவுகள் அதிகரிக்கும். மற்றவர்களை விமர்சித்து பேச வேண்டாம். உத்யோகத்தில் சக ஊழியர்களால் மதிக்கப்படுவீர்கள். ஆடை ஆபரணம் சேரும். புதிய பாதை தெரியும் மாதமிது.


**கும்பம்** சமயோசித புத்தி உள்ளவர்களே! உங்கள் யோகாதிபதிகளான சுக்கிரனும், புதனும் வலுவடைந்து இருப்பதால் வேற்றுமதம், மொழியினர் உதவுவார்கள். திடீர்ப்பயணங்கள் அதிகரிக்கும். பழைய உறவுகளை சந்திப்பீர்கள். ராசிக்குள் சூரியன், ராகு நிற்பதால் உடல் உஷ்ணம் அதிகரிக்கும். கொஞ்சம் வயிற்றுவலி வந்து நீங்கும். வியாபாரத்தில் எதிர்பார்த்ததைவிட லாபம் வரும். புது முதலீடுகள் செய்வீர்கள். உத்யோகத்தில் வேலைச்சுமை குறையும். புது பொறுப்புகள் வரும். மற்றவர்களின் விஷயங்களில் தலையிடாமல் இருக்க வேண்டிய மாதமிது.

**மீனம்** மிதவாதிகளே! லாப வீட்டில் வலுவான கிரகங்கள் நிற்பதால் பல வகைகளிலும் வருமானம் உயரும். எதிர்பார்த்த லாபம் வரும். பழைய கடன் பிரச்சனை தீரும். வேலை கிடைக்கும். திடீர் ஆன்மீக பயணங்கள் உண்டு. பழைய நண்பர்களை சந்திப்பீர்கள். வியாபாரத்தில் புது ஒப்பந்தங்கள் உண்டு. வேலையாட்கள் ஒத்துழைப்பார்கள். உத்யோகத்தில் மூத்த அதிகாரி நெருக்கமாவார். புது வாகனம் வாங்குவீர்கள். எதிலும் வெற்றி பெறும் மாதமிது.

# ஆன்மீகத்தை அழகுற வெளிப்படுத்திய அட்டைப்படம்

அன்பின் திருமிகு சிவானந்தசோதி அவர்கட்கு!

தமிழர் தகவல் நவம்பர் மாத இதழிலே அட்டைப்படத்திலே அமைதி தழுவும் ஆன்மீகப் பெரியார் சிவாச்சாரியார் டாக்டர். பிச்சைக்குருக்கள் அவர்களின் படத்தைப் பிரசுரித்து அனைத்து அந்தணகுல சிவாச்சாரியார்களின் நன் மதிப்பைப் பெற்றுவிட்டீர்கள். அறிவு, அடக்கம், எளிமை, என்கின்ற முப்பரிமாண நிலைகளையும் தன்னுள் வழுத்திக் கொண்ட பெரியார். உலக நாடுகளில் எங்கெல்லாம் எம் சைவ சமயம் தழைத்து நிற்கின்றதோ அங்கெல்லாம் சென்று தன் மந்திர ஒலியால் மனங்களை வசப்படுத்துபவர். பிள்ளையார் பட்டி எனும் பெயரை உலக சைவ மக்கள் அனைவராலும் முனுமுனுக்க வைத்த பெருமைக்கு உரியவர். நிறைகுடம் தழும்பாது எனும் முதுமொழிக்கேற்ப எப்போதுமே அடக்கமாகவும், அமைதியாகவும், எளிமையாகவும் ஆலய மஹாகும்பாபிஷேகங்களிலே வ ல ம் வருகின்ற பெரியார். வயது வித்தியாசம் இன்றி திறமையுள்ள அனைத்து சிவாச்சாரியார்களுக்கும் முன்னுரிமை கொடுத்து பணியாற்ற வைக்கின்ற பண்பு நிறைந்தவர். கருமை நிறமும், வெண்மைக்குடும்பியும், வெண்மைத் தாடியும், கருணைப் பார்வையும், பட்டாடைகளையும், பொன் ஆபரணங்களையும் தவிர்த்த வெள்ளை வேட்டியும், கழுத்தில் உருத்திராட்ச மாலையும் என மிக எளிமையாக தோற்றம் அளிக்கின்ற இந்தப் பெரியாரின் வேதாகம பாடசாலையில் இருந்து, எண்ணற்ற சிவாச்சாரியார்கள் உதயமாகி உலகெங்கும் பணிபுரிந்து வருகின்றார்கள் என்பது பெருமை தரும் விடயமாகும். பாரத தேசத்தின் தமிழ்நாட்டின் பிள்ளையார்பட்டி எனும் கிராமத்தில் இருந்து எழுந்த ஆன்மீக ஜோதியான இந்த சிவாசாரிய பெருந்தகை தனது அறுபதாவது வயதை 2008 ஆம் ஆண்டு அடைந்திருக்கின்றார் என்பது குறிப்பிடத்தக்கது. அவருடைய ஆன்மீக பணியானது இன்னும் மேலோங்கி மிளிர எல்லாம் வல்ல பிள்ளையார்பட்டி கற்பக விநாயகர் கருணை மிகு திருவருளை வழங்க வேண்டும் என்று நாம் அனைவரும் பிரார்த்திக்கின்றோம். இவரை கௌரவப்படுத்தி தமிழர்தகவல் இதழில் அட்டைப்படம் பிரசுரித்து வெளியிட்ட சிவானந்த சோதிக்கு அனைத்து சிவாச்சாரிய பெருமக்களை் சார்பிலும் வாழ்த்துக்கள் கூறிக்கொண்டு இவரைப்போலவே ஈழத்திலும், இலுவில் பகுதியில் காயத்திரிபீடம் எனும் வேதாகம பாடசாலை மூலமாக பல சிவாச்சாரியார்களை உருவாக்கி எளிமையாக பல வெளிநாடுகளிலும் வலம் வந்து இன்றும் போர்சூழலிலும் யாழ் மண்ணில் தன் ஆன்மீக பணியை மேற்கொண்டு வரும் சிவாச்சாரியார் வேதாகம வித்தியா சிரோமணி சிவஸ்ரீ தானு மஹாதேவக்குருக்கள் அவர்களையும் உங்கள் தமிழர் தகவல் கௌரவிக்க வேண்டும் எனக் கேட்டுக் கொள்கின்றோம். தமிழ்நாட்டிற்கும் ஈழத்திற்கும் கிடைத்த இரு பெரும் முத்துக்கள் இந்த ஆன்மீகப் பெரியார்கள்.




அன்புடன்,
கலாநிதி ராம். தேவலோகேஸ்வரக் குருக்கள்



தரமானவர்களிடம் தங்கத்தை வாங்குங்கள்...
தரமான தங்கம் வாங்குவதற்கு சிறந்த இடம் Wembleyயில்
Tharani
Jewellery
54 Ealing Road Wembley
Middlesex HA0 4TQ Tel : 020 8902 7111, 8902 6777

சுகி சிவம் அவர்களின் பிரபல்யமான பேச்சுகள் அடங்கிய குறுந்தகடுகளை (CD's) இப்போது லண்டனில் பெற்றுக்கொள்ள தமிழர் தகவல் ஏற்பாடு செய்துள்ளது.


அவரது முக்கியமான சொற்பொழிவுகள் 21 குறுந்தகடுகளாக (CD's) வெளிவந்துள்ளது.

தொடர்பு கொள்க : தமிழர் தகவல்






ரோபோ படத்தில் ரஜினிகாந்த் ஜோடியாக ஐஸ்வர்யாராய் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளதாக அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது. ரோபோ படத்தை சங்கர் டைரக்ட் செய்கிறார். ஐங்கரன் பிலிம்ஸ் கருணாமூர்த்தி தயாரிக்கிறார். இதற்கான ஒப்பந்தத்தில் ஐஸ்வர்யா ராய் கையெழுத்திட்டுள்ளார். அவருக்கு ரூபாய் 5 கோடி சம்பளம் பேசப்பட்டிருப்பதாக தெரிகிறது. இது ஒரு சாதனைதான்.






வெற்றிமணியின் 15-வது வெளியீடாக வெளிவந்த **திறவுகோல்** என்னும் மாணவர் விஞ்ஞான நூலின் வெளியீட்டு விழா கடந்த 29.11.2007-ல் லண்டன் லூசியம் சிவன் கோவில் மண்டபத்தில் மிகச்சிறப்பாக நடைபெற்றது. நூலினை மகாஜனக் கல்லூரி முன்னாள் அதிபர் திரு. பொ. கனகசபாபதி அவர்கள் எழுதியிருந்தார். விழா வைத்தியகலாநிதி சீ. நவரத்தினம் தலைமையில் இடம்பெற்றது. படத்தில் சிறப்புப் பிரதியை தொண்டர் திலகம் வ.இ. ராமநாதன் அவர்கள் வழங்க கைலைசிறி நாகநாதம் சிவம் குருக்கள் பெற்றுக்கொள்கிறார்.


We Specialise in
For all your needs in immigration
(All aspects upto house of lords)
Commercial & Residential
Conveyancing, Employment,
Civil Litigation, Consumer Problems,
Lastwill, Power of Attorney,
SponsorshipDeclaration
HSMP, Workpermits

மீண்டும் Tamil House-இல் மார்க்கண்டன் Solicitors

**MARKENDAN & UDDIN Solicitors**

Solicitors & Administrators for Oaths

Tamil House, 720 Romford Road, London E12 6BT
Tel : 020 8514 8300, 07830 285 634 Fax : 020 8514 8381
Email : info@msssolicitors.com
Mr. Markandan : 07956 386 578 Mr. Uddin : 07957 455 670

லண்டனில் தரமான தங்கத்துக்கு தாரணி ஜுவல்லர்ஸ் – வெம்பிளி

# ஈழத்து நூல் கண்காட்சியும் அதன் அசைவுகளும்




வருடாந்தம் முல்லைஅமுதனால் நடாத்தப்படும் ஈழத்து நூல்க் கண்காட்சியுடன் கூடிய இலக்கியவிழா 2007 கார்த்திகை 10ம் திகதி இல்கேட் புனித லூக்ஸ் தேவாலய மண்டபத்தில் நடைபெற்றது. பிற்பகல் 3.00 மணிக்கு ஈழத்து நூல்களின் கண்காட்சி ஆரம்பமாகியது. நூலக அமைப்புடன் நூல்கள் வகைப்படுத்தப்பட்டு காட்சிப்படுத்தப்பட்டிருந்தன. மறைந்த ஈழத்து எழுத்தாளர்களின் புகைப்படங்களும் அழகாக சட்டமிடப்பட்டு அஞ்சலிக்கு வைக்கப்பட்டிருந்தன.

பின்பு மாலை 7.00 மணியளவில் கவிஞர். கந்தையா இராஜமனோகரன் தலைமையில் இலக்கியவிழா ஆரம்பமானது. மௌன அஞ்சலியுடன் ஆரம்பித்து தொடர்ந்து செல்வி. நிவேக்கா பூபாலசிங்கம் தமிழ்த்தாய் வாழ்த்தினை உணர்வோடு பாடினார். தமையுரையைத் தொடர்ந்து அனைவரையும் மெய்மறக்கச்செய்யும் வண்ணம் திரு. ஞானவரதனின் மாணவர்களாகிய செல்வன். திவ்வியன் உமாபதி சர்மா, செல்வன். பவித்திரன் உமாபதி சர்மா ஆகியோரின் புல்லாங்குழல் இசை பக்கவாத்தியங்களுடன் நடைபெற்றது. தொடர்ந்து செல்வி. இராகினிதேவி ஐயாத்துரை அவர்களின் மாணவர்களின் வயலின் இசை இனிமையாக இசையினை பரப்பியது. தொடர்ந்து கலாநிதி. மு.நித்தியானந்தன், கவிஞர். கரைவைக்கவி, சட்டத்தரணி. சிறீஸ்கந்தராஜா, திரு. ஐ.தி. சம்பந்தன், திரு.ந. செல்வராஜா, திரு.மு.பொன்னம்பலம்,

திரு. பத்மநாபா ஐயர், கவிஞர். வேணுகோபால் ஆகியோர் உரையாற்றினார்கள்.

அரிதான தேடற்கரிய நூல்களைத் தேடிப்பெற்று வகைப்படுத்திக் காட்சிப்படுத்துவதுடன் அதனை ஆவணக்காப்பகமாகவும் பேணிவருகிறார்.அதனை தங்கள் ஆய்வுகளுக்கும் பயன்படுத்துவதற்கும் உதவி வருவது குறிப்பிடத்தக்கது.

இவ் ஆவணக்காப்பகத்தை விரைவில் சர்வதேச அளவில் விரிவுபடுத்துவதே தன் எதிர்காலக் கனவு என்பதை முல்லைஅமுதன் குறிப்பிட்டார். பலரின் வாழ்த்துதலோடு நிகழ்வுகள் நிறைவுபெற்றது.

சுதர்சனா
லண்டன்




லண்டனில் தரமான தங்கத்துக்கு தாரணி ஜுவல்லர்ஸ் - வெம்பிளி

# தங்கரதம்

## தகவல் 3



சென்ற இதழில் தங்கரதம் பற்றி சில குறிப்புகள் கொடுத்திருந்தேன். எமது எண்ணத்திற்கேற்ப பணம் கொடுத்து உற்சவமூர்த்தியை தங்கரதத்தில் ஏற்றி ஊர்வலம் வருவது மனதுக்கு நிம்மதியைக் கொடுக்கும். கோயில்களுக்கு கோயில் தங்கரதம் இழுப்பதற்கான கட்டணம் வித்தியாசமாக இருக்கும். திருச்செந்தூரைப் பொருத்தவரை 2000 ரூபாய் (£ 25) கட்டணமாக வசூலிக்கப்படுகிறது. தங்கரதம் வருடாந்த மகோற்சவ நாள் தவிர்ந்த மற்றைய நாட்களில் தினமும் உண்டு. பணம் கட்டுவதற்கு யாரும் முன்வராத பட்சத்தில் தங்கரதம் ஓடாது. தங்கரதம் இழுப்பதற்கு ஒரே நாளில் நிறைய பேர் பணம் கட்டுவார்கள். அவர்களுக்கு ஏற்ற விதமாக, ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு இடத்தில் தங்க ரதம் இழுக்க ஏற்பாடு செய்து கொடுக்கப்படும். தங்கரதம் முதன் முதல் 1958ல் ஒரு ஆன்மீக நண்பரால் பழனி முருகன் கோயிலுக்கு உபயமாக வழங்கப்பட்டது. வேண்டுதலை நிறைவேற்றும் பக்தர்கள் பணம்கட்டி தங்கரதம் இழுக்கின்றனர். தங்கரதம் இழுக்கும் பக்தர்கள் நினைத்த காரியம் கைகூடும் என்பது பக்தர்களின் நம்பிக்கை. பழனியில் தைப்பூசம் 5ஆம் நாளும், பங்குனி உத்திரம் 5ஆம் நாளும் கோயிலின் சார்பில் தங்கரத புறப்பாடு நடைபெறும். சென்ற ஆண்டு பழனியில் ஒரே நாளில் 163 பக்தர்கள் தங்கரதம் இழுத்தது குறிப்பிடத்தக்கது. பிரபல கோயில்கள் எல்லாவற்றிலும் குறிப்பாக பழனி முருகன், மதுரை மீனாட்சி, திருவண்ணாமலை கோயில், சென்னை கபாலீஸ்வரர் கோயில், கருமாரியம்மன் கோயில் போன்ற பல கோயில்களில் இந்த வசதி இருக்கிறது. அதை இங்கிருந்து செல்லும் ஆன்மீகவாதிகள் பயன்படுத்திக் கொள்ள முடியும். இது ஒரு தகவலுக்காக தரப்படுகிறது.



17.01.2008 அன்று திருச்செந்தூர் தங்கரதத்தின் முன்னால் பதிப்பாசிரியர்


**தகவல்கள் 100**
உங்களுக்காக


SRIKANTH & CO.
ESTD 1992
Solicitors & Property Business Centre
**Solicitors & Estate Agents**
Property Sales, Letting & Conveyancing
557 High Road, Wembley, Middlesex HA0 2DW
Tel : 020 8795 0648
Fax : 020 8795 0649 / Mob : 07831 195 979

We also practise in the following areas of LAW:

- Immigration
- Wills & Probate
- Conveyancing - Residential
- Conveyancing - Commercial
- Landlord & Tenant
- Liquor Licensing
- Matrimonial / Family
- Employment Matter
- Consumer Problems
- Civil Litigation
- Housing Matters
- Welfare Matters

லண்டனில் தரமான தங்கத்துக்கு தாரணி ஜுவல்லர்ஸ் – வெம்பிளி



## முருகன் திருநாட்கள்

ஆடிக் கிருத்திகைக்கு சமமான சிறப்பு வாய்ந்தது தை கிருத்திகை

தை கிருத்திகை அன்று விரதம் இருந்து, முருகனை வழிபடுவோருக்கு குறை எதுவும் இருக்காது. அவர்களுக்கு முக்தியும் கிடைக்கும் என்று சிவபெருமானே கூறியிருப்பதாக புராணங்கள் சொல்கின்றன.

தைப்பூச தினம் முருகனைப் போற்றும் மற்றொரு தை மாத விசேஷம். இதே தினத்தில்தான் சிவபெருமான், அம்பிகையோடு ஆனந்த தாண்டவம் ஆடினார். தேவர்களும் முனிவர்களும் கண்டு களித்த அந்த நடனத்தை, எல்லோரும் கண்டு மகிழும் வண்ணம் சிதம்பரத்தில் கனக சபையை உருவாக்கி, இன்றும் நடன தரிசனம் தந்து கொண்டிருக்கிறார் ஐயன். சூரபத்மனால் கடுந்துயருற்ற முனிவர்களும், பிறரும் வியாழ பகவான் மூலம் முருகனிடம் இந்த தினத்தில்தான் தம்முடைய வேதனைகளை முறையிட்டனர். பின்னர் அசுரனை, அரன் மைந்தன் வதம் செய்தான். இப்படி தம் குறைகளை வேலவன் பாதத்தில் அவர்கள் சமர்ப்பித்ததுபோல, நாமும் இந்த தைப்பூச நாளில் முருகனிடம் நம் குறைகளையும், துயரங்களையும் கொட்டினால், அசுரனை வீழ்த்தியதுபோல நம் கண்ணீரையும் துடைத்து நல் ஆதரவு தருவான்.

---

பிராமணர் அல்லாதோர் கோயில் அர்ச்சகராகும் திட்டம் தமிழக அரசால் நிறைவேற்றப்பட்டுள்ளது. இந்த குழுவுக்கு பேரூர் ஆதீனம், குன்றக்குடி ஆதீனம், பிள்ளையார்பட்டி பிச்சை குருக்கள், திருப்பரங்குன்றம் குருக்கள் ஆகியோர் ஒரு குழுவாக இருந்து செயல்பட்டு வருகிறார்கள். இந்த பாடசாலைகள் இப்போது 3 சைவப் பாடசாலைகளாகவும், இரண்டு வைணவ பாடசாலைகளாகவும் இயங்குகின்றன. இந்த பாடசாலைகளில் அர்ச்சகராக படிப்பவர்களுக்கு முதல் வருட செலவு முழுவதையும் அரசாங்கம் ஏற்றுக்கொள்கிறது.




பழனியில் அமைந்திருக்கும் பாடசாலை ஒன்றின் மாணவர்கள்.


SS ESTATE AGENT

Sales - Lettings
Mortgages - Business Loans

Tel : 020 8471 7779
Fax : 0871 522 7277
www.ssestate.co.uk

லண்டனில் தரமான தங்கத்துக்கு தாரணி ஜுவல்லர்ஸ் – வெம்பிளி

## தகவல்கள் 100 உங்களுக்காக

### தகவல் 4



புலம்பெயர்ந்த நாடுகளில் சைவகோவில்கள் ஏராளம் முளைத்துவிட்டன. இந்த கோவில்களுக்கு 12 வருடம் முடிந்தபின் கும்பாபிஷேகம் செய்ய வேண்டிய கடமை உள்ளது. லண்டன் ஆர்ச்வே முருகன் கோவிலில் இரண்டாவது கும்பாபிஷேகம் முடிவடைந்து விட்டது சைவ மக்களுக்கு ஞாபகம் இருக்கலாம்.

அந்த வகையில் ரூட்டிங் முத்துமாரியம்மன் கோவில் கும்பாபிஷேகம் 21.03.2008-ல் நடைபெற போவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. லண்டனில் உள்ள கோவில்களில் முறையான திதிக்கு தேரோடும் கோவில் முத்துமாரியம்மன் கோவில். இந்த கோவில் கும்பாபிஷேகத்தை நடத்தி வைப்பதற்கு புகழ்பெற்ற பிள்ளையார்பட்டி பிச்சை குருக்கள் இசைந்துள்ளதாக அறிகிறோம்.

## ஆறிலிருந்து தொடங்கிய ஆன்மீகப் பயணம்

யாழ்ப்பாணம் நல்லூர் கந்தசாமி கோவில் வருடாந்த மகோற்சவ தேர்த்திருவிழாவின் போதும், நயினாதீவு நாகம்மாள் தேர்த்திருவிழாவின்போதும் எனது தந்தையார் அங்கபிரதட்சணம் செய்வது வழக்கம். அவர் இறப்பு வரையும் அதை தொடர்ந்து தவறாமல் செய்து வந்தவர். இவர் கோவிலுக்குப் போகும் பொழுது எல்லாம் என்னையும் கண்டிப்பாக அழைத்துச் செல்வார். பக்தர்கள் கூட்டமும் அரோகரா சத்தமும் அந்த நாளிலிருந்து இன்று வரை என் மனதில் பதிந்துள்ளது. அவர் எனக்கு காண்பித்துக் கொடுத்த இந்த பழக்கம்தான் இன்றுவரை தொடர்கிறது.

கடவுளை கும்பிடவும் கொடுப்பினை வேண்டும் என்று சொல்கிறார்கள். அந்த கொடுப்பினை யார் யாருக்கு எப்படி அமைகிறது என்பது கடவுளின் கொடையே. எனது முதல் அரச பணி 64ஆம் ஆண்டு திருகோணமனை அரசாங்க அதிபர் பணிமனையில் தொடங்கியது. திருகோணமலையில் பணிபுரிந்த காலங்களில் திருக்கோணேஸ்வரம் கோயிலுக்கு ஒவ்வொரு வெள்ளியும் தவறாமல் போய் வருவேன். அதன்பின் யாழ்ப்பாணத்துக்கு மாற்றப்பட்டு யாழ் அரசாங்க பணிமனையில் பணிதொடர்ந்த காலத்தில் நல்லூரில் இருக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. அப்போது நல்லூரில் நடக்கும் எந்த திருவிழாவையும் தவறாமல் பார்க்கும் பாக்கியம் எனக்கு கிடைத்தது. குறிப்பாக நல்லூரில் சண்முகாச்ச்சனை, கந்தஷஷ்டி ஆறு நாறும் முருகன் வீதி உலா வரும் காட்சியை உலகத்தில் எங்கும் காணமுடியாது.



22.01.2008 தைப்பூசத் திருநாள் அன்று பழனி கோவிவில் அறநிலைய பாதுகாப்புத்துறை அமைச்சருடனும், கோவில் அறங்காவல் தலைவருடனும் பதிப்பாசிரியர்

நான் யாழ்ப்பாணம் பணிமனையில் பணியாற்றிய காலத்தில் தொடர்ந்து நான்கு வருடம் நயினாதீவு தேர்த்திருவிழா மகோற்சவ காலத்தில் அங்கு அரசு பணியில் ஈடுபட்டிருந்தேன். ஒரு காலத்தில் எனது தந்தையாருடன் நயினாதீவுக்கு போய் சாமி கும்பிடும் பொழுது தங்குவதற்கு குளிக்க கூட நல்ல வசதியான இடங்கள் அமையவில்லை. ஆனால் இந்த நான்கு வருடமும் பணிமனையில் இருந்து அம்மனை


**ARM ASSOCIATES**

*For all types of insurance*

P. SRINIVASAN (CertPFS)
and
SUHAN SRINIVASAN (DipPFS, Economics BSc)

We have been helping our client to find competitive and quality policies for over 35 years. How have we been able to stay in the insurance business for so long? Well that is quite simple. We understand our clients and provide them with the personal service they need.

- ✓ We deal with all types of insurance under one roof
- ✓ There are no proposal forms to complete
- ✓ Quotations and cover provided over the phone
- ✓ We are able to offer exclusive rates
- ✓ We also offer Independent financial advice on:

Pensions
- Mortgages | Life cover
- Investments | Savings
- Inheritance Tax Planning

ARM Associates is the one stop of all your financial needs

Tel : 020 8763 2221 Fax : 020 8763 2220
32 Abbots Lane, Kenley, Surrey, CR8 5JH
Email : sri@srinivasan.co.uk Web : www.srinivasan.co.uk

லண்டனில் தரமான தங்கத்துக்கு தாரணி ஜுவல்லர்ஸ் – வெம்பிளி

தரிசிக்கும் பாக்கியம் கிடைத்ததும் ஒரு அற்புதம்தானே. இந்த இலங்கை கோயில்களையெல்லாம் தரிசிக்கும் பொழுது எனக்கு இந்தியாவில் உள்ள எல்லா கோயில்களையும் தரிசிக்க வேண்டும் என்ற ஆவல் ஏற்பட்டது. 67ஆம் ஆண்டு முதன்முதல் மார்ச் மாதத்தில் யாழ்ப்பாணத்தில் இருந்து திருச்சி வந்து இறங்கினேன். அந்த நாளில் திருச்சியில் இருந்து காரை அமர்த்தி தஞ்சாவூர், மதுரை, பழனி முதலிய இடங்களை தரிசித்த பின் திருச்சிக்கு வந்தால் வண்டிக்கூலி 30 ரூபாய் மட்டுமே. அந்த நாட்களில் இந்த கோவில்கள் எல்லாம் சுற்றிப்பார்த்து தரிசனம் சில சமயங்களில் கிடைக்கும், சில சமயங்களில் கிடைக்காது. இப்படி தொடர்ந்து பல வருடங்களாக தென்னிந்திய கோவில்களை தரிசித்தோம். இதன்பின் 81ஆம் வாக்கில் புலம்பெயர்ந்த அகதிகளாக புறப்பட்டபின் வாழ்க்கையே மாறிவிட்டது. லண்டனுக்கு வந்தபின் லண்டனில் இருக்கும் கோவில்களை தரிசிக்க ஆசைப்படுவது உண்டு. ஆனால் லண்டனில் உள்ள இந்த கோவில் அமைப்பு முறைகள் என்னை சிறதளவுகூட கவரவில்லை. கோயில்கள் மக்களுடைய எண்ணங்களை பூர்த்திசெய்யும் விதமாக இருக்கவேண்டும். இதனால் அடிக்கடி நான் தமிழ்நாட்டுக்கு வரவேண்டிய சூழ்நிலை. பழனியில் படியேறி தரிசனம் செய்தது ஒரு காலம். ஆனால் இப்பொழுது மின்சார ஊர்தியிலே பழனிக்கு செல்லக்கூடிய அளவில் வசதிகள் செய்யப்பட்டுள்ளது. தமிழ்நாட்டு கோவில்கள் எல்லாவற்றையும் தரிசித்த எனக்கு இப்பொழுது நான்கைந்து வருடங்களாக எல்லா கோவிலிலும் வி.ஐ.பி தரிசனம் கிடைப்பது கடவுள் எனக்கு கொடுத்த கொடையே.



27.01.2008 அன்று நடைப்பெற்ற, திருநெல்வேலி அம்பாசமுத்திரம் அருள்மிகு கோமதி அம்மாள் ஸ்ரீ சங்கரலிங்க சுவாமி திருக்கோவில் கும்பாபிஷேகத்தில் கோவில் நிர்வாகிகளுடனும், லண்டன் முருகன் கோவில் கணேச குருக்கள் அவர்களுடனும் பதிப்பாசிரியர்



அருள்மிகு கோமதி அம்மாள் ஸ்ரீ சங்கரலிங்க சுவாமி திருக்கோவில் கும்பாபிஷேகத்தில் திருவாவடுதுறை ஆதீனம் அவர்கள் கலந்து கொண்ட காட்சி

மனிதன் ஏன் பிறந்தான் என்று சொன்னால் கும்பாபிஷேகத்தை கண்டுகளிக்கதான் என்று ஒரு பதில் உள்ளது. கடந்த நான்கு வருடமாக பிள்ளையார்பட்டி கும்பாபிஷேகம், பழனி கும்பாபிஷேகம், கபாலீஸ்வரர்கோவில் கும்பாபிஷேகம், மதுரை மீனாட்சி கும்பாபிஷேகம் இவைகளுக்கெல்லாம் வி.ஐ.பி அந்தஸ்து எனக்கு கிடைத்தது. லண்டன் முருகன் கோவில் கும்பாபிஷேகத்தில் கலந்து கொண்டாலும் அப்படி ஒரு அந்தஸ்து கிடைக்கவில்லை. ஆகவே கடவுள் எதை எதை யாருக்கு கொடுக்க நினைக்கிறாரோ அதை கொடுத்தே தீருவார். நாங்கள் நினைத்து இவைகள் கிடைக்க முடியாது. அண்மையில் அம்பாசமுத்திரம் கோமதி அம்பாள், சங்கரலிங்க சுவாமி கோவில் கும்பாபிஷேகம் நடைப்பெற்றது. இதை ஆரம்பித்து வைத்தவர் பிள்ளையார்பட்டி பிச்சை குருக்கள் அவர்கள். எனக்கும் எதேச்சையாக ஒரு அழைப்பு கிடைத்தது. அங்கு சென்றபோது கும்பாபிஷேகத்தை காண ஆலய தலைவர் எல்லா வசதிகளையும் செய்து கொடுத்தார். நான் ஏன் இதையெல்லாம் எழுதுகிறேன் என்றால் இவையெல்லாம் கடவுளின் கொடுப்பனவுகளே. ஆகவே வயதான பிறகு கோவிலை தேடி ஓடுவதை விடுத்து சிறு வயதிலிருந்தே கடவுளைத் தேடுங்கள்.

ஆன்மீக அனுபவம் தொடரும்


மார்ச் 6
சிவராத்திரிக்கு
விசேட சுற்றுலா
5 நாட்கள்
£ 700

Chennai
ARS Tours
சுற்றுலா துறையில்
40 வருட அனுபவம்

London
Euro Travel & Tours Ltd
சிறந்த வாகன வசதியும் சிறந்த தங்குமிடமும் ஏற்பாடு செய்து கொடுக்கப்படும்

111-B Loampit Vale Lewisham London SE13 7TG
Tel : 020 8465 9666 Fax : 020 8465 9888



தமிழில் தொடர்பு கொள்ள
தி. அருள்தாஸ்

லண்டனில் தரமான தங்கத்துக்கு தாரணி ஜுவல்லர்ஸ் - வெம்பிளி

## Tooting-ல் தமிழருக்கான கடை

# Prime Food & Wine

118, Tooting High Street
London SW 17 ORR
Tel : 020 8682 3777

நம்மவரின் வசதிக்கேற்ப
எமது கடையை விஸ்தரித்துள்ளோம்.
உங்களுக்கு வேண்டிய சகல தெரிவுகளும்
எங்கள் புதிய காட்சியறையில் உள்ளன.

எங்கள் மலிவு விலை விற்பனை
சித்திரை
புது வருடப்பிறப்பு
வரை
நீடிக்கப்பட்டுள்ளது.




எங்கள் விளம்பர உறுதுணையாளர்களை ஆதரியுங்கள்

ஆயிரங்காலத்துப் பயிருக்கு ஆண்டாண்டு பாரம்பரியம் உள்ள தங்க நகைகள்

Aarthy Jewellers

294 High Street North
Eastham London E12 6SA
Tel : 020 8552 1080



எவரஸ்ட்
Curry King
24 Loampit Hall Lewisham SE13 7SW
Tel : 020 8691 2233

Breakfast
Lunch Dinner

அசத்தலான
அசைவ
சுவைக்கு



லண்டனில்
பொற்கை
வண்ணர்களின்
நிர்வாகத்தில்
இயங்கும்
ஒரே நகை மாடம்

MIERRA
Jewellery Mart
Gems & Jewellery
34 London Road Tooting London SW 17 9HP
Tel : 020 8648 7750 Mobile : 07958948685
www.meera_jewellery.com



புதிய நிர்வாகத்தின் கீழ்
Maharasie Jewellers
122 Loampit Vale Lewisham
London SE13 7SN Tel : 020 8691 8888



Video Audio
14 Lompait Hill Lewisham
London SE13

Tamil, Malayalam, Hindi,
Telugu Films, Tele Drama
Devotional Carnatic
Classical Cd's Tamil Magazines,
News Papers, Phone Cards

தென் கிழக்கு லண்டனில்
PARTY WORLD U.K
THE BEST DECORATORS
IN STORE

20, Loampit Hill, Lewisham, London SE13 7SW
Tel : 0208 6949404 Mob : 07961843035
Fax : 0208 6949272
Email : sales@babaspartyworld.com
Web : www.babaspartyworld.com

இலண்டனில் தரமான தங்கத்திற்கு
PATHMINI Jewellers
892 London Road Thornton Heath Surrey CR7 7PB
Tel : 020 8665 1111 Fax : 020 8664 8999



தொடர்ந்து 25 வருட காலம்
லண்டன் தமிழர்களுடன்
லீலா

1981 தொடக்கம் இன்று வரைக்கும்
ஐரோப்பா கண்டத்தில்
தொடர்ந்து உன்னத உற்பத்தியில்
லீலா தயாரிப்புகள்

ஈழ மக்களின் ரசனைக்கேற்ற
சகல உணவுப் பொருட்களுக்கும்

Leela Exports & Imports
Srilanka
Gold Award Winner N.C.E
லண்டன் விற்பனையாளர்கள்
குமரன் ஸ்டோர்ஸ்
142 - 144 Hoe Street
Walthamstow, London E17 4QR
07739 25 22 23, 07801 86 50 31, 020 8530 303

எங்கள் விளம்பர உறுதுணையாளர்களை ஆதரியுங்கள்

Tooting வைரமாலிகை வாடிக்கையாளர்கள்
Mithus Jewellery-க்கு வருமாறு
கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்

## Mithus Jewellery

322-324 London Road
Croydon CRO 2TJ
Tel : 020 8683 1756 Fax : 020 8683 1792





## BA Transfer

British Airport Transfer

நீங்கள் விமான நிலையத்திலிருந்து
எந்த இடத்திற்கும் செல்ல...
எங்கிருந்து வேண்டுமானாலும்
விமான நிலையத்திற்கு வர...

தயக்கமின்றி தொடர்பு கொள்ளுங்கள்

020 8902 0123



வெம்பிளியில் இன உணர்வான
மளிகை கடை

## Malar Supermarket

543- High Road, Wembley
Middlesex, Hao 2 DJ
Tel : 020 8795 5797

உங்கள்
சகல தேவைகளையும்
பூர்த்தி செய்கிறது

24 மணி நேர சேவையில்
ஒரு மளிகை கடை

மலர்
சூப்பர் மார்க்கெட்

## BEST FOOD

Supermarket

11-13 Ealing Road
Wembley
Middlesex HAO 4AA

364 - 366, Bath Road
Hounslow Middlesex TW4 7HT
Tel : 020 8577 6002
Fax : 020 8570 2323

259 - 261, London Road
West Croydon Surrey CRO 2RL
Tel : 020 8684 6269
Fax : 684 4677

249 Northolt Road
Harrow
Middlesex HA2 8HR
Tel : 020 8423 993[illegible]



ரமணிச்சந்திரனின் புத்தகங்கள்
£2க்கு
விற்பனையாகிறது
எங்கள் கிளைகளில்
பெற்றுக்கொள்ளவும்

புதிய பொலிவுடன் லூசியத்தில்

## கற்பகம்

ஞாயிறுதோறும் உடன்பங்கு ஆட்டிறைச்சி உட்பட
சகலவிதமான மரக்கறி வகைகள்,
பழவகைகள் உட்பட சகல தேவைகளுக்கும்
நாடவேண்டிய ஒரே இடம்



## KATPAGAM

36, Loampit Hil[illegible]
Lewisham
London SE 13 7SW
Tel / Fax : 020 8694 8810

துரித பண
ரஞ்சன்
இலண்டன்
36, Loampit Hill Lewisham
London SE 13 7SW

உங்கள் சகல வியாபார
தொடர்புகளுக்கும்
எங்களை அழையுங்கள்

## Vaani

Cash & Carry

பிரமாண்டமாய் !
பிரமாண்டமாய் !

தயாரிப்பாளரிடம் இருந்து
நேரடியாக வாடிக்கையாளருக்கு

தொலைபேசி இலக்கம்
0208 668 7648